பக்கங்கள்:இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 18 சனிக்கிழமை (02.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 037

# பொன்சேகா தமது உத்தேச திட்டத்தை இன்று யாழ்.நகரில் அறிவிப்பார்

## அவசரகாலச் சட்டம் நீக்கம், கைதிகள் விடுவிப்பு, ஆயுதக் குழுக்கள் கலைப்பு என்பனவும் அடங்கும்

யாழ்ப்பாணம், ஜனவரி 2

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகா, தாம் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில், உடனடியாக அவசரகால ஒழுங்கு விதிகளை நீக்கி, உரிய சாட்சியங்கள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிப்பது குறித்த தனது திட்டத்தை இன்று யாழ்ப்பாணத்தில் அறிவிக்கவுள்ளார் என அறியவருகின்றது.

மேலும் ஆயுதக் குழுக்கள் அனைத்தையும் கலைத்து அவற்றிடமிருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்வது குறித்தும் அவர் இன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் வைத்து அறிவிப்பார் எனத் தெரியவந்தது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற் போனோரின் உறவினர்கள் இன்று மனோ கணேசனுடன் சந்திப்பு

### யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஜன.02

காணாமற் போனோரின் உறவினர்களை ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் இன்று சந்தித்துக் கலந்துரையாடவிருக்கிறார்.

யாழ்ப்பாணம் வரும் அவர் குடா நாட்டில் காணாமற்போனோரின் உறவினர்களை இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் சந்தித்துக் கலந்துரையாடுவார். (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் அமைச்சர்களாக மாறவேண்டும்

### ஜனாதிபதியின் ஆசை இதுவாம்

கொழும்பு, ஜன. 2

எதிர்காலத்தில் அமையவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் அமைச்சர்களாக மாறவேண்டும். அதற்கேற்ற வகையில் செயற்பட அரசு தயாராகவுள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த புதனன்று இரவு தமிழ்த் தேசியக்

(20ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்சினைக்கு பிரிக்கப்படாத இலங்கைக்குள் சகல இனத்தவரும் ஏற்கும் அதிகாரப் பகிர்வுத் தீர்வு

## ஐ.தே. முன்னணியின் திட்டத்தை வெளிப்படுத்துகின்றார் ரணில்



கொழும்பு, ஜன. 2

தமிழ் பேசும் மக்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்குப் பிரிக்கப்படாத இலங்கைக்குள் சகல இனத்தவரும் ஏற்கக்கூடிய அதிகாரப் பகிர்வு முறைமை ஒன்றை ஏற்படுத்துவதே தமது திட்டம் என ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

இவ்விடயம் தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதுடன் ஆயுதப் போராட்டமும் முடிவுக்கு வந்தது. எமது நாட்டில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்காமல் இருப்பதை உறுதிசெய்வதாயின் தமிழ் பேசும் மக்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்குப் பின்வரும் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட நிரந்தரத் தீர்வுத்திட்டம் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

அ) சகல இனத்தவர்களுக்கும் பாதுகாப்புடன் வாழக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டு, மனிதப் பெறுமானங்களை மதிக்கின்ற இலங்கையர் என்ற தனித்துவத்தை ஊக்குவித்தல்.

ஆ) சகல இனத்தவர்களினதும் கலாசார புனிதத் தன்மையைப் பேணிப்பாதுகாத்தலும் மதத்தைப் பின்பற்றுதல், மொழி

(19ஆம் பக்கம் பார்க்க)

ஆட்சிமாற்றத்துக்கு வழிகாண்போம்





எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க,
ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன்,
டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன ஆகியோர் பொதுவேட்பாளர்
சரத் பொன்சேகாவுடன் யாழ். மாவட்ட மக்களை
இன்று 02.01.2010 சனிக்கிழமை யாழ் வீரசிங்கம்
மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்குச் சந்திக்கவுள்ளனர்

அனைவரும் வருக! ஆட்சிமாற்றம் காண்க!

அறிமுகப்படுத்துகிறோம்
யாழ் நகரிலும், கொழும்பிலும்
ஒரே சுவை, ஒரே தரம், ஒரே விலை

Cosy Hotel & Restaurant
Open 06.00am to 11.00pm

விசேட வடஇந்திய காலை உணவு
பூரி, சப்பாத்தி, பரோட்டா, நாண், சைவ, அசைவ கறிவகைகளும் மற்றும்

கொசி உணவகம் Feel like home

இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. HOTLINE: 0112504020
இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். HOTLINE: 021-2225899

Indian, Chinese, Panjabi & Jaffna Foods

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழர்கள் தேர்தலில் பங்குபற்றும் மனநிலை இல்லை; எனினும் வாக்களிக்கவேண்டிய கட்டாயம் உண்டு

## ஜனாதிபதி வேட்பாளர் விக்கிரமபாகு கருணாரத்ன கூறுகிறார்




யாழ்ப்பாணம்,ஜன.02

கடந்தகால யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் முழுமையாக இன்னும் மீள்குடியமர்த்தப்படவும் இல்லை. மீள்குடியமர்த்தப்பட்டவர்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்கள் எவையும் நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை.

இந்த நிலைமையில், தேர்தலில் வாக்களிக்கும் மன நிலையில் தமிழ் மக்கள் இல்லை. எனினும் நிலைமையை உணர்ந்து செயற்பட வேண்டிய கட்டாயத்துக்குள் அந்த மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் இடதுசாரி பொது வேட்பாளரான கலாநிதி. விக்கிரமபாகு கருணாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த விக்கிரமபாகு கருணாரத்ன பஸ்ரியன் ஹோட்டலில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இப்படிக் கூறினார். -

அவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதித் தேர்தலுக்கான தகுந்த சூழ்நிலை தற்போது இல்லை. தமிழ் மக்கள் அகதிகளாக முட்கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் பூர்த்தியாகாமல் இருக்கின்றன.

நாம் அனைவரும் ஒன்றைச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல முற்போக்கு சக்திகளுக்குக் கிடைத்த தோல்வியாகவே நோக்கப்பட வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட செய்திகேட்டு தென்னிலங்கையில் பலர் வீதியில் இறங்கிக் கொண்டாடி னார்கள். ஆனால் சமூக அக்கறையுடைய சிலர் எதிர்காலத்தில் இந்த நிலைமையால் எமது நாட்டில் பாசிஸ ஆட்சி உருவாகும் என்பதை அறிந்திருந்தார்கள். அதனை நாம் இப்போது உணரமுடிகிறது.

**சிங்கள பௌத்த தேசமாக மாற்றுவதற்கு ஒப்பானது**

எனவே தான் இம்முறை - இந்தத் தேர்தலில் நாம் சிந்தித்துச் செயலாற்ற வேண்டி உள்ளது. தேர்தலில் பங்குபற்றாமல் ஒதுங்கியிருப்பதானது இந்த நாட்டைச் சிங்கள பௌத்த தேசமாக மாற்றுவதற்கு ஒப்பானது.

எனவே நிச்சயமாகத் தமிழ், முஸ்லிம் மக்கள் தேர்தலைப் புறக்கணித்து ஒதுங்கியிருக்க முடியாது. தேர்தலில் பங்குபற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்தை அழித்து, பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகளைக் கொன்று தமது வெற்றியை மஹிந்த ராஜபக்ஷவும், சரத் பொன்சேகாவும் கொண்டாடினார்கள்.

தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற ஏகாதிபத்திய நாடுகளின் ஒத்துழைப்பு முழுமையாகக் கிடைத்திருந்தது. இதனை மஹிந்தாவே ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்தார்.

மஹிந்தா, பொன்சேகா இருவரும் ஒருவர் மீது மற்றொருவர் கூறிவரும் வசைமாரிகள் மூலம் உண்மைகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

இந்த நாட்டின் இராணுவத் தளபதியை அமெரிக்கா தமது நாட்டுக்கு அழைத்து ஜனநாயகவாதியாக மாற்றி தேர்தலில் போட்டியிட வழிசெய்துள்ளது. இராணுவ உடையை அகற்றி வெள்ளை உடையுடன் தமிழ் மக்களிடம் வாக்கு கேட்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

சரத்பொன்சேகா முதலாளித்துவத்தின் பிரதிநிதியாக இருக்கிறார். இவர் மூலமாக இடதுசாரி முற்போக்குச் சிந்தனைகள் சிதறடிக்கப்படும் நிலைமை உள்ளது.

**இரு வேட்பாளர்களும் கொலையாளிகளே!**

தமிழ், முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை இந்த இரண்டு வேட்பாளர்களும் கொலையாளிகளே. நாகபாம்பு, விரியன் பாம்பு இந்த இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டையே தமிழ் மக்கள் இனங்காண முயல்கின்றனர். இந்த இருவரும் சிறுபான்மை மக்களுக்கு எதிராக எப்பொழுதுமே செயற்படுபவர்கள்.

எனவே தமிழ், முஸ்லிம் மக்கள் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டியுள்ளனர். சிறுபான்மை மக்களின் அடக்கு முறைக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களை, செயற்படுபவர்களைத் தெரிவு செய்ய முன்வாருங்கள். முற்போக்குச் சிந்தனையுடைய எம்மை ஆதரிப்பதன் மூலம் சர்வதேச சமூகத்துக்குத் தமிழ் மக்களால் தெளிவான ஒரு செய்தியை வெளிப்படுத்த முடியும் - என்றார்.

ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே சிவாஜிலிங்கம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (மாவோ வாதம்) செயலாளர் சுரேந்திர அஜித் ரூபசிங்க, இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளர் தர்மசிறி லங்காபாலி ஆகியோரும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். (ஒ-111-14)

# புலிகளின் சொத்துகளை முடக்குவதில் ஊடக அறிக்கைகளால் பெரும் சிக்கல்

## வெளிவிவகார அமைச்சர் றோஹித சொல்கிறார்

சில ஊடகங்களில் வெளியிடப்படும் அறிக்கைகளின் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச சொத்துக்களை முடக்குவதில் சிக்கல் நிலைமை உருவாகியுள்ளது - என்று வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான சில விமானங்கள் வெளிநாடுகளில் காணப்படுகின்றன என வெளியான செய்தி காரணமாக அரசின் முயற்சிகளுக்குத் தடை ஏற்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு -

அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் சொத்துக்கள் முடக்கப்படும் வரையில் எதிர்க்கட்சி பொறுமை காக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியானதன் பின்னர் சகல தகவல்களும் எதிர்க்கட்சியுடன் பகிர்ந்து கொள்ளப்படும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு வலுவான ஓர் சர்வதேச வலையமைப்பைக் கொண்டிருக்கிறது. எனவே, இரகசியமான முறையில் விடுதலைப்புலிகளின் சொத்துக்களை முடக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அவற்றைப் பகிரங்கப்படுத்துதன் மூலம் சரியான முறையில் சொத்துக்களை முடக்க முடியாது.

விடுதலைப் புலிகளின் சர்வதேச செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களின் முன்கூட்டிய பிரசாரம் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக அமைந்துவிடும் - என்றார் அமைச்சர்.

# காரைநகரில் சரத் பொன்சேகா இன்று உரையாற்றுகின்றார்

காரைநகர், ஜன.02.

ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி சார்பில் பொதுவேட்பாளராகப் போட்டியிடும் சரத்பொன்சேகாவின் வடக்கில் முதலாவது பொதுக் கூட்டம் இன்று முற்பகல் 11 மணிக்குக் காரைநகரில் இடம்பெறவுள்ளது.

காரைநகர் மணற்காடு முத்துமாரியம்மன் கோயிலுக்கு முன்பாக இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்து நேற்றிரவு காரைநகர் பிரதேசத்தில் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப் பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் 'கட் அவுட்' கட்டப்பட்ட வாகனத்திலேயே இந்த ஒலிபரப்பு செய்யப்பட்டது. (ஒ-01-250)

**[illegible] சனசமூக நிலைய கட்டட நிதிக்கான அதிஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்**

| | | |
|---|---|---|
| 1ஆம் பரிசு இல | 870 - | சர்மிசன் - தும்பளை, |
| 2ஆம் பரிசு " | 1871 - | சுலோஸ் - தும்பளை, |
| 3ஆம் பரிசு " | 759 - | M.Sayanika பருத்தித்துறை, |
| ஆறுதல் பரிசு " | 1372 - | தவச்செல்வம் - புலோலி, |
| " | 1648 - | ஜெயராட்ணம் - ஆத்தியடி, |
| " | 936 - | பெ.பவானி - வதிரி |

**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**

புறொயிலர், கல்பேட்ஸ் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். (சுத்தம் செய்தல் இலவசம்)

A.S.S பாம், றோட்டர் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்.

**ஜெய்ராம் களஞ்சியம்**

மொத்த விற்பனை நிலையம்

சில்லறை வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி

தரமான அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை, அலுவலக உபகரணங்கள் மற்றும் அச்சக காகிதாதிகள்

விசேட கழிவு விலையில்

2 கட்டு - 11/= 4 கட்டு - 22/= 6 கட்டு - 36/=

3 கட்டு - 16.50/= 5 கட்டு - 27.50/= 3 கட்டு C.R 37.50/=

92, K.K.S வீதி. யாழ்ப்பாணம்.
யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் முன்பாக

# தென்மராட்சி கிழக்குக்குத் தனியான பிரதேச செயலகம் வேண்டும்

## அமைச்சர் டக்ளஸிடம் மகஜர் கையளிப்பு

தென்மராட்சி கிழக்கு, ஜன.02

தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியம் தனது திட்ட முன்மொழிவு அம்சமான தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்துக்குத் தனியொரு பிரதேச செயலகம் அமைக்கும் கோரிக்கை அடங்கிய மகஜர் கடந்தவாரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஒன்றியத்தின் தலைவர் த. கந்தையா, செயலாளர் செ. நவரத்தினசாமி உட்பட 10 பேர் அடங்கிய குழுவினர் அமைச்சரைச் சந்தித்து இந்த மகஜரைச் சமர்ப்பித்தனர். அந்த மகஜரைப் பெற்றுக்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரைச் சந்தித்து ஆவன செய்வதாகத் தம்மைச் சந்தித்த குழுவினரிடம் உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-122)

### பகுதிநேர ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம்

இலங்கைத் திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திற்கு சட்டத்துறை மற்றும் முகாமைத்துவ கற்கைகள் துறைகளுக்கு பகுதிநேர ஆலோசகராகக் கடமையாற்றுவதற்கு அத்துறைசார் பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் அவற்றுக்குரிய துறைகளில் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகம்ஒன்றில்இளமாணிப் பட்டத்தை முதலாம் தர அல்லது இரண்டாம் தர வகுப்புச் சித்தியுடன் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிவரக் கோவையை எதிர்வரும் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் நேரில் அல்லது பதிவுத்தபால் மூலமாக யாழ். பிராந்திய நிலையத்துக்கு அனுப்பி வைக் [illegible] கேட்டுள்ளார். (07)

## மரண அறிவித்தல்

**கலாபூஷணம் சைவப்பெரியார் சின்னப்பு அரசஇரத்தினம் (ஜே.பி)**

(மானிப்பாய் இந்துக் கல்லூரி கனிஷ்ட பிரிவு மற்றும் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை ஆகியவற்றின் முன்னாள் அதிபர், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஸ்தாபக உறுப்பினர், உடுவில் கிராமோதய சபையின் தவிசாளர், சங்குவேலி கிராம அபிவிருத்திச் சங்கம், சுன்னாகம் ப.நோ.கூ.சங்க கிளை இல 6 என்பவற்றின் உறுப்பினர், சங்குவேலி வெட்டுக்கட்டை சித்திவிநாயகர் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் மற்றும் சங்காபிஷேகம் ஆகியவற்றின் உபயகாரர், மேற்படி ஆலய தர்மகர்த்தா)



சங்குவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு அரசஇரத்தினம் (ஜே.பி) தனது 87 ஆவது வயதில் ஆயிரம் பிறைகண்டு 31.12.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சின்னப்பு - பொன்னம்மா தம்பதியினரின் மகனும் கொக்குவில் உடையார் ஒழுங்கை காலஞ்சென்ற சின்னத்தம்பி செல்லையா - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் (சித்திரம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சி.துரைராசா (பெற்றாலிங் ஜயா), சி.சின்னத்துரை (மலேசியா), சி.மங்களேஸ்வரி (மங்களம் - மலேசியா), சி.சிங் கராசா (மலேசியா), சி.சின்னம்மா (சென்னை), சி.கந்தசாமி, R.P.M குருநாகல் ஆகியோரின் ஆசைச் சகோதரனும் அ.அரசகுலசேகரன் (பிறேம், B.A. ஆசிரியர், சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), திருமதி கெ.இந்திராணி ஆகியோரின் அருமைத் தந்தையும் ந.கெங்காசுதன் (இ.போ.ச. - யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற மந்துவில் இ.மோகனமுகுந்தன், கொக்குவில் கிழக்கு மகேஸ்வரன் - திலகவதியம்மாவின் மகள் நளாயினி ஆகியோரின் அருமை மாமனும் காலஞ்சென்ற மோ.தாரணி (உடுவில் மகளிர் கல்லூரி பழைய மாணவியும் மின்னியல் தொழில்நுட்பவியல் டிப்ளோமா பட்டதாரியும்) மற்றும் கெ.தேமதுரா (உடுவில் மகளிர் கல்லூரி); அ.மோகனமுரளி, அ.ஆர்த்திகாயினி ஆகியோரின் நேசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்குவேலியில் அவரது இல்லத்தில் நாளை (03.01.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று சங்குவேலி சங்கம்புலவு இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்
021 373 7840,
077 9672742

தகவல்: அ.அரசகுலசேகரன் மகன்
(ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்த கோரும் யாழ்.பல்கலை. மாணவர்கள்

தீர்க்கம் மிக்கதொரு திருப்புமுனைக் கட்டத்திலே இலங்கைத் தமிழர்கள் இருக்கின்றார்கள். இந்த இக்கட்டான சமயத்திலே எவ்வளவு பொறுப்புணர்வுடனும், புத்தி சாதுரியத்துடனும், தீர்க்கதரிசனத்துடனும், தந்திரோபாயத்துடனும் தமிழர் தரப்பு செயற்பட வேண்டும் என்பதைக் காலநேரம் அறிந்து சுட்டிக்காட்டியிருக்கின்றது யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

அந்த அமைப்பு இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களை வழிப்படுத்துமாற் போல வெளியிட்ட அறிக்கை யாழ். குடாநாட்டில் மாத்திரமல்லாமல், தென்னிலங்கை சிங்களத் தரப்புகளாலும் சிலாகித்துப் பேசப்படும் அளவுக்கு வரவேற்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பொறுப்புணர்வோடு தமது கருத்து நிலைப்பாட்டை மாணவர் ஒன்றியம் இச்சமயத்தில் வெளியிட்டிருக்கின்றமை மெச்சத்தக்கதே.

பெரும் போரழிவுகளின் முடிவில் உருக்குலைந்து போய்க் கிடக்கும் தமிழினத்துக்குத் தெம்பூட்டி, தைரியப்படுத்தி, நம்பிக்கையை வளர்க்குமாற் போல ஓர் உதாரணத்தை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்வைத்திருக்கின்றமை இங்கு கவனிக்கத்தக்கது.

*''அழிவில் உருக்குலைந்த பல நாடுகள் இன்று உலகிலேயே இராணுவ, பொருளாதார வல்லாதிக்க நாடுகளாக மாறிவிட்டன. அவைகளிடமிருந்து நாம் நிறையக் கற்றுக் கொள்ளவேண்டும். அமெரிக்காவால் உருக்குலைந்த ஜப்பான், அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட்டு இன்று அமெரிக்காவை விட முன்னேறிச் சென்றுவிட்டது. ஆனாலும், இன்றுவரை ஜப்பான் தனது நாட்டின் தனித்துவத்தை இழக்கவில்லை.''* - என்று மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டுகின்றது.

போரின் பேரழிவுகளால் துவண்டு, சின்னாபின்னமாகிச் சிதறி, கந்தலாகிப் போய்க்கிடக்கும் ஈழத் தமிழினத்துக்கு நம்பிக்கையை ஊட்டும் விதத்தில் வரலாற்றிலிருந்து எடுத்துக் காட்டக்கூடிய முன்னுதாரணங்களில் இதைவிடச் சிறப்பாக எதுவும் இருக்கமுடியாது எனலாம்.

அமெரிக்காவின் அணுகுண்டுவீச்சில் சுமார் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான தனது மக்களையும், இரண்டு பெரு நகரங்களையும் சில செக்கன்களில் காவு கொடுத்து, அதன் பேரதிர்வில் அமெரிக்காவிடம் ஒரேயடியாகச் சரணாகதி அடைந்து, இராணுவப் போர்த் தோல்வியில் முற்றாகச் சரிந்துபோகும் கீழ்மைக்கு இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பான் சென்றது.

இன்று தமிழினம் முள்ளிவாய்க்காலிலும், புதுமாத்தளனிலும் சந்தித்த பேரழிவுகளையும், கொடூரங்களையும், கோரங்களையும் விட பல மடங்கு மோசமான கோர அழிவுகளை ஹிரோஷிமா, நாகஸாகி ஆகிய இரு நகரங்களிலும் அன்று ஜப்பான் சந்தித்தது. இன்று தமிழினத்தின் ஆயுதப் போராட்டம் தென்னிலங்கையின் இராட்சத இராணுவ மேலாதிக்கத்திடம் துவண்டு போனமை போல, அன்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இராணுவ மேலாதிக்கத்திடம் மண்டியிட்டுச் சரணடைய வேண்டிய கட்டாயம் ஜப்பானுக்கு நேர்ந்தது.

ஆனால், அந்தப் பின்னடைவுக்காக ஜப்பான் நிரந்தரமாகத் துவண்டு விடவில்லை; அழிந்துவிடவில்லை; தனது தனித்துவத்தைக் கூட ஜப்பான் இழந்துவிடவில்லை.

எதிரியாகித் தம்மை சரணடைய வைத்த அமெரிக்காவுடனேயே இணைந்து செயற்பட்ட ஜப்பான் - அன்று இரண்டாம் உலகப் போரின் முடிவில் உருக்குலைந்து போய்க் கிடந்த ஜப்பான் - இன்று பொருளாதார நிலையிலும் வாழ்க்கைத்தர உயர்விலும் அமெரிக்காவையே விஞ்சி நிற்கின்றது. இவ்வளவையும் அது தனது தனித்துவத்தை இழக்காமலேயே சாதித்துக் காட்டியிருக்கின்றமைதான் தமிழர் இதில் கவனித்துப் படிக்க வேண்டிய பாடமாகும்.

'முயற்சியை நிறுத்தாத வரையில் தோல்வி முடிவானதல்ல' - என்ற உறுதிப்பாட்டை மாணவர் ஒன்றியம் சுட்டியிருப்பதும் தமிழ்ச் சமூகமும், தமிழ் அரசியல் தலைவர்களும் தமது சிந்தையிலும் கவனத்திலும் எடுக்கவேண்டிய - காலத்தின் கட்டாயமான - மற்றைய அம்சமாகும். தமிழர்கள், தளர்ச்சிக்கு மத்தியிலும் விடா முயற்சியிலும் தீவிரமாக இருக்கவேண்டும் என்பதை இது ஆணித்தரமாக மக்களுக்கு உணர்த்துகின்றது.

அதேசமயம், புலம் பெயர் தமிழர்களின் நிலை தொடர்பாக அந்த ஒன்றியம் வெளியிட்ட கருத்துகளும் கவனிக்கத்தக்கவை.

ஒருபுறம், தமிழர் பிரதேச்தின் நடைமுறை யதார்த்தம் புரியாது புலம் பெயர் உறவுகளிடமிருந்து குழப்பகரமான கருத்துக்கள் வருகின்றன என்பதையும், மறுபுறம் தமிழர் பிரதேசத்தின் மீள்கட்டுமானம், பொருளாதார அபிவிருத்தி சார்ந்த முதலீடுகள் என்பன புலம்பெயர்ந்த உறவுகளின் நிதி மூலங்களிலேயே கட்டியெழுப்பப்படவேண்டி உள்ளதோடு, தமிழர்களின் நியாயமான, தனித்துவமான அபிலாஷைகளைப் பெற்றெடுக்க அவர்களின் குரல் இன்றியமையாதது என்பதையும் ஒன்றியம் உணர்த்தியிருப்பதும், உணர்ந்திருப்பதும் நல்ல அம்சங்களாகும். இதற்காக, புலம்பெயர் உறவுகளின் கருத்துக்களை சீரிய வகையில் செப்பனிட உதவ வேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

அதேவேளை, வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொண்டு தமிழர்கள் தங்கள் உரிமைகளைப் பெற்றெடுக்கும் வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் செயற்பட வேண்டும் என்ற ஆலோசனையையும் ஒன்றியம் முன்வைத்திருக்கின்றது. தமிழ் மக்கள் இதைச் செவிமடுப்பது மிக முக்கியமாகும்.

# பாடசாலைகளில் டெங்குநோய் பரவும் அபாயம்; தடுப்பு நடவடிக்கைகளில் உடன் ஈடுபடுக!

### சுகாதாரசேவைப் பிராந்தியப் பணிப்பாளர் கேதீஸ்வரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.2

பாடசாலைகள் திறக்கப்பட்டதும், மாணவர்களிடையே டெங்குநோய் தீவிரமாகப் பரவும் அபாயமுள்ளதால் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளில் பாடசாலைகள் ஈடுபட வேண்டும் எனச் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிக்கை ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் தற்போது டெங் குக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது. டிசெம்பர் மாதத்தில் 300இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், 5 இறப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

ஜனவரி 4ஆம் திகதி பாடசாலைகள் கல்வி நடவடிக்கைகளுக்காகத் திறக்கப்பட்டதும், பாடசாலை மாணவர்கள் ஊடாக இந்நோய் வேகமாகப் பரவ வாய்ப்புள்ளது. ஒரு மாணவன் டெங்குக் காய்ச்சலுடன் பாடசாலைக்கு வந்து பாடசாலை வளாகத்தில் டெங்கு நுளம்புகள் காணப்பட்டால் ஒரே நாளில் பல மாணவர்களுக்கு பரவலாம். இதனால் மாணவர்கள் பெருமளவில் இந்நோயின் தாக்கத்திற்கு உள்ளாகலாம்.

எனவே ஒவ்வொரு பாடசாலையிலும் டெங்குநோய் உற்பத்தியாகக் கூடிய இடங்கள் அழிக்கப்பட வேண்டும். இதற்கெனப் பாடசாலை மாணவர்களின் உதவியுடன் சிரமதானம் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இதற்காக பின்வரும் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு வேண்டுகின்றேன்.

* ஒவ்வொரு பாடசாலையிலும் காலை ஒன்றுகூடலில் அல்லது விசேட் ஒன்றுகூடலில் டெங்கு நோய் பற்றி மாணவர்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் விழிப்புணர்வுக் கருத்துரை வழங்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.
* ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்களின் உதவியுடன் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக்கூடிய இடங்களை அழித்துப் பாடசாலைச் சுற்றாடலைச் சுத்திகரிக்கும் சிரமதானப் பணி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இதற்கான ஆலோசனைகளை அப்பகுதிக்குரிய சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வழங்குவர்.
* டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டதாக சந்தேகிக்கப்படும் மாணவர்கள் 3-5 நாள்கள் காய்ச்சல் குணமாகும் வரை பாடசாலைக்குச் செல்வதை தவிர்த்து வீட்டில் ஓய்வெடுக்க வேண்டும்.

எனவே ஒவ்வொரு பாடசாலை அதிபரும் டெங்கு நோய் கட்டுப்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# வலி.மேற்குப் பிரதேச அபிவிருத்திக்கு பல்வேறு திட்டங்கள் முன்னெடுப்பு

### பிரதேசசபைச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.2

கடந்த 30 வருடகாலப் போர் ஓய்விற்குப் பின்னர் பிரதேச வளர்ச்சி-அபிவிருத்தி கருதியும்-

வடக்கின் வசந்தம்-மஹிந்த சிந்தனைக் கோட்பாடுகளுக்கு இணங்கவும் முன்னேற்றகரமான திட்டங்களை வலி.மேற்குப் பிரதேச சபை முன்னெடுத்து வருகின்றது.

வலி.மேற்குப் பிரதேச சபையின் 2010 வரவு செலவுத்திட்டச் செய்திக்குறிப்பில் பிரதேச சபையின் செயலாளர் சு.புத்திசிகாமணி குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வலி.மேற்கு 25 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பரந்த பிரதேசம் ஆகும்.

இப்பிரதேசத்தின் பின்தங்கிய நிலையினை ஏற்கனவே நாம் தயாரித்துள்ள 3.ஆண்டு, 5 ஆண்டுத் திட்டங்களின் ஊடாக அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2010இல் உள்ளூர் சேவை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 'நெல்சிப்' செயற்திட்டத்தின் ஊடாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே அதன் முதற்கட்டமாக 2010ஆம்ஆண்டுக்கானவரவுசெலவுத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

அபிவிருத்தியின்பால் ஈடுபடும் வலி.மேற்கு மக்கள் இதனைப் பார்வையிட்டுக் கருத்துக்கள் ஏதும் முன்வைக்க விரும்பினால் எதிர்வரும் பத்துநாள்களுக்குள் முன்வைக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (04-302)

# நெடுந்தீவு மக்களின் பாதுகாப்புக்கு மட்டுமல்லாது உதவிகளை வழங்குவதிலும் கடற்படை உறுதுணையாயிருக்கும்

### நெடுந்தீவுக் கடற்படை அதிகாரி

நல்லூர்,ஜன.2

இங்குள்ள மக்களின் பாதுகாப் புக்கு எவ்வாறு கடற்படை உறுதுணை யாக இருக்கின்றதோ அதே போன்று நெடுந்தீவு மக்களின் நாளாந்த வாழ்க்கை முன்னேற்றத்துக்கு தேவையான உதவிகளையும் அது வழங்கும் என நெடுந்தீவு கடற்படை அதிகாரி லெப்டினன்ட் கொமாண்டர் ஜெயசிங்க கூறினார்.

நெடுந்தீவு மக்களின் தேவைகள், பிரச்சினைகள் தொடர்பாக நெடுந்தீவுக் கடற்படை அதிகாரி ஜெயசிங்க நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பொதுமக்களைச் சந்தித்து உரை யாடினார். நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதனும் கலந்து கொண்டார்.

இதன்போது கடற்படை அதிகாரி ஜெயசிங்க பேசும்போது கூறியவை வருமாறு:-

மீனவர்களைப் பொறுத்தவரை அவர்கள் சுதந்திரமாகத் தமது தொழி லைச் செய்யக்கூடியதான நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் சில மாதங்களில் 24 மைல்கள் தூரம் வரை சென்று அவர்கள் தமது தொழிலை மேற்கொள்ள வசதிகள் கிடைக்கவுள்ளன. உங்கள் தொழி லில் நீங்கள் கூடுதல் கவனம் செலுத்தி வருமானத்தை அதிகரிக்க உங்களுக்கு வழங்கப்பட்ட வசதிகளை நல்லமுறையில் நடைமுறைப்படுத்துவீர்கள் என நம்புகிறேன். கொடிய யுத்தத்தினால் ஏற்பட்ட கஷ்டத்தில் இருந்து இன்று விடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும் உங்கள் தொழில் நடவடிக்கைகளில் அக்கறை செலுத்தி வளமுடன் வாழ வேண்டும்.

எந்த வேளையிலும் உங்கள் பிரச்சினைகளையிட்டு எம்மை அணுகும் பட்சத்தில் உதவிகள் வழங்கப்படும். புதிய ஆண்டில் மகிழ்ச்சியும் சந்தோசமும் மிக்கவர்களர்க நீங்கள் வாழ வேண்டும்-என்றார்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என். திருலிங்கநாதன் பேசும் போது, ஒவ்வொருவரும் இயல்பு வாழ்வுக்குத் திரும்பக் கூடியதாக மக்களின் தேவைகள் குறித்து தெரிந்து கொண்டு அவற்றை நிறைவேற்றி வைக்க வேண் டும் என்பதே அதி காரிகளின் விருப்பம். இங்கு நீங்கள் குறிப்பிடும் பிரச்சினை களில் தீர்வுகாணக்கூடிய சூழலை உருவாக்குவதில் மக்களின் பங்களிப்பும் இருக்கிறது. போக்குவரத்துப் பிரச்சினை கள் பற்றி இங்கு கூறப்பட்டது. படகு களை உரிய முறையில் சேவைக்கு விடக்கூடியதாக தாம் எவ்வாறு ஒத்துழைக்க முடியும் என்று மக்கள் தீர்மானிக்க வேண்டும். பொதுமக்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் பட்சத்தில் இங்கு முக்கியமான பிரச்சினைகள் சிலவற்றைத் தீர்க்கக் கூடியதாக இருக்கும். -என்றார். (04-111)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 19 | 03.01.2010 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | திருதியை |
| | மு.இ.07.12 வரை |
| நட்சத்திரம்: | ஆயிலியம் |
| | பி.இ 03.39 வரை |
| சுபநேரம்: | 09.30-11.00 வரை |
| ராகுகாலம்: | 05.00-06.30 வரை |

# கொழும்புக்கு வருவோரைப் பொலிஸில் பதியக் கோரும் பணிப்பு முற்றாக நீக்கம்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மீண்டும் ஊர்ஜிதம்

கொழும்பு, ஜன. 02

அவசர அலுவல்களின் நிமித்தம் கொழும்புக்கு வருபவர்கள் பொலிஸ் நிலையங்களில் பதிவுசெய்துகொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாடு முற்றாக நீக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பில் சகல பொலிஸ் நிலையங்களும் மீண்டும் அறிவுறுத்தல்களை அனுப்புவதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான நிமல்மெதிவக்க தெரிவித்தார் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.பதிவு நீக்கம் முறைமை தொடர்பில் ஏற்கனவே பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறிய பிரதிப் பொலிஸ் மா அதிபர், ஒருமாதம் வரையிலான, குறுகிய காலம் கொழும்பில் தங்கியிருப்பதற்குப் பொலிஸில் பதிய வேண்டுமென்ற நடைமுறை நீக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் [illegible]களுக்கு அமைய, அவரின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

முன்பு , மலையக இளைஞர், யுவதிகள் கொழும்புக்கு வருவதற்குப் பொலிஸ் பதிவு நீக்கப்படவேண்டுமென மலை யகக் கட்சிகள் பஸில் ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன. அதன் பின்னர் அவசர அலுவல்கள் காரணமாகவோ, உறவினர், நண்பர்களைப் பார்ப்பதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ கொழும்பில் வந்து தங்குபவர்கள் பொலிஸில் பதிய வேண் டிய அவசியம் இல்லையென அரசு அறிவித்துள்ளது.

ஆனால், சில பொலிஸ் நிலையங்களில் இது குறித்து அறிவித்தல்கள் கிடைக்கப்பெறவில்லை எனக் கூறி பொலிஸ் பதிவு கோரப்பட்டதாகத் தகவல்கள் பத்திரிகைகளில் வெளியாகின. எனினும், இவை உண்மைக்குப் புறம்பான தகவல்கள் எனப் பொலிஸ் மா அதிபர் மெதிவக்க தெரிவித்தார்.

-இப்படி ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகா தமது உத்தேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகா இங்கு வைத்து இந்த அறிவிப்புகளை விடுப்பார் எனத் தெரிகின்றது.

சரத் பொன்சேகாவுடன் இன்று யாழ்ப்பாணம் வரும் எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா ஆகியோர் மதத் தலைவர்கள், அரச சார்பற்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுடன் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கான தமது விஜயத்தை இன்று காலை 9 மணிக்கு நல்லூர் விஜயத்துடன் எதிர்க்கட்சி வேட்பாளர் சரத் பொன்சேகா ஆரம்பிக்கவுள்ளார்.

பின்னர் காலை 10.00 மணிக்கு யாழ். ஆயரைச் சந்திக்கவுள்ள அவர்கள் அதன் பின்னர் யாழ். அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளனர்.

பிற்பகல் 2.00 மணிக்கு மானிப்பாய் வீதியில் உள்ள எதிர்க்கட்சிகளின் அலுவலகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் இவர்கள் கலந்துகொள்வர்.

பின்னர் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றவுள்ள எதிரணித்தலைவர்கள் மாலை 6.00 மணியளவில் பத்திரிகையாளர்களைச் சந்திக்கவுள்ளனர்.

யாழ். விஜயத்தின்போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தனது உடனடி நிவாரணத் திட்டங்கள் குறித்து சரத் பொன்சேகா அறிவிப்பார் எனக் கூறப்பட்டது.

மக்களை மீளக் குடியமர்த்துவதைத் துரிதப்படுத்துவது, தமது வீடுகளை இழந்த மக்களுக்கு மாற்றுத் தங்குமிடங்களை வழங்குவது, நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவது போன்ற தமது யோசனைகளையும் சரத் பொன்சேகா அங்கு வெளியிடுவார் எனத்தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் உட்பட வடமாகாணத்தில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது, தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு படையினரைக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மட்டும் நிறுத்தி ஏனைய இடங்களிலிருந்து அவர்களைப் படிப்படியாகக் குறைப்பது ஆகியவை பற்றிய தமது யோசனைத் திட்டங்களையும் அவர் முன்வைப்பார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ-சி)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 25 ★ 11 ★ 1923

மறைவு 04 ★ 12 ★ 2009



### திருமதி இராசரத்தினம் பொன்னம்மா

ஆருயிர் ஈந்து அன்பு சொரிந்து
அருள் மழை பொழிந்து எமையெலாம்
ஆளாக்கி வளர்த்தெடுத்த அன்னையே!
உங்கள் இழப்பினால் அல்லல்பட்டு
ஆற்றாது அழுது கண்ணீர் விடும்
எங்களை ஆசிர்வதித்து ஏகுமம்மா!

*அன்னாரது வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (02.01.2010) சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.*

*எமது அம்மாவின் மரணச் செய்தியறிந்து நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தும் பலவகைகளிலும் ஆறுதலையும் உதவிகளையும் செய்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*வாதரவத்தை, புத்தூர்.* (93211) குடும்பத்தினர்.



## குத்தகைக்கு

அளவெட்டியில் தொழிற்சாலை/ வியாபாரம்/அரச நிறுவனங்களுக்கு ஏற்றதான காணியும் வீடும் குத்தகைக்கு உண்டு.

பார்ச்சல் - 110 (நூற்றுப்பத்து)

## விற்பனைக்கு

மரத்தளபாடங்கள், தென்னை மற்றும் மரங்கள் விற்பனைக்கு.

T.P.: 077 7791006, 071 6865954, 077 3013700 (93208)



# சாமி மரக்காலை
# Samy Timber Depot




சாமி மரக்காலை,
இல. 92, ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 4[illegible]966
(63240)


## 'ஸ்ரீமத் பகவதம்' படன வாசிப்பு

யாழ்ப்பாணம், ஜன.2

''ஸ்ரீமத் பகவதம்'' படன வாசிப்பு நாளை ஞாயிறு தொடக்கம் தொடர்ந்து ஏழு நாள்கள் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை முதல் 9 ஆம் திகதி வரை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி 12.30 மணிவரை இந்த வாசிப்பு இடம் பெறும்.

இதில் ஆர்வம் உள்ளோர் கலந்து கொண்டு பயன் பெறுமாறு யாழ்ப்பாணம் பகவான் சத்தியசாயி சேவா நிலையத்தினரால் கேட்கப்பட்டுள்ளது.

(ஒ-16)

# ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.2

வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கத்தினரின் முக்கிய கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் சங்கத்தில் இணையவுள்ளோர் நாளை ஆரியகுளம் உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியைச் சந்தித்து வடமாகாண ஆசிரியர்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட வசதியாக ஆசிரியர்களின் விவரங்களைத் திரட்டுவதற்காகவே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஒ-16)


# மரண அறிவித்தல்கள்

## காசிப்பிள்ளை கணேசரத்தினம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை கணேசரத்தினம் நேற்று (01.01.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் யோகவதியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சைவப் பாடசாலை ஒழுங்கை, திருநெல்வேலி. (93205) தகவல்: மனைவி. தொ.பே.0212226601

## வஸ்தியாம்பிள்ளை இம்மனுவேல்



இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை இம்மனுவேல் கடந்த (31.12.2009) வியாழக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரேசம்மாவின் (தங்கமணி) அன்புக் கணவரும், ஜெயம் (ஜேர்மனி), லலிதா (கொழும்பு), கமலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜி (ஜேர்மனி), விக்டர் (கொழும்பு), நாயகம் ஆகியோரின் மாமனாரும் சுகந்தினி (பிரான்ஸ்), சுரேஸ், லேகொட் (ஆசிரியர்), யூட், றெபியா, சியாம், லால் ஆகியோரின் பாசமிகு பேரனும், டிவினேஸின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனைத் திருப்பலி இன்று (02.01.2010) சனிக்கிழமை காலை 9 மணிக்கு இளவாலை அன்னம்மாள் ஆலயத்தில் நடைபெற்று பின்னர் அவரது பூதவுடல் அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யூலியன் விலா, இளவாலை.* (சி/563846) தகவல்: குடும்பத்தினர்.

## யாக்கோப்பு நீற்றம்மா



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யாக்கோப்பு நீற்றம்மா நேற்று (01.01.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யாக்கோப்பின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பெர்ணடேற் மற்றும் சூரியகுமாரி, றபேக்கா, வசந்தகுமாரி, சாந்தகுமாரி, ராசகுமார், காலஞ்சென்ற ஆனந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஹென்றிகப்பர், காலஞ்சென்ற வரப்பிரகாசம் மற்றும் பேதுறு, பெனான்டோ, யோகமலர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான லியோ, பெஞ்சமின், மோட்சம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செல்வமணியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து எடுத்து வரப்பட்டு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று (02.01.2010) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம்.* (93206) தகவல்: ராசகுமார் (மகன்).



## O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான...

அங்கீகரிக்கப்பட்ட கணனி டிப்ளோமா சான்றிதழ்கான கற்கைநெறிகள்.

- Diploma in Microsoft Office 2007
- Diploma in PC Application
- Dip. In Pre-Press Desktop Publishing
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Diploma in Computerized Accounting



புதிய பிரிவுகள் 4/1/2010,11/1/2010 Time 10 a.m

26/12/2009ம் திகதி முதல் முதலில் பதிவு செய்யும் 200 மாணவர்களுக்கு மறைமுகக்கட்டணம், நிபந்தனைகள் எதுவுமின்றி Internet & E-mail or Hardware Technology Course முற்றிலும் இலவசம்!

Internet E-mail

Hardware Technology

முறைமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி

DMI COMPUTER EDUCATION

NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் யாழ்.நகரில் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற 51ஆவது படைப்பிரிவின் நத்தார் விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைப்பதையும், படையினர் மற்றும் சிறுவர்களின் கலைநிகழ்வுகளையும் முதல் மூன்று படங்களில் காணலாம். யாழ்.ஆயர் நத்தார் செய்தி வழங்குவதை நான்காவது படத்திலும் யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் எல்.ஆர்.பி.மார்க் அருட்சகோதரி ஒருவருக்கு நத்தார் பரிசு வழங்குவதை இறுதிப் படத்திலும்.காணலாம்.

# பிராந்தியப் பொருளாதார அபிவிருத்திக்கான இருநாள் மாநாடு யாழ்ப்பாணத்தில் !

## ஜனவரி 6 ஆம், 7 ஆம் திகதிகளில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன 02.

வடமாகாண சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் பிராந்திய பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு அமைதிக்கான முதலீடு தொடர்பான இரண்டுநாள் மாநாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் விஸ்ற் பக்ற் இன் வெஸ்ற்மன்ற் போரம் எனும் அமைப்பின் ஏற்பாட்டில் 'த பிஸ்னஸ் போ பீஸ் எலைன்ஸ்' நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு எதிர்வரும் 6ஆம், 7 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் ஐந்து அமர்வுகளாக முதல்நாள் நிகழ்வுகள் இடம்பெறும். இதன் ஆரம்ப நிகழ்வுகளில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்வார்கள். இரண்டாம் நாள் நிகழ்வில் யாழ். மாவட்ட நுண்முதலீட்டு முயற்சிகள் மற்றும் யாழ். கைத்தொழில் மன்றம் உள்ளிட்ட இடங்களுக்கான களவிஜயமும், யாழ்ப்பாணத்தில் முக்கிய இடங்களுக்கான சுற்றுலாவும் இடம்பெறும். அன்று மாலை 6 மணி முதல் 9 மணிவரையும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 'கலா சாரக் காட்சிப்படுத்தல்' நிகழ்வும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த இரண்டு நாள் நிகழ்விலும் 'விஸ்ற் பக்ற் இன்வெஸ்ற்மன்ற் போரம்' மற்றும் 'த பிஸ்னஸ் போ பீஸ் எலைன்ஸ்' நிறுவன உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் யாழ். மாவட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (4-14)

# பெருமழை காரணமாக நெடுந்தீவில் விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு

நல்லூர்,ஜன.2

அண்மையில் பெய்த பெரும் மழை காரணமாக நெடுந்தீவில் விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

நெடுந்தீவுப் பகுதியில் சுமார் 70 ஏக்கரில் நெல் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் அதில் 58 ஏக்கர் வரை பழுதடைந்துள்ளதாகவும் 15 ஏக்கர்வரை நடுகை பண்ணப்பட்ட வெண்காயப் பயிர்களில் 10 ஏக்கர் வரை கூழான் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகிச் சேதமடைந்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

மழை வெள்ளம் காரணமாக தரவைப் பகுதிகளில் சுமார் 70 மாடுகள் 50 ஆடுகள் வரை கால் நடைகள் இறந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

(04-111)

# நடமாடும் சேவையில் முறைப்பாடுகளுக்கு தீர்வு

யாழ்ப்பாணம்,ஜன.2

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற நடமாடும் சேவையில் வழங்கப்பட்ட அனைத்து முறைப்பாடுகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

காலங்கடந்த பிறப்பு, இறப்புத் தொடர்பாக வழங்கப்பட்ட 103 பிறப்புப் பதிவுகள், 2 இறப்பு பதிவுகளும் உடனடியாக விசாரணைகள் மேற்கொண்டு உத்தேச திகதி குறிப்பிட்டு சான்றிதழ்கள் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை நடமாடும் சேவையில் வழங்கப்பட்ட 251 பிறப்புச் சான்றிதழுக்கான விண்ணப்பங்களுக்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(1-207)

# கொழும்புத்துறைப் பகுதியில் பொலிஸார் கசிப்பு வேட்டை

யாழ்ப்பாணம், ஜன.2

யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்றுமுன்தினம் கொழும்புத்துறைப் பகுதியில் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின்போது பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 பரல் கசிப்பு, 2 பரல் கோடா என்பன கைப்பற்றப்பட்டன.

கடந்த 29ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் யாழ்.பொலிஸ்நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஹேரத் தலைமையில் சென்ற பொலிஸார் இந்தத் திடீர் வேட்டையில் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கையின்போது இருவர் கைது செய்யப்பட்டனர்.

அண்மைக்காலமாக யாழ்.நகரப்பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்வோரின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்பட்டது.

இருப்பினும் குறிப்பிட்ட சில இடங்களில் கசிப்பு உற்பத்தியில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகையவர்களைக் கண்டுபிடித்து கசிப்பு உற்பத்தியை முற்றாக ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.பொலிஸ்நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி ஹேரத் தெரிவித்தார். (ஒ-9-23)

# மகளிர் கிரிக்கெட் நல்லூர் அணி முதலிடம்

யாழ்ப்பாணம்,ஜன.2

நல்லூர் பிரதேசசபை 2009ஆம் ஆண்டின் உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடத்திய பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நல்லூர் பிரதேச சபை பெண்கள் அணி முதலிடத்தையும், யாழ்.மாவட்ட உள்ளூராட்சி திணைக்கள பெண்கள் அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

(ஒ-14)

# இலத்திரனியல், தொடர்பாடல் கண்காட்சியில் சென்.பற்றிக்ஸ் மாணவர்கள் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜன.2

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தினால் இம்மாதம் 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பாடல் கண்காட்சியில் (Expose -2009) யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் மூவர் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.



சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் தொழில் நுட்பவியல் மாணவர்களான கே.திருச் செந்தூரன், ஏ.எஸ்.பி.ஸட்சன் சைலெஸ்ரன், எஸ்.அலந்தன் ஆகியோரே இலத்திரனியல் தூசு அகற்றும் கருவி (Electronic Dust Sweeper) என்ற சாதனத்தை உருவாக்கி அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

இவர்களுக்கு முதல் பரிசுத் தொகையாகப் 10 ஆயிரம் ரூபாவும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (50)

# கடும் மழையினால் சேதமடைந்த வீதிகள் முதலில் தார்க் கலவை மூலம் சீரமைக்கப்படும்

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.2

யாழ்.குடாநாட்டில் கடும்மழையினால் சேதமடைந்த வீதிகளை முதலில் தார்க் கலவை மூலம் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உயரதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.குடாநாட்டில் அண்மையில் பெய்த பருவ மழையால் பிரதான வீதிகள் உட்பட்ப் பல வீதிகள் சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. இந்தச் சேதங்களை உடனடியாகத் தார்க்கலவை மூலம் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கெனக் கொழும்பில் இருந்து தரை வழியாகத் தார்க்கலவை யாழ்ப்பா ணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது-என்றார்.

(50-224)

# குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# வவுனியாவிலிருந்து மரக்கறிவகைகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரும் வியாபாரிகள்

## சந்தைகளில் விலை அதிகரிப்பே காரணம்

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ்ப்பாணம் சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் திடீரென அதிகரித்ததையடுத்து வவுனியாவில் இருந்து மரக்கறி வகைகளை எடுத்து வருவதில் வியாபாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியாவிலிருந்து வரும் தனியார் பஸ்கள் மற்றும் வாகனங்கள் மூலம் இந்த மரக்கறி வகைகள் தினமும் எடுத்து வரப்படுகின்றன.

மரக்கறி வகைகள் தினமும் யாழ்ப்பாணச் சந்தைகளுக்கு வந்து சேர்வதால் அவற்றின் விலைகள் மேலும் அதிகரிப்படுவதாகக் கூறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தம்புள்ள பகுதியிலிருந்தே அதிகளவில் மரக்கறி இங்கு எடுத்துவரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(50-224)

# கிளிநொச்சிக்கு அம்புலன்ஸ்கள்

யாழ்ப்பாணம், ஜன.2

கிளிநொச்சி பொதுவைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் சென்ற சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் அம்புலன்ஸ்களை வழங்கினார்கள்.

அத்துடன் மேற்படி மருத்துவமனையில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மருத்துவ ஆய்வுகூடம், பற்சிகிச்சை நிலையம் உட்படப் பல்வேறு பிரிவுகளையும் அவர்கள் ஆரம்பித்து வைத்தனர். இந்த நிகழ்வில் அப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களும் கலந்து கொண்டனர். (ஒ)

# காளைமாட்டைத் திருடிச் சென்றோர் விழிப்புக்குழுவினரிடம் மாட்டினர்

யாழ்ப்பாணம், ஜன.2

வீடொன்றில் கட்டி நின்ற காளை மாட்டைத் தந்திரமாகக் களவாடிச் சென்ற திருடர்கள் காவலில் ஈடுபட்டிருந்த விழிப்புக் குழுவினரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் மாகியப்பிட்டியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

வயல் உழவுக்குப் பயன்படுத்தப்படும் இந்தக் காளை மாட்டைத் திருடர்கள் தந்திரமாக அபகரித்துக்கொண்டு சென்ற வேளை அங்கு பாதுகாப்புக் கடமையில் நின்ற விழிப்புக்குழுவினரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

இந்தத் திருடர்களை மடக்கிப்பிடித்த விழிப்புக் குழுவினர் அவர்களைப் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

(50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடுபிடிக்கும் வியாபார நடவடிக்கைகள்; நல்லூரில் களைகட்டுகிறது சனக்கூட்டம்



யாழ்ப்பாணம், ஜன.02

நல்லூர் ஆலயச் சூழலை அண்மித்த பகுதிகளுக்கு வருகை தரும் பெருமளவிலான தென்னிலங்கை வர்த்தகர்கள் அங்கு வர்த்தக நடவடிக்கைகளை மும்முரமாக மேற்கொள்வதை கடந்த சில நாள்களாக அவதானிக்க முடிகின்றது.

தென்னிலங்கையிருந்து தரை வழிப்பாதை மூலம் கொண்டு வரப்படும் வீட்டுப் பாவனைப் பொருள்கள், பூமரக் கன்றுகள் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களைக் குவியல் குவியலாக வைத்து வியாபாரம் செய்யப்படுவதையும் அவற்றைப் பெருந்திரளான பொது மக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்வதையும்அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா இலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை)



வாசாவிளானைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா இலட்சுமி நேற்று (01.01.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலகிருஸ்ணன், பொன்னுப்பிள்ளை மற்றும் சிஸ்ரர் மேரி யுஸ்ரீனா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரியும், சின்னத்தங்கத்தின் மைத்துனியும், இராசரத்தினம் (ஓய்வுபெற்ற, இயந்திர இயக்குநர், தெல்லிப்பளை), பத்மநாதன் (ஓய்வுபெற்ற அதிபர், கொ/நாமகள் வித்தியாலயம்), காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் சதானந்தன் (ஜேர் மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்னேஸ்வரி, தேக்கிளா சுசீலா (ஓய்வுபெற்ற ஆசிரியை, முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), பாமினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், பார்த் தீபன், மீரா, காண்டீபன், சோபிகா, பத்மராஜா, பத்மகாந், பத் மானந், பத்மதனுசாந், ஸ்ரீசாஜன், சங்கரீசன், ஆரணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாஜகான், சரண்யா, சாருஜன், கோபி நாத் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2010) சனிக்கிழமை ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழனிஆண்டவர் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (93202)

தகவல்: பொ.இராசரத்தினம் (மகன்) தொ.பே.0778690201, 0771387270

### ஜேக்கப் மரியநாயகம்



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜேக்கப் மரியநாயகம் நேற்று (01.01.2010) காலமானார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (02.01.2010) சனிக்கிழமை பி.ப. 03.30 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, யாழ். பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்ப்படும்.

892, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (93203)

தகவல்: அருட்தந்தை ஜே.நீக்கிலஸ் (சகோதரன்).

### வைத்திலிங்கம் நவரத்தினம் (கோடாக்காரர்)



உடுவில் கிழக்கு, கற்பகப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் நவரத்தினம் 31.12.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மீனாட்சி தம்பதியினரின் அன்பு மகனும் தங்கரத்தினத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, மதியாபரணம் மற்றும் நகுலாவதி, மகாராஜா, லீலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் செல்வநாயகம், பாஸ்கரன் (ஜேர்மனி), மனோகரன் (ஜேர்மனி), நவசீலன் (ஜேர்மனி), நாகேஸ்வரி, நாகேஸ்வரன் (ஜேர்மனி),நந்திரா, பிரபாலினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகுமாரி மங்களேஸ்வரி, இராகினி(ஜேர்மனி), யோகேஸ்வரி (ஜேர்மனி), ஜெயகலா(ஜேர்மனி), உதயகுமார், றஜனி (ஜேர்மனி), சிறிசுகுமார், விக்கினேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின்அன்பு மாமனாரும் விஜிதா, சுகிர்தா, ராஜ்குமார், ரஜீவன் அருட்செல்வி, அருள்மதி, அருள்நிதி, மேகலா, சயந்தன், சயந்தினி, தனராஜ்லேகன், டார்சிகா, தினேஸ், ராகுலன், வேனுகா, டார்சிகா, விஸ்மன், விதுஜா, கௌசிகன், நவநீதன், நிதுஜா, நிம்ஜா, நிர்மலன், காண்டீபன், உஷாந்தினி, கிருசாந்தினி, சுபாஜினி, கோவிந்தன், சபிதா, சபித்தன், விதுஜன், விவிதன் ஆகியோரின் அன்புப்பேரனும் நகிர்தனா, டிஷானன், நிகேதனன், ஹாரூஜன், தாரணிகா, மதுசாலினி ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில்கிழக்கு. தொ.பே: 021 7901241 (92097)

தகவல்: குடும்பத்தினர்.

## கன்னியர்மடப் பாடசாலையில் தரம் 1 இற்கான அனுமதி நாளை

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மட பாடசாலையில் தரம் ஒன்றிற்கு அனுமதி பெற்ற மாணவிகளின் பெற்றோர் நாளை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபரைச் சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இம்மாணவிகளுக்கான கால்கோள் விழா நாளை மறுதினம் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளதெனவும் பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (01-16)

## வன்னித் தொண்டராசிரியர் கூட்டம் திங்களன்று

யாழ்ப்பாணம்,ஜன.2

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்து தங்கியுள்ள வன்னிப்பகுதியைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கான விசேட கூட்டமொன்று எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வன்னிப் பகுதியைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களின் முழுமையான விவரங்கள் திரட்டப்படும் எனவும், அவ்வாறு திரட்டப்படுகின்ற விவரங்கள் அனைத்தும் நேர்முகப் பரீட்சைக்காகச் சமர்ப்பிக்கப்பட இருப்பதனால் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் - வன்னிப் பகுதிக்கான தொண்டர் ஆசிரியர்களின் ஒன்றியத்தின் செயலாளர் பி.சிவகரன் தெரிவித்துள்ளார். (01-15)

## மழலைகள் பூங்காவின் ஆண்டுவிழா இன்று

சமரபாகு அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் ஆண்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பூங்காவின் தலைவர் ப. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி. வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (1-236)

## யூனியன் கல்லூரியில் முதலாம் தவணை 5ஆம் திகதியே ஆரம்பம்

யூனியன் கல்லூரியின் முதலாம் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

இம் மாதம் 4ஆம் திகதி பாடசாலைகளின் கல்விச்செயற்பாடுகள் ஆரம்பமாகுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இம்மாதம் 5ஆம் திகதியே கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகும் எனவும் அனைத்து ஆசிரியர்களையும் மாணவர்களையும் அன்றையதினம் சமுகமளிக்குமாறும் [illegible] அதிபர் கேட்டுள்ளார். (04-16)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### இராமநாதன் பெருமாள்



கடந்த 02.12.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் இராமநாதன் பெருமாள் அவர்களின் 31 ஆம் நாள் நினைவாக இன்று (02.01.2010) சனிக்கிழமை மதிய போசன நிகழ்வு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் அவரது உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

57, இலந்தைக்குளம் றோட், அரியாலை, யாழ்ப்பாணம். (92100)

தகவல்: குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர்
பேராசிரியர் கலைவாணி இராமநாதன்
அவர்களின் தாயார் **இராசம்மா வல்லிபுரம்** அவர்கள் 20.12.2009 அன்று காலமாகிவிட்டார் என்ற செய்தியைக் கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம். (92099)

## மரண அறிவித்தல்

### பொன்னப்பா பாக்கியம்



யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பொன்னப்பா பாக்கியம் 29.12.2009 அன்று காலமானார்.

அன்னார் பொன்னப்பா அண்ணாவியாரின் அன்பு மனைவியும், இராசநாயகி (இந்தியா ), கமலேஸ்வரன் ( ஜேர்மனி), சவுந்தரநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், கோபாலசிங்கம், கனகரத்தினம், கலாதேவி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற கோகுலன், பிறேம்குமார் சங்கீதா (பிரான்ஸ்), ஜேர்மனியை வதிவிடமாகக் கொண்ட ஷர்மிளா, செந்தூரன், சுவர்னியா மற்றும் சுதாகரன், பிரதீபன், பார்த்தீபன், நிறோயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

852/13, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 077 2487126. (93203)

தகவல்: கமலேஸ்வரன் (மகன்)- நல்லூர்.

## திங்கள் ஒன்றின் நினைவும் நன்றி பகர்வும்



தோற்றம் 01.07.1932

மறைவு 01.12.2009

அமரர்

### சரஸ்வதி கதிர்காமத்தம்பி

01.12.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் எமது இல்லத்தில் இன்று (02.01.2010) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெறும்.
அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆன்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

இராம கிருஷ்ண வீதி,
கோண்டாவில் கிழக்கு.
0773024293

அன்பு மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.

(92096)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.11.1986

★ தமிழ்ப் பிரதேச வர்த்தகர்கள் வியாபார மொத்த வரியை தமிழீழ செயலகத்திலேயே செலுத்த வேண்டுமென விடுதலைப்புலிகள் இயக்கம் தெரிவிப்பு.

★ எந்தவொரு விடுதலைப்புலி அமைப்புக்கும் சக விடுதலை அமைப்பொன்றைத் தடைசெய்ய உரிமை கிடையாது என ஈரோஸ் அமைப்புத் தெரிவிப்பு.

02.11.1986

★ கண்ணிவெடிக்குத் தாக்குப்பிடிக்குமெனத் தெரிவிக்கப்பட்ட தென்னாபிரிக்கத் தயாரிப்பு 'பவ்வின்' வாகனம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்ப் போராளிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் சிதறுண்டது.

★ ஆயுதங்களைக் கைவிடக் கோருவதை விடுத்து, தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமே சமாதானத்தை உருவாக்க முடியும் என வண. பிதா கஸ்பேர்ஸ் தெரிவிப்பு.

★ தமது உரிமைக்காக குரல் கொடுக்கும் தமிழ் மக்களின் கோரிக்கை நியாயமானது என கொழும்பைச் சேர்ந்த வண. பிதா யோகன் தேவானந்தா தெரிவிப்பு.

03.11.1986

★ தமிழீழப் பிரகடனம் என ஏ.எப்.பி. செய்தி ஸ்தாபனம் வெளியிட்ட செய்திக்கு விளக்கம் அளிக்கும் வகையில் சிவில் நிர்வாக அமைப்பை உருவாக்குவதென்பது தற்காலிக அரசு ஒன்றுக்கான பிரகடனம் அல்ல என்று தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவிப்பு.

★ இலங்கை இனப்பிரச்சினை தீர்வு தொடப்பாக இந்தியா தயாரித்துள்ள யோசனைகளில் தமிழ் மக்களுக்கென தனியான மாகாணமொன்று உருவாக்க வேண்டுமென்ற அம்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

★ யாழ்.கோட்டை முகாமிலிருந்து யாழ்.ஆஸ்பத்திரி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் ஏற்பட்ட சேதம் குறித்து கண்டறிய, அரசாங்கம் வைத்திய அதிகாரிகள் சங்கத்தூதுக்குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம்.

04.11.1986

★ இலங்கைத் தமிழ்ப் போராளிக்குழுக்கள் ஐந்தும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமது புதிய யோசனைகளைத் தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடம் கையளிப்பு.

★ இனப்பிரச்சினை தொடர்பான மூன்றாம் கட்டப் பேச்சுக்களில் போராளிகள் அமைப்புகளும் கலந்து கொள்ளும் சாத்தியக்கூறுகள் அதிகரிப்பு.

★ பாடசாலை நேரத்தில் பாடசாலை வளாகத்தில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் பலியான மத்திய கல்லூரி மாணவனின் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளில் மாணவர் பகிஷ்கரிப்பு.

05.11.1986

★ யாழ்.ஆஸ்பத்திரி மற்றும் அதனைச் சூழ்ந்த பகுதிகள் சண்டைத்தவிர்ப்புப் பகுதியாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசிடம் கோரிக்கை முன்வைப்பு.

★ இலங்கை அரசின் இனப்பிரச்சினைத் தீர்வு யோசனைகளில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவரத்தக்கதான யோசனைகளை போராளிகள் அமைப்புக்கள் சமர்ப்பித்துள்ளதாக இந்தியத் தூதுவர் டிக்ஸிற் தெரிவிப்பு.

06.11.1986

★ அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நடிகர் சிவாஜி கணேசன் மற்றும் திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியோருக்கு டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவிப்பு.

★ இலங்கையில் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுதலை செய்ய வற்புறுத்தி ஈழத்தமிழர் பாதுகாப்பு இயக்கத்தினர் இந்திய நாடாளுமன்றத்தின் முன்னால் உண்ணாவிரதப் போராட்டம்.

★ உலக அபிப்பிராயத்துக்கு எதிராக நாம் செயற்பட இயலாது என தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகக் கருத்துத் தெரிவிப்பு.

07.11.1986

★ திருகோணமலை, மூதூரில் இலங்கை இராணுவத்தினருடனான நேரடி மோதலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூதூர் பிராந்தியத் தளபதி கணேஸ் மரணம்.

★ இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இந்தியத் தூதுவர் டிக்ஸிற் ஜனாதிபதி ஜே.ஆரை மீண்டும் சந்தித்துப் பேச்சு.

★ மன்னார், தாழ்வுப்பாடு கடற்கரையில் ஏறக்குறைய 17 சடலங்கள் உருக்குலைந்த நிலையில் கண்டெடுப்பு.

08.11.1986

★ கவனயீனமாக சிசேரியன் சத்திரசிகிச்சை மேற்கொண்டதால் உடல் நலத்துக்குப் பங்கம் ஏற்படுத்தப்பட்டதாக குற்றம் சாட்டிப் பெண்ணொருவர் சத்திரசிகிச்சை நிபுணர் மீது கண்டி நீதிமன்றத்தில் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல்.

★ தமிழருக்குத் தாயகமாகத் தனிமாநிலம் தேவை என்ற அம்சம் ஐந்து போராளிகள் அமைப்புக்களால் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரிடம் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

★ ஐந்து போராளிகள் அமைப்புக்களின் கோரிக்கை குறித்த ஜனாதிபதி ஜே.ஆரின் நிலைப்பாட்டை அறிவதில் இந்திய மத்திய அரசு ஆர்வம்.

09.11.1986

★ தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும் அவ்வமைப்பின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கமும் சென்னைப் பொலிஸாரால் கைதுசெயப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிப்பு.

★ அடம்பன் மோதலின்போது விடுதலைப்புலிகளால் கைதுசெய்யப்பட்ட இரு இராணுவ வீரர்களை விடுவிப்பது தொடர்பாக யாழ்.கோட்டை முகாம் பொறுப்பதிகாரி கப்டன் கொத்தலாவலை விடுதலைப்புலிகளின் யாழ்.தளபதி கிட்டுவுடன் பேச்சு.

10.11.1986

★ விடுதலைப்புலிகள் வசம் கைதிகளாகவுள்ள இரு இராணுவ வீரர்களை விடுவிப்பதற்குப் புலிகள் முன்வைத்த நிபந்தனைகளை இராணுவத்தரப்பு ஏற்பு.

★ போராளிகள் பாதுகாப்பு வழங்க யாழ்.நகருக்குள் வந்த கோட்டை இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுடன் நட்புறவான சந்திப்பு.

★ தமிழ்ப் போராளிகள் இந்திய நாட்டின் சட்ட திட்டங்களுக்கு மேலானவர்கள் அல்ல என தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தெரிவிப்பு.

11.11.1986

★ திருகோணமலை, சாம்பல்தீவு இராணுவ முகாம் மீது மக்கள் விடுதலைப் படையினர் என்ற போராளி அமைப்பு தாக்குதல்.

★ இலங்கையுடன் நட்புறவு கொண்டுள்ள சில வெளிநாட்டுச் சக்திகள் தீவிரவாதிகளுக்கு மறைமுகமாக உதவுவதாக பிரதமர் பிரேமதாச குற்றச்சாட்டு.

12.11.1986

★ வடமராட்சி வல்லை வெளியில் முகாம் அமைக்க முயன்ற இராணுவத்தினரை போராளிகள் அமைப்புக்கள் இணைந்து துரத்தியடிப்பு.

★ பொதுமக்களைச் சித்திரவதை செய்யப் பொலிஸாருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என பிரதிப் பொலிஸ்மா அதிபர் மித்ரா ஆரியசிங்க தெரிவிப்பு.

★ நாட்டில் சமாதானம் ஏற்படும்வரை பாதுகாப்புச் செலவீனங்களைக் குறைக்க இயலாது என நிதி அமைச்சர் றொனி டிமெல் தெரிவிப்பு.

13.11.1986

★ வல்லைப்பாலம் இராணுவத்தினரால் குண்டுவைத்துத் தகர்ப்பு.

★ றொபேர்ட் புரூஸ் போன்று தோல்விகளைக் கண்டு மனம் தளராமல் எடுத்த காரியத்தில் ஊக்கத்தோடு செயற்பட வேண்டும் என தேசிய பாதுகாப்பு அமைச்சர் அதுலத்முதலி மாணவர்கள் மத்தியில் அறிவுரை.

★ தமிழ் நாடு அரசு, இலங்கைத் தமிழ்ப் போராளிகளைக் கைது செய்தமைக்குப் பல தரப்புகள் கண்டனம்.

14.11.1986

★ வல்வெட்டித்துறையில் விடுதலைப்புலிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல் தொடுத்து விரட்டியடிப்பு.

★ திருகோணமலை நகரிலிருந்து இராணுவத்தினரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு சீனன் வாடியில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழ் அகதிகள் குடிக்க, குளிக்க தண்ணீர் வசதியின்றி அவதி.

15.11.1986

★ தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் உட்பட தமிழ்ப் போராளிகள் தமிழ்நாடு அரசால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். குடாநாட்டில் உண்ணாவிரதம்; ஆர்ப்பாட்டம்.

★ சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியா செல்லும் ஜனாதிபதி ஜே.ஆர்., இந்தியப் பிரதமருடன் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேச்சு.

# கைதிகள், காணாமல் போனோர் விவரம் திரட்ட ரணில் நடவடிக்கை

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் காணாமல் போனோர் தொடர்பாக துரித நடவடிக்கைகளை எடுப் பதற்காக ஐக்கிய தேசிய முன்னணி, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் குழுவொன்றை அமைத்துள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதாகித் தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் மற்றும் காணாமற் போனோர் தொட ர்பில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற் காக அவர்கள் பற்றிய முழுமையான விவரங்களைத் திரட்டும் பணி முன்னெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கும் ஐக்கிய தேசிய முன்னணி, அது குறித்து மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளிலும், பூஸா தடுப்பு முகாமிலும், புனர்வாழ்வு முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களிலும், ஏனைய இடங்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் மற்றும் காணாமல் போனவர்கள் குறித்த முழுமையான விவரங்களை ஐக்கிய தேசிய முன்னணி கோருகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி பதவிக்கு வந்த இரு மாதகாலத்திற்குள் இவர்கள் தொடர்பான துரித நடவடிக்கைகளை எடுப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இதற்கான நடவடிக்கைக்குழு ஒன்று இப்போதே அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நபரின்பெயர், வயது உட்பட அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கியதாக விடயங்களைப் பதிவு செய்வதற்குரிய மாதிரிப் படிவங்கள், பத்திரிகை விளம்பரம் மற்றும் இணையத்தளம் மூலமாக வெளியிடப்படும். அதனைச் சம்பந்தப்பட்டோரின் உறவினர்கள் நிரப்பி, 'தடுப்புக் கைதிகள் மற்றும் காணாமல் போனோருக்கான நட வடிக்கைக் குழு', இல. 2, கேம்பிரிட்ஜ் டெரெஸ், கொழும்பு - 07 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கோருகிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் முகம்



நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை சேர்ந்த வி.சிவனேசன் இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி இலங்கை அதிபர் சேவை 2-11 நியமனம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டதாரியாகிய இவர், தேசியகல்வி நிறுவகத்தில் பட்டப் பின் படிப்பினை நிறைவு செய்துள்ளதுடன் யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியில் புவியியல் பாடஆசிரியராக உள்ளார்.

கற்சுமி வெளியீட்டின் நிருவாக இயக்குநராகவும், பிரதம ஆசிரியராகவும் பணியாற்றும் இவர் குறிப்பாக ஆரம்பக் கல்வி மாணவர்களுக்குரிய தரமான பல வெளியீடுகளை மருதன் நேர் அச்சுப்பதிப்பகம் எனும் தனது பதிப்பகத்தின் மூலமாக வெளியிட்டு வருகின்றார். (1)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★



விழிசிட்டி, தெல்லிப்பழையில் பிறந்து சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட சைவப்புலவர் திருமதி சிவசுப்பிரமணியம் ஜனகா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணித் தேர்வில் அதிசிறப்புச் சித்தியினைப் பெற்றுள்ளார். இவர் ஏழாலை மகாவித்தியாலயத்தின் ஆசிரியையுமாவார். (1)

# சரித்திரம் பதித்த கல்வியாளன்



யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் சைவ மரபு பேணி யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை ஒன்று எழுச்சியும் உயர்ச்சியும் பெற்று வளர்கின்றது என்றால் அதற்கு அடித்தளம் இட்டுப் பெருக்கிப் பூசித்து வளர்த்த இலட்சிய வேட்கையும் உறுதியும் கொண்ட உயர்திரு.செல்லப்பா கனகரட்ணம் பற்றிச் சிந்திக்காத உள்ளமுடையார் எவரும் இருக்கார் என்பது எனது எண்ணம். அத்தகைய சரித்திரம் பதித்த கல்வியாளன் இன்று எம்மிடையே இல்லையே என்பதுதான் உள்ளத்தை நெருடுகின்ற செய்தியாக உள்ளது.

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சேவை ஓய்வின் பின் நீண்டகாலம் லண்டனில் வசித்து வந்தவருமாகிய இவர் தமது 83 வருடகால வாழ்க்கையில் 32 வருடகாலம் ஆசிரியராய், அதிபராய்ப் பணியாற்றியிருக்கின்றார். தமது 17ஆவது வயதில் பொலிஸ் சேவையில் கால் பதித்து 5 ஆண்டுகள் பணியாற்றிய வேளை அதிலிருந்து விலகி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்று கணித ஆசிரியராக ஆசிரிய உலகில் கால் பதித்தார். கணித ஞானத்தை இம்மண்ணில் பிறந்தோர்க்கு அனுதினமும் அள்ளி வழங்கிய அருளாளர், பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளிலும் தன்னை நாடி வந்தவர்களுக்கு எண்ணறிவு ஊட்டி ஏற்றம் பொலிய வைத்தார். இதன் காரணமாகச் சிறந்த கணித ஆசான் என்ற நன்மதிப்பும் பெயரும் நிலைக்கலாயிற்று.

1973 காலப்பகுதிகளில் யாழ்ப்பாணம் வண்ணை இந்துக்கல்லூரி தமிழ்க்கலவன் வித்தியாசாலை என்ற பெயரில் அப்போது இயங்கி வந்த பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். இப்பாடசாலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியுடன் இணைந்த ஆரம்பப் பிரிவைக் கொண்டதாக இருந்தது. கல்வியைச் சொத்தாகக் கருதும் யாழ்ப்பாண மண்ணில் கல்வியூட்டும் நிறுவனங்கள் சமூகத்தவர்களின் எதிர்பார்க்கைக்கு உகந்ததாக இருக்கவில்லை என்பதை விளங்கிக் கொண்டார். நாவலர் காட்டிய வழியில் தோன்றிய கல்வியூட்டும் நிலையங்களின் பரிதாப நிலை அவரது மனதை உறுத்தியது. கொட்டகைகளாக விரிந்து கிடந்த பாடசாலையின் அவல நிலையைக் கண்டும் மனம் கொதிப்புற்றார். இத்தகைய சூழ்நிலையில்தான் தனது உடல், பொருள், ஆவி அத்தனையையும் இப்பாடசாலை மீது அர்ப்பணம் செய்து தனது எண்ணக்கனவை நனவாக்கி ஏற்றி வைத்த தீபம், குன்றிலிட்ட விளக்காகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது என்றால் மிகையாகாது.

## நீத்தார் நயப்புரை

மிடுக்கான தோற்றம், நேர்கொண்ட பார்வை, யாரையும் வசீகரிக்கும் புன்முறுவல், சாதிக்கத் துடிக்கும் கரங்கள், நல்நெஞ்சம், சைவப் பாரம்பரியத்தினுள் புடம்போட்ட முத்து, எதனையும் கணித்து வெற்றி காணும் வல்லமை, இத்தோடு மட்டுமல்ல அன்பும் அருளும் நிறையவே இருந்தன. தன்னுடைய பன்னிரெண்டு ஆண்டுகால சேவை வரலாற்றில் சரித்திரம் பதித்த கல்வியாளன் என நேசிக்கத்தக்கவகையில் விட்டுச் சென்ற எச்சங்கள் என்றென்றும் நினைவு கூரத்தக்கன. இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு இந்துக்கல்லூரியின் அப்போதிருந்த நிர்வாகக் கட்டமைப்பு சில பாதகமான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தமை இவரது உள்ளத்தை வேதனைப்படுத்தியிருந்தது. இக்கருத்தினை அண்மையில் இப்பாடசாலைக்கு விஜயம் செய்தபோது என்னிடம் நேரடியாகச் சுட்டிக்காட்டி அதனால்தான் ''தனித்துவம்மிக்க பாடசாலையாக உருவாக வேண்டும் என யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை என்ற பெயரோடு இதனைப் பிரசவித்தேன்'' என்றார். எது எப்படியிருப்பினும் நல்லது நடக்கத் திருவருள் கூட்டிய அந்தச் சந்தர்ப்பம் மறக்கமுடியாத ஒன்று. இன்று தனித்துவமான பெயருடன் பெயர் பதித்து நிற்க வைத்த பெருமைக்குரிய தகைமையை அமரர் அவர்கள் கொண்டிருந்தார்.

நேர முகாமைத்துவத்தில் மிகவும் இறுக்கமானவர். முன்மாதிரியானவர், எடுத்த கருமத்தைத் துணிவுடனும் தன்னம்பிக்கையுடனும் செய்து முடிக்கும் வல்லமை கொண்டவராக விளங்கினார். எந்த எதிர்ப்புக்களையும் சாதுரியமாக எதிர்கொள்ளும் துணிச்சல் உள்ளவர். அதனால் சவால்களை எதிர்த்துப் போராட்டமும் வெற்றி கொள்ளலும் என்பதுதான் இறுதி வரை இப்பாடசாலையின் மூச்சாக இருந்து, சாதித்த கல்வியாளன் என்ற பெருமைக் குரியவராக இருந்திருக்கிறார்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வரலாறு பதித்த கல்வியாளன் இப்பாடசாலையில் ஓய்வு பெற்று 23 ஆண்டுகள் இப்பாடசாலையின் நினைவோடு வாழ்ந்து 11.01.2009 ஆம் ஆண்டு தமது சேவை விழிகளை இறுகமூடி அமரத்துவம் எய்தினார். ''நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு'' என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் எமது பிரதேசத்திலும் சீமையிலும் நிலைபேறுடையதாக இருக்கின்றது.

வே.ஞானகாந்தன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்புடன் பேச்சு முழு வெற்றி என்கின்றார் ரணில்

கொழும்பு, ஜன. 2

ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பது தொடர்பில் தமக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுகள் அநேகமாக வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கோடிகாட்டினார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் இருந்து விலகிய முருகன் சச்சிதானந்தன் எம்.பி. மற்றும் ஆர். யோகராஜன் ஆகியோர் நேற்று முன்தினம் ரணிலைச் சந்தித்து ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டனர். அச்சந்தர்ப்பத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

முருகன் சச்சிதானந்தன் எம்.பி. மற்றும் ஆர். யோகராஜன் ஆகியோர் மீண்டும் எமது கட்சிக்குத் திரும்பிவிட்டனர். அவர்களை நாம் அன்புடன் அழைத்து எமது கட்சியில் இணைத்துக் கொள்கிறோம்.

மலையக மக்களில் அநேகமானோர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளனர். அதில் எதுவித மாற்றமும் ஏற்படாது. ராஜபக்ஷ குடும்ப ஆட்சியில்தான் மாற்றம் ஏற்படவேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஊழல், மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஜனநாயக ஆட்சி ஒன்றை இந்நாட்டில் நிறுவுவதற்கு இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுசேர வேண்டும். சரத் பொன்சேகாவை வெற்றி பெறச் செய்யவேண்டும்.

பொன்சேகாவுக்கு ஆதரவு வாங்குவது தொடர்பில் எமக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுகள் அனைத்தும் அநேகமாக வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன. கூட்டமைப்பு இன்னும் ஓரிரு நாள்களில் அதன் முடிவை அறிவிக்கும்.

தமிழர்களுக்குத் தீர்வு வழங்குவது தொடர்பாக நாம் கூட்டமைப்புடன் கலந்தாலோசித்தோம். நாம் சொல்வதைச் செய்வோம். மஹிந்தவைப் போல் பொய் வாக்குறுதி வாங்கமாட்டோம். - என்றார். (சி)

# திருமலை மாவட்ட மீனவருக்கான பாஸ் நடைமுறை முற்றாக நீக்கம்

கொழும்பு, ஜன.2

திருகோணமலை மாவட்டத்தில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்வதற்கான பாஸ் நடைமுறை முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இந்த நடைமுறை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்படுகிறதென கிழக்கு மாகாணத்திற்கான கடற்படையின் கொமடோர் எஸ். ஜயக்கொடி இதனை நேற்று முன்தினம் அறிவித்தார்.

முதூர், கிண்ணியா, புல்மோட்டை ஆகிய பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பின்படி, கடலுக்குச் செல்லும் சகல மீனவர்களும் எவ்வித பாஸ்களையும் எடுக்க வேண்டிய அவசியமில்லை.

இக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் ஜயவிக்கிரம, அமைச்சர் நஜீப் ஏ மஜீத், கிழக்கு மாகாண கடற்படைக் கட்டளை தளபதி ரியர் அட்மிரல் வீரசேகர, கிழக்கு மாகாண சபை தவிசாளர் கே. எம். எம். பாயிஸ், கிழக்கு மாகாண சபை முதல்வர் எஸ். எல். எம். ஹஸன் அஸ்ஹரி, பிரதேச சபை தவிசாளர் கே. எம். தௌபீக் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இப்பிரதேச மீனவர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டதை பலதரப்பினரிடமும் விடுக்கப்பட்ட வேண்டுதலின் பேரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

மீனவர்கள் 24 மணித்தியாலமும் கடலில் தொழில்புரிவதற்கு வசதியாக பாஸ் தடையை முற்றுமுழுதாக நீக்குவதோடு மீனவர்களால் முன்பு பெற்ற பாஸ் அனுமதிகளை பாதுகாப்பின் நிமித்தம் மீனவர்கள் வைத்துக்கொள்வது உகந்தது எனவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மீனவர்களுக்கு ஏற்படக்கூடிய இடர்பாடுகள் இருப்பின் அவற்றை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளன. (சி)

# ஊடகவியலாளர்கள் யாழ். வருவதற்கு பாதுகாப்பு அனுமதி தேவை

யாழ்ப்பாணம், ஜன. 2

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய தகவல்களைத் திரட்டும் வகையில் யாழ்ப்பாணத்துக்கு வரவிரும்புகின்ற ஊடகவியலாளர்கள் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதியைப் பெற்றுகொள்ள வேண்டும் எனத் தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் [illegible]ஷ்மன் குலுகல்ல தெரிவித்துள்ளார்.

யுத்தத்திற்குப் பின்னரான அ[illegible]திச் சூழ்நிலையில் யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள விரும்புகின்ற ஊடகவியலாளர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டே முற்கூட்டிய அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரசார நடவடிக்கைகள் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதற்காக யாழ்ப்பாணம் வரவுள்ள ஊடகவியலாளர்கள் ஜனாதிபதிப் பாதுகாப்புப் பிரிவினரிடம் முற்கூட்டியே அறிவிக்க வேண்டும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். (சி)

# இடம்பெயர்ந்தோரில் பத்து லட்சம் பேர் வாக்களிப்பில் பங்கேற்க முடியாத நிலை

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.2

சுமார் பத்து இலட்சம் இடம்பெயர்ந்த வாக்காளர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க முடியாத ஓர் நிலை ஏற்படக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களுக்கு துரித கதியில் அடையாள அட்டைகளை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

கொத்தணி வாக்குச் சாவடிகளில் வாக்களிக்க விண்ணப்பித்த பல வாக்காளர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு காரணிகளுக்காக இவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

விண்ணப்பங்களை எவ்வாறு பூர்த்தி செய்ய வேண்டும் என்பது குறித்து இடம்பெயர்ந்த மக்களுக்குப் போதிய விளக்கம் அளிக்கப்படவில்லை எனவும், தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்பதில் மக்கள் அதிக நாட்டம் காட்டவில்லை எனவும் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டை இல்லாதவர்கள் கிராம உத்தியோகத்தர் ஊடாக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இடம்பெயர்ந்த மக்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கும் நோக்கில் தேர்தல் அதிகாரிகள் வடக்குக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

10 இலட்சத்துக்கும் அதிகமான இடம்பெயர்ந்த மக்கள் உரிய ஆள் அடையாள ஆவணங்களின்றி காணப்படுகின்றனர் எனக் குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக அடையாள அட்டை இல்லாத சகல இடம்பெயர்ந்த மக்களுக்கும் அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அடையாள அட்டைகளை வழங்கும் நோக்கில், பிரதித் தேர்தல் ஆணையாளர் பி. எம். சிறிவர்தன தலைமையிலான குழுவினரே வடக்கிற்கு விஜயம் செய்துள்ளனர். (சி)

# போலியான பிரசாரங்களை மேற்கொண்டுவரும் தொண்டு நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 2

ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது பாரிய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என சில அரச சார்பற்ற நிறுவனங்கள் சுமத்தி வரும் போலிக் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு போலியான பிரசாரங்களை மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் பாரிய தேர்தல் வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன என உலகம் முழுவதிலும் போலியான பிரசாரங்களை மேற்கொள்வதனால் இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு போலித் தகவல்களை வழங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும், அவற்றுக்கு எதிராக சட்ட நவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்றுள்ள தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலான 115 முறைப்பாடுகளில் அநேகமானவை சிறு குற்றச்செயல்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்கள் எது சுயலாப நோக்கங்களை பூர்த்தி செய்யும் நோக்கில் இவ்வாறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

# சிவில் பாதுகாப்புப் படை நிதியப்பணம் தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படவில்லை

## பணிப்பாளர் மறுப்பு

கொழும்பு, ஜன. 2

சிவில் பாதுகாப்பு படையினரின் சேனவிதாநாயக்க நிதியத்திலிருந்து 150 கோடி ரூபா ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டன என மங்கள சமரவீர எம்.பி. ஊடகங்களுக்கு வழங்கிய செய்தியை, மேற்படி நிதியத்தின் பணிப்பாளர் அட்மிரல் சரத் வீரசேகர முழுமையாக மறுத்தார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சேனவிதாநாயக்க நிதியத்தில் தற்போது ஒரு லட்சம் ரூபா கூட சேமிப்பில் இல்லை. இந்நிலையில் எவ்வாறு 150 கோடி ரூபாவைச் செலவு செய்ய முடியும். தேர்தல் காலத்தில் ஜனாதிபதிக்கு அவதூறு செய்வதற்கென்றே திட்டமிட்டுச் சிலர் இவ்வாறான பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளனர். இந்தப் பிரசாரங்களில் எந்த வித உண்மையும் இல்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார். (சி)


## நீங்காத நினைவு அலைகள்

ஈராண்டு நிறைவு

மண் மகிழ 06.05.1935

விண் மகிழ 25.12.2007



கந்தப்பிள்ளை நாகரட்ணம்

ஓராண்டு நிறைவு

மண் மகிழ 06.08.1939

விண் மகிழ 16.10.2008



திருமதி நாகரட்ணம் சிவபாக்கியம்

அன்பினால் அரவணைத்து அகிலத்தில் உயரவைத்தீர்
இன்பமே நாம் பெற்றுய்ய துன்பமே சுமந்து நின்றீர்
பண்புடனே கல்வி அறிவு பெற்றோங்கப் பாரினில் வழி சமைத்தீர்
பொன்னுடன் பொருளும் பெற்று புவியினில் ஓங்க வைத்தீர்
தன்னலமற்ற சேவைத் தியாகத் தீபமாய் ஒளிரும் எம் கண்களானீர்
என்றுமே எம்மிதயக் கோயிலின் அணையா ஜோதியாய் ஒளிர்கின்றீரே
குன்றிலே வாசம் செய்யும் கந்தவேள் பாதக்கமலத்தில் இதமாக நீவிர் வாழ
எந்நாளும் குமரன் சேவடி இறைஞ்சியே வேண்டுகின்றோம்.

மாரீசன் கூடல்,
இளவாலை.

குடும்பத்தினர், மக்கள், [illegible]
பேரப்பிள்ளைகள், [illegible]

(92074)

## மரண அறிவித்தல்

### திருமதி காத்தமுத்து தேவசுந்தரி அம்மாள்



காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட காத்தமுத்து தேவசுந்தரி நேற்று முன்தினம் (31.12.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோபாலசாமி- காமாட்சி அம்பாள் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற காத்தமுத்துவின் பாசமிகு மனைவியும் விஸ்வகுமாரின் அன்புத்தாயும் இராகவமூர்த்தியின் (USA) அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற Dr.விஸ்வரஞ்சனின் சிறிய தாயும் சிவசுந்தரி ஞானசந்திரன் (ஞானி) ஆகியோரின் மாமியும் இராஜரத்தினம் (ராயு) பேர்த்தியுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2010) சனிக்கிழமை முற்பகல் 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு.
தொ.பே: 0213734229

தகவல்:
(92077) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்க்கம் மிக்க திருப்பு முனையில் தமிழர்கள் இன்று!

**அன்று முதல் இன்று வரையில் இலங்கையின் அரசியலோடு தம்மைப் பிணைத்துக்கொண்டு, பலதரப்பட்ட விதங்களில் போராடி அனுபவப் பாடங்களைக் கற்றுக் கொண்ட தமிழ் அரசியல் தலைவர்கள், அவர்களின் வழி வந்தவர்களாக ஒருவிதத்தில் கருதப்படும் இன்றைய அரசியல் தலைவர்கள் குறிப்பாகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்து பவர்கள் என்று கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் - காத்திரமாகச் செயற்படாது குழம்பிப்போய்க் காலத்தை இழுத்தடிப்பதனால் சிதறுண்டு போகின்றனர் என்ற சாரப்பட அமைகிறது இந்த அரசியல் ஆய்வுக் கட்டுரை.**

**சந்துன் ஜீவந்த என்பவரால் எழுதப்பட்ட இக்கட்டுரை'ரிவிர' பத்திரிகையில் வெளியாகியது.**

**அதன் தமிழ் வடிவமே இது.**

ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாகத் தாம் எடுக்கவுள்ள தீர்மானம் எந்தவிதமானதாக அமையவேண்டியுள்ளது என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலை தர்மசங்கடமானதாகும்.திரிசங்கு நிலையிலேயே இன்னமும் அது உள்ளது.



அதன் பிரதிபலிப்பே ஜனாதிபதித் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் வேட்புமனுத்தாக்கலாகும்.

தோஷம் பிடிப்பது இன்றல்ல, நாளையே எனக் கூறுவது போன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மான மும் நாளுக்கு நாள் தாமதமாகிக்கொண்டே வருகின்றது. அந்த இடைவெளிக்குள் அதன் பொருத்துக்கள் (கட்சிகள்) ஒவ்வொன்றாகக் கழன்று செல்ல ஆரம்பித்துள்ளன.

### இரண்டு மாற்று வழிகளே இப்போது எஞ்சியுள்ளன

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகப் புறம்பானதொரு தமிழ் வேட்பாளரை நிறுத்துவதில்லையென்பதாக அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்தது. அதற்கமைய அவர்களுக்குத் தற்போது எஞ்சியிருக்கும் மாற்றுவழிகள் இரண்டாகும். அதாவது, ஒன்றில் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பது அல்லது முன்னணி வேட்பாளர்கள் இருவருள் எவரேனும் ஒருவருக்கு ஒத்துழைப்பு வழங்கி நிற்பது என்பதாகும்.

இந்த இரண்டு மாற்றுவழிகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதும் கூட அவர்களுக்குப் பெரும் சிக்கலொன்றாகியுள்ளது. அவர்களது தீர்மானங்கள் தொடர்ச்சியாகத் தாமதமடைந்து வருவதன் காரணமாகவே ஜனாதிபதித் தேர்தலில் புறம்பாகப் போட்டியிடுவதற்கு சிவாஜிலிங்கம் தீர்மானம் மேற்கொண்டார்.

### சிவாஜிலிங்கத்தின் போக்கு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த சிவாஜிலிங்கம் சிங்கள மக்களிடையேயும் பிரபலமடைந்துள்ளார். கடந்த காலத்தில் சிங்களத் தொலைக்காட்சிச் சேவைகளில் இடம்பெற்ற அரசியல் விவாதங்களில் அவர் பங்களிப்புச் செய்திருந்தமையே அதற்குக் காரணமாகிறது.

2004 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான சிவாஜிலிங்கம் ரெலோ அமைப்பைச் சேர்ந்தவராவார்.ஸ்ரீசபாரத்தினத்தினால் ஆரம்பிக்கப்பட்ட ரெலோ அமைப்பானது அன்றைய காலகட்டத்தில் ஆயுதக்குழுவொன்றாகவே அறிமுகமாகியிருந்தது. பிற்காலத்தில் ரெலோ அமைப்பானது, ஜனநாயக அரசியல் நீரோட்டத்துடன் தன்னை இணைத்துக் கொண்டது. இந்த அமைப்பின் தலைவரான ஸ்ரீ சபாரத்தினம் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பினால் படுகொலை செய்யப்பட்டார்.

மேற்படி ரெலோ அமைப்பின் இன்றைய தலைமைத்துவத்தை ஏற்றிருப்பவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனேயாவார். இவரும் 2004 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்டு அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத்

**தமிழில் : சரா**

தெரிவானார். இவரை விடவும் மேலும் மூன்று ரெலோ உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். வினோநோதராதலிங்கம், சிறிகாந்தா மற்றும் சிவாஜிலிங்கம் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களே அவர்களாவர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடும் சிவாஜிலிங்கத்துக்கு பக்கபலமாக சிறிகாந்தாவும் ஒத்துழைப்பு வழங்கி நிற்கிறார். அதற்கமைய, ரெலோ அமைப்பானது இன்று இரண்டாகப் பிளவுண்டு போயுள்ளது. வடக்கின் பிரபல அரசியல் கட்சியொன்றான ரெலோ அமைப்பைப் பிளவுபடுத்தி விட எதிர்வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலே காரணமாகியுள்ளதெனக் கூறுவது தவறாக மாட்டாது.

### கூட்டமைப்பின் மூத்தோர் சிவாஜிலிங்கத்துக்கு எதிர்ப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தமிழ் மக்கள் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டாலும் கூடத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பான்மைத் தரப்பான மூத்த உறுப்பினர்கள் அவரது இத்தீர்மானத்துக்கு விரோதமானவர்களே. கட்சியின் கருத்துக்கு எதிராக அவர் செயற்பட்டுள்ளார் என மாவை சேனாதிராஜா கருத்துக் கூறியிருந்தார். அத்தோடு இது விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து எந்தவிதமான ஒத்துழைப்பும் சிவாஜிலிங்கத்துக்குக் கிட்டமாட்டாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நாடாளுமன்றத்துக்குத் தாம் தெரிவான கட்சியின் ஒத்துழைப்புக் கூட அவருக்குக் கிட்டாத நிலையில், தமிழ் மக்களின் ஒத்துழைப்பு அவருக்குக் கிட்டக் கூடுமா என்பதும் பிரச்சினைக்குரிய தொன்றேயாகும். பெரும்பாலான தமிழ் அரசியல் நோக்கர்களின் கருத்து வெளிப்பாடுகளும் கூட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்துக்குத் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு கிட்டமாட்டாது என்பதாகவே உள்ளது.

சிவாஜிலிங்கம் கடந்த 2004 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகப் போட்டியிட்டு 42 ஆயிரத்து 191 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார். ஆனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அதைக் கடந்து செல்லும் வாக்குத் தொகையொன்றைப் பெறுவதென்பது சிவாஜிலிங்கத்துக்குப் பெரும் சிரமமானதொரு கருமமாகவே இருக்கலாமெனவும் மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.



### எதிரான கருத்துகள்

நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங் கம் வேட்புமனுவைத் தாக்கல் செய்ததன் பின்னர் அடுத்து வந்த தினத்தில் வெளியான தமிழ்ப் பத்திரிகைகளில் அவரது இக்களமிறங்கல் குறித்து கடும் கவனம் செலுத்தப்பட்டிருந்ததைக் காணமுடிந்திருந்தது. சில பத்திரிகைகளின் ஆசிரியர் தலையங்கங்களிலும் கூட இக்காரணம் ஆழமாக ஆராயப்பட்டிருந்தது.

ஆனால், இவை எதுவுமே சிவாஜிலிங்கத்துக்கு சாதகமாக எழுதப்பட்ட கருத்துகளாக இருக்கவில்லை. பெருமளவு தமிழ்ப் பத்திரிகைகள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் இம்முயற்சி பலனற்றதொன்று என்றவாறே தமது பிரசுர ஆக்கங்களில் அவை கருத்து வழங்கியிருந்தன. வரவிருக்கும் பொதுத் தேர்தலில் அவர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாவதும் கூட, பெரும் சிக்கலானதொரு கருமமாகவே அமையலாமெனவும் சில பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள் தெளிவுபடுத்தியிருந்தன. இவையனைத்தையும் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது, ஜனாதிபதித் தேர்தலில் தனித்து நின்று போட்டியிடும் சிவாஜிலிங்கத்தின் தீர்மானத்துக்குத் தமிழ்ச் சமூகத்திடமிருந்து சாதகமான பிரதிபலிப்பு கிட்டமாட்டாது என்பது தெளிவாகிறது.

### தமிழ்ச் சமூகத்தின் கருத்து

அவ்வாறெனின், தமிழ்ச் சமூக்கத்தின் சாதகமான பிரதிபலிப்பு எவ்விதத்தில் அமையக்கூடுமென்பது இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

அதாவது, பெருமளவு தமிழ்ப் பத்திரிகைகளின் கருத்து வெளிப்பாடுகளுக்கு அமைய இன்றைய சந்தர்ப்பத்தில், தமிழ் மக்களுக்குப் பெரிதும் இலாபகரமானதொரு தீர்மானமாக அமைவது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னணி வேட்பாளர்கள் இருவருள் ஒருவருக்கு ஒத்துழைப்பு வழங்கி நிற்பதேயாகும். அவர்களுள்ளும் வெற்றிகான சாதகங்கள் பெருமளவில் தென்படும் பிரமுகருக்கு ஒத்துழைப்பு வழங்கி நிற்பதே பெரிதும் புத்திசாலித்தன மானது என்பதே இக்கருத்தியல் வாதங்களி னூடாக மேலும் தெளிவுபடுத்தப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காலத்தை இழுத்தடிக்கும் கொள்கைக்கு இதுவும் கூட, தாக்கத்தை ஏற்படுத்துமொரு காரணியாகிவிட்டுள்ளது.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இன்று வரையிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனோ அல்லது ஜெனரல் சரத் பொன்சேகாவுடனோ உத்தியோகபூர்வ மட்டத்தில் பேச்சுகளை ஆரம்பிக்கவில்லை. ஆனாலும், எமக்குக் கிட்டியுள்ள தகவல்களுக்கு அமைய, இந்த இரு பிரமுகர்களுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட மட்டத்தில் தொடர்பாடல்களை ஆரம்பித் துள்ளனர்.

அரச தரப்பினர் சார்பாக இக்கலந்துரையாடல்களில் நாடாளுமன்ற உறுப்பினரான பஸில் ராஜபக்ஷ பங்களிப்பு வழங்கி வருவதோடு, எதிரணியின் சார்பில் பங்களிப்பு வழங்குபவர் ரணில் விக்கிரமசிங்கவாவார்.

### காலத்தை இழுத்தடித்தால் பிளவு, குழப்பம் நேரும்

இந்நிலையில், இந்த இரு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களிடமிருந்தும் தம்மால் பெறக்கூடியவைகள் எவை? அவர்களது தேர்தல் பிரகடனங்களில் எந்தவிதத்திலான முன்வைப்புக்கள் இடம்பெறக் கூடும்? வடக்கு, கிழக்குத் தொடர்பாக அவர்கள் எந்த உருவிலான அரசியல் தீர்வை முன்வைக்கக்கூடும்? போன்ற காரணிகளைத் தெரிந்து கொள்வதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுமையிழந்த நிலைக்கு உள்ளாகியுள்ளது. அவசரம் காட்டிவருகிறது. அதாவது, இவையனைத்தையும் தெரிந்து கொண்டு தமது தீர்மானத்தை வெளிப்படுத்துவதே அதன் உள்நோக்கமாகவுள்ளது. இருந்தபோதிலும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் ஜனபதிபதி வேட்பாளர் தீர்மானத்தின் காரணமாகப் பிளவுகளுக்கும்,குழப்பங்களுக்கும் உள்ளாகியிருப்பது போன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பானது மீளவும் அத்தகைய தொன்றைச் சந்திப்பதற்கு அதன் இந்த இழுத்தடிப்புக் காரணமாகக் கூடும்.

### பகிஷ்கரிப்புக் கோரிக்கை

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களில் யாருக்கு ஒத்துழைப்பு வழங்குவதென்ற வினாவுக்கு உறுதியானதொரு பதிலைக் கண்டறிய இயலாது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு காலத்தை இழுத்தடித்து வருகையில், தேர்தல் பகிஷ்கரிக்கப்பட வேண்டியுள்ளதாக முன்வைக்கப்படும் கருத்தியல் வாதமும் மீளவும் தலை தூக்கியுள்ளது. எந்தவொரு தரப்புக்கும் ஒத்துழைப்பு வழங்கக் கூடாதெனக் கடும் பிடியில் நிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்(இவர், பிரமுகர் குமார் பொன்னம்பலத்தின் புதல்வராவார்) மற்றும் 2004ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பாகப் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற (யாழ்ப்பாணத்தில் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து77 விருப்பு வாக்குகளைப் பெற்றவர்) செல்வராஜா கஜேந்திரனும் உள்ளனர். சிங்களப் படையை வீடுகளுக்கு அனுப்பி வைக்க சவப்பெட்டிகளைத் தயார் செய்ய வேண்டியுள்ளதாகக் கூறி கடந்த சந்தர்ப்ப மொன்றில் நாடாளுமன்றத்தினுள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நாடாளுமன்ற உறுப்பினரும் இந்தக் கஜேந்திரனேயாவார்.

இவை எவ்வாறானாலும் பிரதான வேட்பாளர்கள் இருவருள் ஒருவருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியுள்ளது என்பதே இன்னமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெருமளவு உறுப்பினர்கள் கொண்டுள்ள கருத்தாகியுள்ளது.

இலங்கையில் முன்னணி வகிக்கும் தமிழ்ப் பத்திரிகையொன்று அண்மையில் தனது ஆசிரிய தலையங்கம் ஊடாக முக்கியமானதொரு கருத்தை வெளிப்படுத்தியிருந்தது - சுட்டிக்காட்டியிருந்தது. அதாவது, தமிழ் மக்களுக்குச் சரியான மார்க்கத்தைக் காட்டி நிற்பதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் தவறியுள்ளனர் - திறனற்றுப் போயுள்ளனர் - என்பதேயாகும். அத்தோடு நில்லாமல் தேர்தல்களின் போது மிகச்சரியான அரசிய தீர்வை முன்னெடுப்பதற்கு மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டாது நின்றுள்ளதன் காரணமாகத் தமிழ்ச் சமுதாயம் பின்னடைவு நிலைக்கு உள்ளாகியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எவ்வாறான போதிலும், இன்று தமிழ்ச் சமுதாயமானது தீர்க்கம் மிக்கதொரு கட்டத்திலேயே வந்து நிற்கின்றது. தமது வாக்குகளுக்கு மிகச் சரியான பெறுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான பொன்னான சந்தர்ப்பமொன்று கிட்டியுள்ளதென்பதே இன்று சிங்களம், தமிழர்களென்ற பெருமள விலானோரின் நம்பிக்கையாகியுள்ளது.

### சுயமான முடிவு ஒன்றை தமிழர்கள் எடுக்கக் கூடும்

இடம்பெற விருக்கும் ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய கருத்தை முன்வைத்தாலும் - என்னதான் கூறினாலும் தமிழ் மக் கள் சுயமானதொரு தீர்வை எடுப்பதற்கே முன்வரக்கூடுமென்பதற்காகவே நாம் சந்தித்த தமிழ்ப் புத்திஜீவிகளின் தரப் பொன்று கருத்து வழங்கியுள்ளது.மேலும் தேர்தல் பகிஷ்கரிப்பு என்பது மடைமைத்த னமானது எனவும் அவர்கள் கருத்து வழங்கியிருந்தனர். சிங்களத் தலைவர்களு டன் பேச்சுகள் மூலம் கலந்துரையாடுவதன் வாயிலாகவே தமக்குரிய எதுவொன்றையும் வென்றெடுக்க இயலுமேயல்லாது அவர்க ளைப் பகிஷ்கரிப்பதால் அல்ல என்பதும் இந்தப் புத்திஜீவிகளின் கருத்தாயிருந்தது.

இது வடக்கு,கிழக்கு தமிழர் அரசியலின் புதிய அணுகு முறையாகும்-புதிய தோற்றமுமாகும். இதுவரையிலும் இக்கருத்து தோட்டப்பகுதி அரசியல் தலைவர்கள் கைக்கொண்டிருந்த கருத்தியலாகவே இருந்துள்ளது. எப்போதுமே அரசுடன் ஒத்துழைத்துச் செல்வதையே தோட்டப்பகுதி அரசியல் வாதிகள் கைக்கொண்டிருந்தனர். அதை எள்ளிநகையாடி வந்தவர்கள் வடக்கு, கிழக்கு அரசியல் வாதிகளே யாவர். தமக் குள்ள அவசியம், உள்ள அரசுடன் நயந்து பேசி எதையும் பெறுவதல்ல, தமது பாரம் பரிய கோரிக்கைகளை வென்றெடுப்பதே யென்பதாக வடக்கு , கிழக்கின் தமிழ் அரசியல்வாதிகள் பெரும்பாலான சந்தர்ப் பங்களில் கருத்து வெளிப்படுத்தி நின்றுள் ளனர். சிங்களத் தலைவர்களுடன் எந்த வொரு கொடுக்கல் வாங்கலும் இல்லை யென்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். ஆனால், இன்று நிலைப்பாடு முழுவதுமாக மாற்றமடைந்துள்ளது. சிங்களத் தலைவர்களுடன் இணக்கப்பாடுகளை எட்டுவதன் முக்கியத்துவத்தை இன்று வடக்குக், கிழக்கின் தமிழ்த் தலைவர்கள் தெரிவுடுத்தி வருகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காலம் கடந்தும் தாமதத்துக்குக் காரணமாகியிருப்பதும் இந்தச் சிக்கலேயாகும். தாம் சிங்களத் தலைவர்களுள் யாரைத் தேர்ந்தேடுப்பது என்ற சிக்கலுக்கும் அவர்கள் முகம் கொடுத் துள்ளனர்.

அதே சிக்கல்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதறுண்டு போவதற்கும் கார ணமாகியுள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பின் தோல்விக்குப் பின்னர், விடுதலைப் புலிகளுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் ஒத்துழைப்பு வழங்கி வந்துள்ள அரசியல் கட்சிகளும் கூட தோல்வியைத் தழுவ ஆரம் பித்துள்ளன.



இச்சரிவு நிலைக்குக் காரணமான கருத்தியல் வாத ரீதியிலான ஏதுக்கள் ஏற் கனவே ஆரம்பமாகி முடந்து விட்டுள்ளன. இக்கட்சிகளின் மக்கள் செல்வாக்கென்ற அடித்தளத்துக்கு ஏற்படவிருக்கும் கதி எவ்வாறானதாக இருக்கக்கூடுமென்பதைக் கூறுவதற்கு இன்னமும் காலம் கனியவில்லை. ஆனால், ஒரு விடயத்தை இங்கு நேரடியாகவே கூறி விட முடியும். அதாவது, வழிவழி வந்துள்ள தமிழ் அரசியல் கட்சிகள் போன்றே அவர்களது வழிவந்த கருத்தியல் வாதங்களும் கூட தீர்க்கம் மிக்கதொரு திருப்பு முனையில் வந்து நிற்கின்றன என்பதாகும். அவர்களது எதிர்காலமும் கூட, இந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் மேற்கொள்ளும் தீர்மானத்துக்கு அமையவே அதன் முடிவும் தீர்மானிக்கப்பட்டவுள்ளது. அது , தமிழ் மக்களது எதிர்காலத்துக்கும் கூட, தீர்க்கமானதொரு தாக்கத்தை ஏற்படுத்துவது நிச்சயமே. ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் (காற்றாடி) ஏற்றும் நிகழ்வு



இந்தப்பட்டம் (காற்றாடி)

இலங்கையின் தலைநகர் முதல் ஏனைய அனைத்து மாகாணங்களிலும் நிகழும் ஒரு முக்கிய நிகழ்வாகும். குறிப்பாக இளைஞர்கள் முதல் வயது வந்தவர்கள் வரை ஆர்வமுள்ள நிகழ்வாக நடைபெற்று வருகின்றது. இவை காற்றின் காலநிலைகளை மையமாகக் கொண்டு நடைபெற்று வருகின்றது. கடலால் சூழப்பட்ட இடங்களில் கரைப்பக்கமாகவும் இதர இடங்களில் சில பண்டிகைகளை மையமாகவும் கொண்டு நடைபெறும் நிகழ்வாகும்.

எமது பொங்கல் பண்டிகை இந்தியாவில் உள்ள வட இந்தியர்களுக்கு சங்கராந்தி என்னும் பண்டிகையாகவும் கொழும்பு தலைநகரில் குறிப்பாக 'கோல்பேஸில்' வருடம் முழுவதும் குறைந்த நீளமுள்ள கயிற்றில் பட்டங்கள் சிறுவர் முதல் பெரியோர் வரை ஏற்றுவார்கள். அதே வேளை உல்லாசப் பயணிகளும் சீலையிலான விமான அமைப்புகள் கொண்ட பட்டங்கள் ஏற்றுவார்கள். இவற்றில் பல வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பட்டங்களாகும். இவை சீலைகளிலான சுருக்குக்குடை போல மடித்துச் செல்ல முடியும். இவை ஏற்றுவதற்கு தங்கூசி என்னும் நூலினால் ஏற்றப்படுபவையாகும். இவை பல வண்ணங்களிலானவை. பல உருவங்கள், அலங்கார அமைப்புகள் அச்சிடப்பட்டிருக்கும். மற்றும் ஏனைய பிரதேசங்களில் ரிசுக் கடதாசியினால் ஒட்டப்பட்ட பட்டங்களாகும்.

அவை படலம், கொக்கு, பிராந்து, நட்சத்திரப்பட்டம், வெளவால், கட்டுக்கொடி போன்ற பெயர்களில் பல வடிவமைப்பில் அமைக்கப் பட்டவையாக இருக்கும். யாழ் மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் பல காற்றுக் கொண்ட திசைகளில் ஏற்றப்படும். வடமராட்சி பிரதேசத்தில் தான் கூடுதலான பட்டம் ஏற்றும் நிகழ்வுகள் இடம்பெறும். இங்கு சித்திரை மாதப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பட்டம் ஏற்றும் நிகழ்வு நடைபெறும்.

இங்கே ஒவ்வொரு பட்டங்களின் பின்னாலும் பத்துப்பதினைந்து பட்டங்கள் ஒன்றின் பின் ஒன்றாக தொடுத்து விடப்பட்டிருக்கும். சில இடங்களில் ஓசை எழுப்பும் 'விண்நார்' பொருத்தப்பட்டு ங்...கீ....கீ.... என்னும் ஓசை எழுப்பிய வண்ணம் இருக்கும். மேலும் அப்பட்டங்களில் மின் குமிழ்கள் பொருத்தப்பட்டு இரவில் பல வண்ண நட்சத்திரங்கள் வானில் மிதப்பது போல் இரவில் காட்சியளிக்கும்.

வடமராட்சியில் கடற்கரையோரப் பகுதிகளில் பட்டம் ஏற்றும் போட்டிகளும் நடைபெறும். இப்போட்டியின் போது பல புதியவடிவமைப்புக் கொண்ட பட்டங்களும் போட்டிக்கு வரும். பல வண்ணங்களில் காணப்படும். இப்போட்டிக்கு மத்தியஸ்தர்கள் நியமிக்கப்பட்டு திறமையான வடிவமைப்பு நேர்த்தியாக வானில் ஏறி நிற்கும் பட்டங்களில் மதிப்பீட்டு அடிப்படையில் பரிசில்கள் வழங்கப்படும். குஜராத்திலும், ராஜஸ்தானிலும் இது ஒரு பட்டம் விடும் பண்டிகையாக கொண்டாடப் படுகின்றது.

மார்கழிமாத குளிரோடு வானத்தில் வானில் வளைந்து நெளிந்து ஆடும் பட்டங்கள் வந்து விடும். பல வர்ண வடிவங்களில் வான வீதியில் மின்னும் நட்சத்திரங்கள் போல் இரவு பகலாக காட்சியளிப்பதுடன் (விண்) இன்னிசை வேறு எழுப்பிக் கொண்டிருக்கும். இந்தியாவின் உத்திரபிரதேசத்தில் கான்பூர், பரேலி, ஆக்ரா, ஹைதராபாத் போன்ற ஊர்களில் தான் அதிகமான பட்டங்கள் ரிசுப்பேப்பர், பட்டு, பருத்தி, போன்ற மூலப்பொருள்களில் பட்டங்கள் தயாரிக்கும் மையங்கள் சங்கராந்தி பண்டிகை நெருங்கி வரும் இரண்டு மாதங்களுக்கு முன்பே இங்கிருக்கும் பட்டம் தயாரிக்கும் குடும்பங்கள் குஜராத், ராஜஸ்தான் போன்ற அயல் மாநிலங்களுக்கு இடம் பெயர்ந்து விடுவார்கள். இவர்களில் அனேகர் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களின் வருகையின் பின்பு மேற்படி மாநிலங்களின் வீதியோரங்களில் புதிது புதிதாக பட்டங்கள் விற்கும் கடைகள் தோன்றிவிடும். சங்கராந்திப் பண்டிகையின் போது இவற்றின் விலை உச்சக் கட்டத்தை எட்டும்.

ஆனால் சங்கராந்தி பண்டிகைக்கும் பட்டம் விடுவதற்கும் சரித்திரபூர்வமான இதிகாசமான ஆதாரங்கள் இருப்பதாக தெரியவில்லை. இதமான குளிர் காற்றுடன் மிதமான சூரிய வெப்பத்தில் தள்ளாடும் கிழவர் முதல் சிறுவர் வரை எல்லா வயதுக்கார ஆண், பெண் இருபாலாரும் கலந்துகொள்வர். இதை ஆதிகாலம் தொட்டு ஒரு விளையாட்டாக இப்பகுதி மக்கள் ஏற்படுத்தியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. சீனாவில் பட்டு, பருத்தி துணிகளில் சதுரம், முக்கோணம், நட்சத்திரம்,மீன், லாம்பு, விமானம், சீனர்களின் டிராகன் போன்ற வடிவங்களில் காணலாம்.

சிலவற்றில் ஒட்டப்பட்ட அலங்காரங்களையும் காணலாம். அதேபோல் இவற்றின் பரிணாமங்களும் மாறுபடும். இப்பட்டமேற்று வைபவத்தின் போது அவை ஏற்றும் கயிற்றினாலும் வாகனங்களுடன் மோதும் விபத்துக்களும் உயிர் ஆபத்துக்களும் ஏற்படும். மேலும் இவற்றை விட பட்டங்களின் கயிறு வாள் போன்ற "பிளேட்" கட்டி எதிராளியின் பட்டங்களுடன் மோதவிட்டு அப்பிளேட்டினால் மற்றப்பட்டக் கயிற்றினை அறுத்து விடுவதும் உண்டு. இதனால் அடி தடியும் ஏற்பட்டு வைத்தியசாலை வரையும் காவல் நிலையம் வரை செல்வதுமுண்டு. இப்பட்டம் ஏற்றும் படலம் இரவிலும் தொடரும். பட்டத்தின் கயிற்றின் நீளத்திற்கு வயர் மூலம் பட்டத்தில் வண்ண வண்ண மின் குமிழ்கள் பொருத்தப்பட்டு வானில் பறக்கவிடுவார்கள். இந்தியாவின் அகமதாபாத்தில் தைமாதத்தில் பட்டம் தயாரிக்கும் கலைஞர்களையும், பட்டம் ஏற்றும் கலைஞர்களையும் ஊக்குவி க்கும் வகையில் இங்கே ஒரு விழாவாகக் கொண்டாடப்படுகிறது.


பட்டம் ஏற்றும் போட்டியும், பந்தயமும் அங்கு அதிகளவில் நடப்பதால் இதில் பங்கேற்க சீனா , ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாட்டுக்கலைஞர்களும் வருகின்றார்கள். Kite Flying நாற்பதிக்கும் அதிகமான புத்தகங்கள் ஆங்கிலத்திலும் சீனா, ஜப்பான் போன்ற மொழிகளிலும் வெளிவந்துள்ளன. இப்புத்தகங்களின் தகவலின் படி சுமார் மூவாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு சீனாவில்தான் பட்டம் ஏற்றும் நிகழ்வு ஆரம்பமானதாம்.

* கிழக்கு வங்களாத்தில் துர்க்கா தேவி பூசைக்கு பின் விசுவகர்ம பூசை வருகின்றது. அன்று அவர்களுக்கு பட்டம் ஏற்றும் பண்டிகை.

* கிழக்கிந்திய தீவுகளில் பட்டங்களை கடலில், குளங்களில், மீன்பிடிக்கப் பயன்படுத்தினார்களாம். பட்டக்கயிற்றில் மீன் சிக்குவதற்கான புழுவை உணவை கொழுவி அதை நீருக்குள் விட்டு மீன் சிக்கியதும் வெளியே இழுப்பார்களாம்.

* தாய்லாந்து நாட்டின் ஒவ்வொரு அரசரும் அரசியும் குளிர்காயும் காலத்தில் பட்டங்களை வானில் ஏற்ற பண்டிதர்களையோ, துறவிகளையோ நியமிப்பார்கள். அதன் மூலம் அவர்களின் வேண்டுதல் (பிரார்த்தனை) அது கடவுளுக்கு சேர்வதாகக் கருதப்பட்டதாம்.

மேலும் விமானம் கண்டுபிடிப்பதற்கு பட்டம் எப்படி முன் உதாரணமாக இருந்தது என்று கூட இப்புத்தகங்கள் விளக்குகின்றனவாம். ஏனைய நாட்டில் ஆண்குழந்தை பிறந்தால் அக்குடும்பத்தினர் குழந்தையின் பெயரையும் அது பிறந்த திகதியையும் பட்டத்தில் ஒட்டி வானத்தில் ஏற்றி உலகிற்கு அறிவிப்பார்களாம்.




# எரியிற வீட்டி...

" மிஸ் வன்னியிலிருந்து சனம் வந்து கொண்டிருக்கி... இரண்டு, மூன்று நாளைக்கு தங்க வைக்கவேணும் " எ... அதிகாரியொருவர் கேட்டார். "என்ன எங்கட கொலிச்சுக்... வேண்டாம் தம்பி அதுகளை இருக்க விட்டா? எல்லாத்தை... வேண்டா வெறுப்பாய் பதில் வந்தது.

'சரிமிஸ் உங்கட கொலிச் வளவுக்குள்ள ஒரு தகர கொ... வைக்கிறம் என்று மீண்டும் அந்த அதிகாரி தயவாகக் கே...

சற்றுநேரம் யோசிச்ச அந்த அதிபர் கொட்டிலபோட்... என்று ஒருவாறு சம்மதித்தார்.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து மறுநாள் அந்த கொலிச் வளவுக்குள் பெரியளவிலான தகரக் கொட்டில்களை போட்டனர்.



வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த சனங்களில் ஒரு தொகுதியினரை அந்த கொட்டில்களில் இருத்தினார்கள்.

அந்த வளவுக்குள் சனங்கள் இருக்கும் அதிபரின் நெருக்குவாரங்கள் அதிகரித்த வ... முகாமுக்குள் முடங்கி அவர்களின் வாழ்வு நகராமல்... சில மாதங்களின் பின் அந்த வளவுக்குள் இருந்த மக்... மீள்குடியமர்த்தப்பட்டார்கள்.

அந்த மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பின்னர் அங்கு... அகற்றுவதற்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் அவ... அங்கு அதிர்ச்சியொன்று காத்திருந்தது.

அங்கு போடப்பட்டிருந்த கொட்டில்... தக... காணாததுதான் பெரும் அதிர்ச்சியாய் இரு...

அந்தப் பொருள்கள் எங்கு மாயமா... குறிப்பிட்ட அந்த அதிபரின் வீட்டில் இருப்பதாக தகவல்...

சம்பவத்தை வாசித்தீர்களா? இது எங்கு நடந்திருக்கு... சிந்திக்கிறீர்கள்? தொழில்களிலே மிகவும் மகத்துவமான... போற்றப்படுகின்ற ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கின்ற க... நடந்திருக்கிறது.

என்ன படித்த சமூகமா இப்படிச்செய்கிறது என்று நி... யாரைத்தான் விட்டுவைத்தது. வன்னியில் இடம் பெற்ற... இழந்து ஏதிலிகளாக அல்லற்பட்டு - அவலப்பட்டு வந்... கலாசாலையில் தங்க வைப்பதற்கு சிறிச் சிணுந்... கொண்ட அந்த அதிபர் அவர்கள் விட்டுச் சென... பொறுப்புடன் எடுத்து யாருக்கும் தெரியாமல் தன்... மற்றவர்களின் விடயத்தில் தேவைகளில் அசண்... எமது தேவைகளை நிறைவேற்று வதில் மட்டும்...

இந்த விடயத்தை எனது நண்பன் ஒருவரிடம்... இப்படியும் மனிசரா? என்று சலித்துக் கொண்டப... லாபம் என்ற பழமொழியினைக் கூறிக்கொண்டிரு...

# "எப்போதோ முடிந்த காரியம்!"

பாடசாலைகளில் தமிழ் மொழி, 1999 - ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "புதியகல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்ட"த்திலிருந்தே இறங்கு முகங்கண்டு வருவதைச் செவ்விய தமிழறிஞரும் கல்வியாளருமாயிருக்க கூடிய யாவரும் புரிந்து கொண்டிருப்பர். இதுவரை அதனை நோக்காதவர் இருந்தால், அக்காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ச்சியாக வெளி யிடப்பட்டுவந்த தமிழ்மொழி,தமிழ் இலக்கியப் பாடநூல்களை வரிசையாக வைத்து அவற்றின் தரங்களையும் மொழியியற் குறை நிறைகள் அல்லது மொழிவழு-வழாநிலைகளையும் ஆராய்ந்து பார்த்தால் உண்மை நிலையைப் புரிந்து கொள்வர்.

மாணவர் ஒருவர், பதின்மூன்றாண்டுகள் பாடசாலையில் தமிழ்மொழியை அதுவும் தன் தாய்மொழியைப் பயின்றும், ஜி.சீ.ஈ. (உ/த) பெறுபேற்றில் கீழ் மட்ட அல்லது தவறிப்போன நிலையில் இருப்பாரேயானால், அதன் காரணம் மிகவும் ஆழத்தில் இருப்பது அறிவுடையோர்க்குப் புரியாமல்போகாது! நோய்கடுமையாகி முற்றி விட்டது! இனி, நோயைக்களைய எந்தக் கொம்பனுக்கும் முடியுமா?

தமிழைப்பிடித்த உருக்கன் நோய், அரசியல் களத்திலிருந்து தொற்றத் தொடங்கி கல்விச் செயற்பாட்டாளர், கல்வித்திணைக்கள அதிகாரிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர், பள்ளியாசிரியர் எனப் பரவி இறுதியில் மாணவர் வரை வந்தடைந்துள்ளது. இது ஒரு நச்சுநுண்ணுயிரித் தொற்று! அரசினது கல்வித்திட்டச் செயற்பாட்டுக்குள்ளேயே நோயின் 'கழுக்கம்' (இரகசியம்) புதைந்து கிடக்கிறது.



கல்வியாளர் என்றிருக்கும், அதிகாரமுள்ள-பட்டமும் பதவியும் கொண்ட 'சிலர்' அமைதியாய் இருந்து கொண்டே பாடத்திட்டம், பாடநூல்கள் மூலமும், தம்செல்வாக்கைப் பேராசிரியர்- பள்ளியாசிரியரிடம் செலுத்தி ஒரு வகை உள்ளச்சத்தை (நிமிர்ந்து பார்த்தாலோ உற்றுப்பார்த்தாலோ என்ன கேடு நேருமோ என்னும் அச்சம்) ஏற்படுத்திச் செயற்படுத்துவதன் மூலமும் தமிழைக் கெடுக்கும் திட்டத்தை- கொள்கையைக் கனகச் சிதமாகச் செயற்படுத்தி வருகின்றனர்.

பல்கலைக் கழகத்தமிழ்ப் பேராசிரியர்மாருக்கும் வாயில்... வலுவில்லை என்றால், மற்றையோரைக்கேட்பானேன்; அவரும் மேலோர் வழியே!

பாடசாலையாசிரியர் இரங்கத் தக்கவர்; அவருக்கு இருண்டது விடிந்தது ஒன்றும் தெரியாது. பாடநூலை மாணவரை வாசிக்கச் சொல்வது அல்லது தாம் வாசித்துக் காட்டுவது (பாடத்தில் உள்ள சரி பிழை ஆராய்வதில்லை. ஒருவேளைபாடம் அவருக்கும் விளங்குவதில்லை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வீட்டில்...




...வந்து கொண்டிருக்கிறது. உங்கட கொலிச்சுக்குள்ள
...வைக்கவேணும் '' என்று பிரதேச செயலக
...ன எங்கட கொலிச்சுக்குள்ள வன்னிச் சனங்களோ?
...க விட்டா? எல்லாத்தையும் நாசமாக்கிப் போடுங்கள்.
...து.
...புக்குள்ள ஒரு தகர கொட்டில் போட்டுத் தங்க
...அதிகாரி தயவாகக் கேட்டார்.
...பர் கொட்டிலபோட்டு சனத்தை இருத்துங்கோ



...போதெல்லாம் அங்குள்ள
...ரங்கள் அதிகரித்த வண்ணமிருந்தது.
...ின் வாழ்வு நகராமல் நகர்ந்து கொண்டிருந்தது.
...ளவுக்குள் இருந்த மக்கள் தமது சொந்த இடங்களில்

...பட்ட பின்னர் அங்கு போடப்பட்ட கொட்டில்களை
... நிறுவனங்கள் அவ்விடத்திற்குச் சென்றபோது
...ந்து.
...டில்... ம், தகரம் மற்றும் ஏனையவற்றைக்
... இ...
...மா... ராய்ந்த போது அவையாவும்
...ல் இருப்பதாக தகவல் கசிந்திருக்கிறது.
...து எங்கு நடந்திருக்கும் என்று தானே
...மிகவும் மகத்துவமான, புனிதமான தொழில் என்று
... பயிற்றுவிக்கின்ற கலாசாலையொன்றில்

...செய்கிறது என்று நினைக்கிறீர்கள்? ஆசை
...னியில் இடம் பெற்ற கோரயுத்தத்தில் எல்லாமே
...-அவலப்பட்டு வந்த மக்களினை அந்தக்
...சீறிச் சினந்து வேண்டா வெறுப்பாய் நடந்து
...விட்டுச் சென்ற கொட்டகை, தளபாடங்களை
...தெரியாமல் தன் வீட்டில் வைத்திருக்கிறார்.
...களில் அசண்டையீனமாக நடந்து கொள்ளும் நாம்
...தில் மட்டும் சாதுரியமாக நடந்து கொள்கிறோம்.
...ா ஒருவரிடம் சொன்ன போது அடப்பாவியள்
...க் கொண்டபடி ''எரியிற வீட்டில் பிடுங்கினது
...ிக்கொண்டிருந்தார்.

கவிநேசன்

மொழிப்பாடமல்லவா?) பின்பு அவர்தாமும் தம்பாடும்! பெரும்பாலான மாணவர், ''தமி... ானே வரும்'' என்னும் மனப்...போக்குடை யவர். ஆண்டு தோறும்




தள்ளுண்டுபோவர். (Automatic Promotion) உடனைத்து மட்டும் சீருடை அணிந்து செல்வர்; மற்றைய தனியார் கல்வி நிலையங்களுக்கோ பல்கலைக்கழகங்களுக்கோ கலைவிழா, திருவிழா, பிறபொது நிகழ்ச்சிகளுக்கோ செல்லுகையில் அவர் தம் இனப்பண்பாட்டை நிலையாகக் கைக்கொள்வதில்லை; அவர் விரும்பிய வாறே பிற இனப்பண்பாடுகளை ஆடைமுதல் எல்லா வகையிலும் பின்பற்றுவர். (இங்கே குறித்த ஆடை, கடிதார் அல்லது பஞ்சாபி முதலியவற்றை) வீட்டில் தொலைக்காட்சியிலும் பிறவாறும் திரைப்படம் போன்ற வற்றை பார்ப்பதிலேயே பெரும் பொழுதைக் கழிப்பர். கைத்தொலைபேசி (Hand Phone) கொண்டும் காலத்தை வீணே கழிப்பர். இத்தகைய மாணவருக்குத் தமிழ் தானேயும் வருமா?

ஆக, 'எல்லாம் எப்போதோ முடிந்தகாரியம்' எனினும், தன்மானமும் மொழி, இனம், நாடு, பண்பாடுகளிலே பற்றும் உடைய சான்றோர், இந்த உலகைத் திருத்த இயன்றவரை முயன்றுகொண்டேயிருப்பர். முயற்சி, ஊழையும் உப்பக்கம் காண வல்லது(புறங்காணவல்லது), திருவினையாக்குவது.

• ''நோய் நாடி நோய்முதல் நாடி
அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''

-அவ்வை-

# சிரிக்க சிந்திக்க



*ஒருவர்: கடிநாய் கவனம் எண்டு எழுதிக் கிடக்கு
மற்றவர்: திருடர்கள் வராமல் இருக்க.
*ஒருவர்:என்ன இப்படி வெப்பமாகக் கிடக்குது
மற்றவர்:சூரியனுக்குக் கிட்ட வந்திட்டம்
*ஒருவர்: சுகம் எப்படி?
மற்றவர்: சுற்றுச் சூழலைப் பேணாமல் சுகம் எப்படி வரும்.
*ஒருவர்: இவன் ஏன் இப்படிச் சிரிக்கிறான்?
மற்றவர்: பனை செய்கிற விளையாட்டு.
*ஒருவர்: வடக்கு கிழக்கு இணைப்பு....?
மற்றவர்: தமிழர்க்கு தாயகம் இல்லை!!
*ஒருவர்: தண்ணீர் பஞ்சமாக் கிடக்கு.
மற்றவர்: இலங்கையில் தமிழர் கண்ணீருக்குப் பஞ்சம் இல்லை
*ஒருவர்: சுடசுட தோசை இருக்கு
மற்றவர்:பூமிப்பந்து சூடு, குளிராத்தாங்கோ!
*ஒருவர்: பூமி ஆரம்பம் முதல்ல சுழல்கிறதோ?
மற்றவர்: பனையை பிரம்மா படைத்த பிறகு?
*ஒருவர்: வயிறு கொதிச்சு போகுது.
மற்றவர்: பூமிப்பந்து சூடு அது தான்.
*ஒருவர்: ஆக்கிரமிப்பாளன் பனையைத் தறிக்கிறான்.
*மற்றவர்: தாயக மயக்கத்தை அழிக்க திட்டமிடுகிறான்.

மு.ரகுபாலன் தமிழினி ...

# நகைச்சுவையில் பலவிதம்



நகைச்சுவை என்பது மனித வாழ்வில் இன்றியமையாத ஒரு குணாம்சமாகும். நகைச்சுவையை வெளியிடாத- நகைச்சுவையை சுவைக்காத மனிதன் வெறும் சடத்துக்கே ஒப்பாவான்.

சில மனிதர்களிடம் புன்னகை என்பதையே காணமுடியாது. இவர்கள் எப்போதும் முகத்தை ''உம்'' என்றே வைத்துக்கொண்டிருப்பார்கள். எந்தவித நகைச்சுவை சம்பவத்தையும் பார்த்து- அல்லது கேட்டு புன்னகை பூக்கும் குணம் இவர்களுக்கு இருப்பதில்லை. ஆனால் தாங்கள் நினைத்தால் நகைச்சுவையான பகிடிகளை அவிழ்த்துவிடுவார்கள். அவை பெரிதும் மற்றவர்களைப் புண்படுத்துவதாக- ஏளனம் செய்வதாகவே இருக்கும்- அவ்வாறு தாங்கள் விடும் பகிடிகளை தாங்களே இரசித்தும் சிரித்தும் கொள்வார்கள்- மற்றவர்களும் சிரிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். இப்படியான மனிதர்கள் ஏதோ ஒருவித மனச் சிக்கலுக்குள்ளானவர்களாகவே இருப்பர்.

பிறர் துன்பத்ததில் இன்பம் காண்பவர் மனச்சிக்கலுக்குள்ளான சிலர் துன்பங்களைக் கண்டு மட்டுமே சிரிப்பார்கள்- மகிழ்ச்சியடைவார்கள்- பிறருக்கு துன்பம் விளைவிப்பதன் மூலம் மகிழ்ச்சியைக் காண்பார்கள். நகைச்சுவை இருப்பதாக எண்ணிக் கொள்பவர்களும் உண்டு.

தெருவில் நின்று பிச்சை எடுக்கும் கிழவனைச் சீண்டி, அவர் கோபமுற்று இழி சொற்களால் கடிவதைக் கேட்டு சிரித்து மகிழ்பவர்களைப் பார்த்திருக் கிறீர்களா?

ஆஸ்பத்திரியில் காயமுற்றவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள விடுதிக்கு இருவர் வந்தார்கள். சிகிச்சை பெறுபவர்கள் உள்ள ஒவ்வொரு கட்டிலுக்கும் சென்று விசாரித்தார்கள். அந்த நிகழ்ச்சி நடந்தது பின்வருமாறு:

''இவருக்கு என்ன நடந்தது. என்ன காலில் பெரிய கட்டு?

ஒருவர் கேட்கிறார்.

கட்டிலில் இருப்பவரைப் பராமரிப்பவர் கூறுகின்றார்:

''சைக்கிளில் வந்தவரைக் கார் தட்டிப் போட்டுது'' என்று.

''கார் தட்டிப்போட்டுதோ ஹஹ் ஹஹ் ஹஹ் ............ ஏன் காருக்குள்ளே போனவர்?'' என்று கூறியபடி மற்றக்கட்டிலுக்கு போகிறார்.

''இவருக்கு என்ன வருத்தம்'' என்று கேட்கிறார்.

''மாடு இடித்துப் போட்டுது. அதுதான் முதுகிலே காயம்'' என்று கூறுகின்றார்.

''மாடு முட்டிப்போட்டுதோ ஹஹ் .......ஹா ஏன் இவர் திருப்பி முட்டாமல் விட்டவரே.....''

இப்படிப்பட்டவர்கள் பிறர் துன்பத்தில் இன்பம் காண்பவர்கள் அல்லவா!

ஒருவர் தனது கந்தோரில் இருந்து வீடு திரும்பியிருந்தார். உடைகளைக் களைந்துவிட்டு தேநீர் அருந்த ஆயத்தமானார். தேநீருடன் வந்த மனைவியை பார்த்து ''இன்றைக்கு எனக்கு நல்ல சந்தோஷம் பிள்ளை'' என்று கூறிவிட்டு வாய்விட்டுச் சிரித்தார்.

''அப்படி என்ன நடந்தது சந்தோஷப்படுவதற்கு'' என்று கேட்டாள் மனைவி.

''எங்கட மனேஜரையல்லவோ வேலையால நிப்பாட்டிப் போட்டாங்கள்'' என்று கூறிவிட்டு மேலும் சிரித்தார் அவர்.

சிலர் இருக்கிறார்கள் மற்றவர்களை சிரிப்புக்குரியவர்களாக பகிடிகள் விடுவார்கள். தாம் பெரிதாக பகிடிவிட்டதாகவும் எண்ணிக் கொள்வார்கள். ஆனால் மற்றவர்கள் அவரை வைத்து பகிடிவிட்டால் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். கோபித்துக் கொண்டு விடுவார்கள்.

பிறரைப் பகிடி செய்பவர்கள் தாங்கள் பகிடிக்குள்ளாகும் போதும் சகித்துக்கொள்ளும் தன்மை உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

### கலகலப்பாய் இருக்கும் மனிதர்

எந்த விடயத்திலும் கோபம் கொள்ளாமல் அதில் ஒரு நகைச்சுவையைக் கண்டு பிடித்து சிரிப்பவர் நல்ல மனிதராகவும் கலகலப்பான மனிதராகவும் இருக்கக் காணலாம்.

யாழ். சிவன் கோயிலடியில் சிலர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு பின்னர் கைக்கலப்பிலும் இறங்கினார்கள். அந்தவழியாக சென்ற எனக்கு கவலையாகவிருந்தது. அதுமட்டுமின்றி அடிபட்டவர்களில் ஒருவர் வெகுண்டு ''அடே எனக்கே அடித்துப்போட்டீர்கள், கொஞ்சம் பொறுங்கள் இப்போதே போய்த் திரும்பிவருகின்றேன். உங்கள் கால்களை முறித்து காட்டுகிறேன்'' என்று கூறிக்கொண்டு சைக்கிளில் ஏறிப்போய்விட்டார்.

இன்னும் கொஞ்ச நேரத்தில் அவ்விடத்தில் பெரும் போர் நடக்கப்போகிறது. யார் யாருக்கு கால்கள் முறியப்போகிறதோ என்று கவலைப்பட்டுக்கொண்டு நான் அங்கிருந்து போய் விட்டேன்.

காளிகோயில் கடந்து பெருமாள் கோயிலுக்கு சென்றபோது வெட்டுவேன், கொத்துவேன் என்று சவால் விட்டுவிட்டு வந்த நபர் கோயில் சிறுமதில் ஒன்றில் அமர்ந்து கடும் யோசனையில் ஆழ்ந்துபோய் இருப்பது தெரிந்தது. இதுவும் ஒருவகைப் பகிடிதான்.

ரம்யன்

# திருவிழாவில் தொலைந்தவர்கள்!

காலச்சக்கரம் சுற்றிச் சுழன்று
புதியதொரு தசாப்தத்தின்
வருகையின் நுழைவாயிலில் நாம்....
மாற்றங்கள் பல மாறி மாறி
வந்து போகின்றன!
ஆனாலும்.....
எங்கள் தலையெழுத்தோ
இன்னும் மாறவில்லை!

பொங்கல் பொங்கி வழிவகையில்
பானை உடைகிறது!
''தெய்வக் குற்றமாம்''
தெரிந்தவர்கள் சொன்னார்கள்
''என்னடா பொய்யுரை?
பானையை மாற்று''
பக்கத்தில் இன்னொருவன்
அவனது கூற்றிலும்
ஆயிரம் அர்த்தங்கள்....!
யாரை நோவது? யாரிடம் உரைப்பது?
காலம் செய்த சதியென்று
கண்ணீரில் குளிக்கின்றோம்!

சிக்கெடுக்க முடியாத இடியப்பமாய்
சிக்கல்கள் பல எமக்குள்
நான் பெரிது! நீ பெரிது!
நாய்ச்சண்டைகள் நாளாந்தம்...!
யார் வந்து எம் சுமைக்கு
முட்டுக் கொடுப்பீர்?

நாங்கள்.....
முடிவுகள் இல்லாத தொடர்கதைகள்!
நீண்டு கொண்டே செல்லும்
தொலைக்காட்சி நாடகங்கள்!

அன்னை அழுகின்றாள்
ஆவி பிரியுதென்று....
அம்மான் வருகின்றார்
காணியை எழுதென்று!
அண்ணனுக்கும் தம்பிக்கும்
அடிக்கடி வெட்டுப்போர்
அடுத்த வீட்டானுக்கோ
ஆனந்தக் கூத்தாட்டம்!

எம்மினம் அழிவதற்கு
இன்னொருவர் வேண்டாம்
எலும்புகள் கௌவுதற்கு
நாங்களே நரிகளாய் நாளும்...!

உங்கள் வீம்புகளை
ஓரம் கட்டிவிட்டு
ஒரு நிமிடம் எங்கள்
உறவுகளைப் பாருங்கள்!

அப்பாவைப் பறிகொடுத்து
அஞ்சு பிஞ்சுகள் குழ....
அடுத்தவேளை உணவுக்காய்
அல்லலுறும் தாய்மார்கள்

உற்ற துணைவன் வானேக
பெற்றவர் நிழலில்
விதியை நொந்து
விழிநீரம் சொரியும் சோதரிகள்!

கண்ணிழந்து கையிழந்து - இரு
கால்கள்தானும் இழந்து
மண்ணிறந்த உறவுகளின்
ஓலங்கள் காதில் விழவில்லையோ?

எப்படிக் காதில் விழும்?
கைவிரலில் மைதடவும் காலமதில்
கணக்காய் வந்து தலைநீட்டி - நாம்
மெய்யுருகும் போது....
மேல் நாட்டில் உயர் வாழ்வு!

மீண்டும் திருவிழாவாம்......!
சுவாமிகள் எம்மருகில்
சுகம் கேட்க வருகின்றன!

இரத்தமும் சதையும்....
இறந்த உடலங்களை
இழுத்து மூடிய அவலங்களும்
இனி எமக்கு வேண்டாம்!

கோழிச் சண்டைகள் தவிர்த்து
கோரிக்கை ஒருமிப்போடு
உங்கள் பலத்தை....
உரிய இடத்தில் காட்டுங்கள்!

எந்தத் தலைக்கு
இராஜ கிரீடமென்று
சொந்த இனத்தை - உங்கள்
நெஞ்சில் நிறுத்தி முடிவெடுங்கள்...!

உண்மையை உரைக்கும்
ஊடகம் தன்னில்
உமிழ்நீர் சொரியாமல்
எம்மவர்....
உணர்வுகளை மதியுங்கள்!

பலரும் சேர்ந்தால் பலம்
தனியாய் பிரிந்தால் சவம்
இதுதான் என்றும் நிஜம்!

இனியேனும் நல்லதொரு
இனிப்பான முடிவெடுங்கள்!
இல்லையேல்.....
நீங்கள் உட்பட
நாமெல்லாம் நாளை
திருவிழாவில் தொலைந்தவர்களே!

வயாவையூர்
கலைஞன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PATRICIAN INSTITUTES
## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

**தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

**ஆரம்பம்: 04.01.2010**

## 01. COMPUTER COURSES

| | |
|---|---|
| A. ADVANCED IN COMPUTER PROGR AMMING | DURATION 8 MONTHS |
| B. DIPLOMA IN MICROSOFT OFFICE | DURATION 4 MONTHS |
| C. DIPLOMA IN TYP SETTING | DURATION 3 MONTHS |
| D. DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING | DURATION 4 MONTHS |
| E. DIPLOMA IN DESK TOP PUBLISHING | DURATION 4 MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L | DURATION 3 MONTHS |
| G. DIPLOMA IN WEB MULTIMEDIA | DURATION 4 MONTHS |
| H. DIPLOMA IN SOFTWARE ENGINEERING | DURATION 6 MONTHS |
| I. DIPLOMA IN MICRO MEDIA | DURATION 4 MONTHS |
| J. DIPLOMA IN VIDEO EDITING | DURATION 4 MONTHS |
| K. INTER NET & E-MAIL | DURATION 1 MONTH |
| L. PROFESSIONAL DIPLOMA IN GRAPHIC DESIGN | DURATION 6 MONTHS |
| M. COMPUTER HARDWARE TECHNOLOGY | DURATION 4 MONTHS |
| N. GENERAL IN FOR MATION TECHNOLOGY (GIT) | DURATION 4 MONTHS |
| O. INFORMATION & COMMUNICATION TECHNOLOGY (ICT) | DURATION 4 MONTHS |
| P. CHILDREN KIDS | DURATION 4 MONTHS |

## 02. CERTIFICATE COURSES

1. MS WORD - 2007 XP
2. MS EXCEL - 2007 XP
3. MS ACCESS - 2007 XP
4. MS POWER POINT - 2007 XP
5. VISUAL BASIC
6. JAVA
7. JAVASCRIPT
8. MYOB
9. ADOBE PHOTOSHOP
10. PAGEMAKER
11. FLASH
12. QULCK BOOK
13. SIMPLY ACCOUNTING
14. PRINT SHOP DELUXE
15. CORELDRAW

**DURATION 3 MONTHS EACH**

| | |
|---|---|
| 03. SHORT HAND AND TYPING (ENGLISH)<br>சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்)<br>கணனி மூலமும் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும். | DURATION 6 MONTHS |
| 04. SHORT HAND AND TYPING (TAMIL)<br>சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்)<br>கணனி மூலமும் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும். | DURATION 6 MONTHS |
| 05. GENERAL MOTOR MECHANISM<br>(Petrol & Diesel வாகனங்கள்) மோட்டர்கள் திருத்துதல் | DURATION 6 MONTHS |
| 06. GENERAL ELECTRCIAN (Wiring & Re Winding)<br>ஜெனரல் எலக்ரிஷன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) | DURATION 6 MONTHS |
| 07. RADIO & T.V. REPAIRING<br>வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் | DURATION 8 MONTHS |
| 08. LATHE MACHINE OPERATION<br>கடைச்சல் இயந்திரப் பயிற்சி (on the job trainig வழங்கல்) | DURATION 3 MONTHS |
| 09. ARC WELDING<br>மின் ஒட்டுநர் பயிற்சி (on the job trainig வழங்கல்) | DURATION 3 MONTHS |
| 10. CARPENTRY (With use of machinery)<br>மரவேலை (on the job trainig வழங்கல்) | DURATION 6 MONTHS |
| 11. REFRIGERATION AND AIRCONDITIONING<br>குளிர்சாதனப்பெட்டி திருத்துதல் | DURATION 6 MONTHS |

**வாகனத் தகுதிச் சான்றிதழ் - 2010** 2010 ஆம் ஆண்டுக்கான வாகனத்தகுதிச் சான்றிதழ் தை மாதம் தொடக்கம் வழங்கப்படும் என்பதனை வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு:

1. பயிற்சிக் கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரங்காட்டி பங்குக் குருவானவரின் (Parish priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெறலாம்.
3. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (சி/563817)

மேலதிக விவரங்களுக்கு: REGISTRAR
PATRICIAN INSTITUTE
61 (59), St. PATRICK'S ROAD, JAFFNA.
T.P.No.: 021 222 6148, FAX: 021 222 6148 E-Mail: spitte@sltnet.lk


### சண்டிலிப்பாயில் இலகு வேலைத்திட்டம் ஆரம்பம்

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் 2010 ஆம் ஆண்டிற்குரிய இலகு வேலைத்திட்டம் நாளை ஆரம்பமாகி 17 ஆம் திகதி வரை நடைபெறும் என்று பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தெரிவித்துள்ளார்.

இவ்வேலைத்திட்டம் இதுவரை 11 நாள்கள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்ததென்றும் இனி மேல் 15 நாள்கள் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (1-100)

### நில அளவையியலாளர் பரீட்சையில் எழுவர் சித்தி

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் 2009 இல் இடம்பெற்ற நில அளவையியலாளர் பரீட்சையில் 7 தமிழர் சித்தியடைந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் சித்தியடைந்தவர்களின் பெயர் விவரம் வருமாறு : செல்வராசா அமரநத்- கம்பர்மலை, வல் வெட்டித்துறை குகதாஸ் பிரதீப்குமார் - கொக்குவில் மேற்கு, சபாரத்தினம் திலீப்குமார்- ஆனைக்கோட்டை, பரமசிவம் ஜெகதீபன்- சுழிபுரம் மத்தி, செல்வராசா ஜெசிந் 71/12,திருநெல்வேலி, பசுபதி உசேந்திரன்- ஆனைக்கோட்டை,இராஜநாதன் சாந்தினி, அராலி வடக்கு. (1-302)


# நியூ கேம்பிறிச் (அளவெட்டி)

புதிய நிர்வாகத்தில் | புதிய ஆண்டில் புதிய உதயம்

| பாடம் | ஆசிரியர்கள் |
|---|---|
| தமிழ் | அமரசிவம், பிலால ஆசிரியர் |
| இந்து நாகரிகம் | ரமணன் |
| நாடகம் | மங்களேஸ் |
| வரலாறு | கஜன் |
| புவியியல் | குமரன் |
| பொருளியல் | ஸ்ரீ |
| இலகு கணிதம் | தவசேகர் |
| மனையியல் | மஜிபன் |
| இந்துசமயம் | ரமணன் |
| கிறிஸ்தவம் | யூட் |
| புள்ளிவிவரம் | தவசேகர் |
| ஆங்கிலம் | பிரியதர்சனன் |
| ஆங்கில இலக்கியம் | சுப்பிரமணியம் |
| வர்த்தகம் | நந்தீஸ் |
| கணக்கீடு | சீலன் |
| பொருளியல் | ஸ்ரீ |
| பௌதிகவியல் | ஜெயம் |
| இரசாயனவியல் | அன்பழகன் |
| உயிரியல் | திவாகர் |
| இணைந்த கணிதம் | ஐங்கரன் |
| உயர் கணிதம் | சிவகரன் |

(இ/563823)

- நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு அனுமதி முற்றிலும் இலவசம்
- தரம் 1- O/L புதிய ஆசிரியர் குழாமின் ஒன்றிணைந்த சேவை.
- சிறப்பு வகுப்பு தரம் 5 "ஆசிரியர் அன்பழகனின் வழிகாட்டலில் பரீட்சை"

பேச்சு ஆங்கிலம், பேச்சு சிங்களம் புதிய பிரிவு ஆரம்பம்
By: பிரியதர்சனன்



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

**றோயல் குளுக்கோஸ்**

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

**றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.**

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670

அனைத்துப் பாமசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:

ஸ்ரீ ஜெகன் ஜனந்மலையப் ட்றேடர்ஸ்

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



# SUBRA (14)

2012 A/L , கலை, வர்த்தகம், கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம் 05.01.2010 மாலை 4.30 மணி.

| பாடம் | சித்தன்கேணி | வட்டுக்கோட்டை |
|---|---|---|
| தமிழ் | யசிந்தன் | நாக.தமிழிந்திரன், அமரசிவம் |
| இந்துநாகரிகம் | சந்திரன் | சிறிஸ் |
| நாடகம் | கனேஷ் | வினோ |
| வரலாறு | ஜெயக்குமார் | கஜன் |
| புவியியல் | ஐங்கரன் | நவநீதன் |
| பொருளியல் | ஜெயக்குமார், சிறி | சிறி |
| இலகுகணிதம் | ஐங்கரன் | தவசேகர் |
| மனையியல் | மஜிபன் | மஜிபன் |
| இந்துசமயம் | சிறிஸ் | சிறிஸ் |
| கிறிஸ்தவம் | றொபின் | யூட் |
| புள்ளிவிவரம் | தவசேகர் | தவசேகர் |
| ஆங்கிலம் | Britto | Britto |
| ஆங்கில இலக்கியம் | சுப்பிரமணியம் | சுப்பிரமணியம் |
| வர்த்தகம் | நந்தீஸ் | நந்தீஸ் |
| கணக்கீடு | சுபேசன், சீலன் | D. Sam |
| பொருளியல் | ஜெயக்குமார் , சிறி | சிறி |
| பௌதிகவியல் | அனபாயன் | செந்தில்குமரன், ஜெயம் |
| இரசாயனவியல் | ராஜா, பிரதீபன் | அன்பழகன், தாரணி |
| உயிரியல் | திவாகரன் | கஜன் |
| இணைந்த கணிதம் | ஐங்கரன் | சிவகரன் |
| உயர் கணிதம் | சிவகரன் | தவசேகர் |

(இ/563822)

- 2009 A/L இல் 7 மாணவர் 3A பெறுபேறு, 49 பேர் பல்கலைக்கழக அனுமதி கற்றறிந்தவரின் ஒரே தெரிவு SUBRA மட்டுமே.
- A/L Day & Paper Classes ஆரம்பமாகிவிட்டன.
- தரம் 1 முதல் O/L வரை புதியபிரிவு.
  05/01/2010 இல் .30 இற்கு ஆரம்பம்.
- நலன்புரி முகாம்களில் இருந்து விடுவிக்கப்படவர்களுக்கு அனுமதி முற்றிலும் இலவசம்.



# லீலா

பஞ்சாங்க சித்திரக் கலண்டர், டயறிகள் .

சித்திரங்களுடனும் இருவர்ணங்களில் அச்சிடப்பட்டு வெளிவந்து இலங்கையிலும் வெளிநாட்டிலும் துரிதமாக விற்பனையாகின்றன

இதுவரை கிடைக்காத அன்பர்கள், வியாபாரிகள், பாவனையாளர்கள், இன்றே கேட்டுப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

எங்கும் கிடைக்கும் ஒரேயொரு சித்திரக் கலண்டர்

**2010 லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்**

தயாரிப்பாளர்கள் :

**லீலா பிறஸ் பிரைவேட் லிமிட்டட்**

இல. 400, கே. சிறில். சீ பெரேரா மாவத்தை, கொழும்பு – 13.
தொலைபேசி : 2325930, 2325933 பக்ஸ் : 2446077



# ANGEL INTERNATIONAL SCHOOL

ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY — In God we trust — a school with a difference — humedica

**SCHOOL REOPENING On 5th January 2010**

## ADMISSIONS

| Manipay | Jaffna Branch |
|---|---|
| Pre-School 3 to 5 years and other Grades by Admission test and Interviews.<br>>Mathers Lane, Manipay.<br>TP. 021 222 9738 | Pre-school 3 to 5 years.<br>> Branch -386/1, Hospital Road, Jaffna.<br>TP. 021 222 9239 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் ஐயனார் முன்பள்ளிக்கு கணனித் தொகுதி அன்பளிப்பாக வழங்கும்போது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலக முன்பள்ளி பருவ உத்தியோகத்தர் ரவிபாலா கலந்துகொண்டு கணனிக் கல்வியை ஆரம்பித்து வைப்பதையும், அருகில் முன்பள்ளி ஆசிரியர்கள், நிலைய நிர்வாக உறுப்பினர்கள் நிற்பதையும் காணலாம்.




சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் மக்கள் வங்கி சாவகச்சேரிக்கிளையின் சிசு உதான வங்கி அலகு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

வங்கிக்கிளை உதவி முகாமையாளர் மு.பாலசுப்பிரமணியம் அலகினை நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் திருமதி சி.கந்தசாமி நிற்பதையும் காணலாம். (207)



இமையாணன் அ.த.க.வித்தியாலயத்தில் சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாவட்ட உதவிச் சாரணர் ஆணையாளர் நா.மகேந்திரராஜா, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் சின்னம் சூட்டப்பட்ட மாணவர்களுடன் படத்தில் காணப்படுகின்றார்கள். (111)



வலிகாமம் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் தொழிற்பயிற்சிக் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அண்மையில் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண முறைசாராக் கல்விப் பணிப்பாளர் க.நடராஜா போதனாசிரியர் ஒருவருக்குச் சான்றிதழ் வழங்குகிறார்.



யாழ்.சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் ஆறுமுகநாவலரின் 130 ஆவது குருபூசை தினத்தன்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வு பெற்ற அதிபர் ஆ.சபாரத்தினம் நாவலர் சோலை முன்பள்ளி மாணவிக்குப் பரிசு வழங்குவதைக் காணலாம்.



வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் ஏற்பாட்டில் நடமாடும் வைத்திய முகாம் அண்மையில் வட்டு.இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் காந்தநேசன், மானிப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தினேஷ். ஜெயக்குமார் ஆகியோர் நோயாளிகளைப் பார்வையிடுவதைக் காணலாம். (29)




இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையின் சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி அபிவிருத்திக் கிராமத்தின் அறிமுகவிழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் வட பிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம், வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெயேந்திரா, எஸ்.மாணிக்கம், இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் த.புவனேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் மகளிர் உற்பத்திக் குழுக்களின் கண்காட்சி நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர் செல்வி பிரமினி சபாரட்ணம் மகளிர்குழு உறுப்பினர் ஒருவருக்குச் சான்றிதழ் வழங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடுந்தீவு மக்களின் பிரச்சினைகள், தேவைகள் குறித்து கடற்படையினர் பொதுமக்களிக்கிடையிலான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

நெடுந்தீவு கடற்படை அதிகாரி லெப்.கொமாண்டர் ஜெயசிங்க, உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் (படங்கள்: லக்ஸ்மன்)

## நினைவழியா ஓராண்டில்.......

ஒளி தந்து 18 ★ 04 ★ 1985



வலி தந்து 02 ★ 01 ★ 2009

### செல்வி வல்லிபுரநாதன் பிறிந்தாஜினி

அன்பில் விளைந்த மலரே – எம்
நெஞ்சில் நிறைந்த நினைவே
கண்முன் விரியும், உருவே – உயர்
விண்ணில் உறையும் திருவே
நாளும் எங்கள் நெஞ்சுக்குள்
வாழும் பிறி(ரு)ந்தா வனமே
ஒளியைச் சிந்தும் உன்னெழிலைக்
காணாதிருண்டு வாடுகின்றோம்
விழியில் நீரைச் சுமந்தபடி – உன்
அழியா நினைவை மீட்டுகின்றோம்.

02.01.2009 இல் எமைத் துயரிலாழ்த்தி மறைந்த எங்கள் அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்தியுற இந்நாளில் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

22/1, பாரதி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
(92087)
தகவல்: குடும்பத்தினர்.

## பருத்தித்துறை –வவுனியா வரை நேரடியாக தனியார் சிற்றூர்திச் சேவைகள் ஆரம்பம்

வடமராட்சி, ஜன.2

பருத்தித்துறையிலிருந்து வவுனியாவுக்கு நேரடி மினிபஸ் சேவையை வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் ஆரம்பித்துள்ளது.

தினமும் அதிகாலை 4.45 மணி தொடக்கம், காலை 6 மணிக்கு இடையில் நான்கு மினிபஸ் வண்டிகள் நெல்லியடி, கொடிகாமம் ஊடாக வவுனியா நோக்கிப் புறப்பட்டு வருகின்றன. வவுனியா சென்றடையும் இந்த நான்கு மினிபஸ் வண்டிகளும் அன்றைய தினமே நண்பகலுக்குப்பின்னர் வவுனியாவிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம், நெல்லியடி ஊடாகப் பருத்தித்துறையை வந்தடைகின்றன.

வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து வவுனியா சென்று திரும்பும் பயணிகளின் வசதிகருதி பருத்தித்துறையில் உள்ள வடமராட்சி சிற்றூர்திச் சேவைச்சங்கத்திலும், நெல்லியடியில் உள்ள தனியார் வர்த்தக நிலையங்களிலும் ஆசனப்பதிவுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரத்திற்குள் பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்கு நேரடி பஸ் சேவையையும் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடமராட்சி சிற்றூர்திச் சேவைச்சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (04-236)

## தபால் பணியாளர்களுக்கு சைக்கிள் விநியோகம்

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தபால் விநியோகப் பணியாளர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

கடந்த வாரம் ஏ-9 வீதியூடாக இதற்கென 150 துவிச்சக்கர வண்டிகள் எடுத்துவரப் பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக 155 துவிச்சக்கர வண்டிகள் இந்த வாரத்தில் எடுத்துவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.மேற்படி வேலைத் திட்டத்தின் கீழ் வட மாகாணத்திற்கென 556 துவிச்சக்கரவண்டிகள் ஒதுக்கப்பட்டன.

இதில் யாழ்.மாவட்டத்திற்கென 305 துவிச்சக்கரவண்டிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக அந்த அதிகாரி மேலும் கூறினார். (04-224)

## பிற்போடப்பட்டுள்ளது

பாடசாலையின் 2010 ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணைக் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் 11.01.2010 திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்பதை அறியத் தருகிறேன்.

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.
(சி/563535)

## புத்தாண்டு வழிபாடுகளில் பெருந்திரளில் பொதுமக்கள்

நேற்றையதினம் புது வருடப் பிறப்பை முன்னிட்டு பெருந்திரளான பொதுமக்கள் ஆலயங்களில் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

தேவாலயங்களில் நள்ளிரவு ஆராதனைகளிலும் இந்து ஆலயங்களிலும் விசேட பூசை வழிபாட்டிலும் பெருமளவில் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

நாட்டில் இயல்புநிலை தோன்றியுள்ள நிலையில் பிறமாவட்டங்களிலிருந்து வருகை தந்தோரும் இந்த வழிபாடுகளில் பங்குபற்றியிருந்தனர்.

(04)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி யோசப்பின் சூசன் சூசைப்பிள்ளை



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோசப்பின் சூசன் சூசைப்பிள்ளை நேற்று (01.01.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறகறி சூசைப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் P.W.D) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி லூக்காஸ்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கிறகறி தம்பதியரின் அன்பு மருமகளும், திருமதி Dr. பற்றிமா பிலோமினா (பொதுவைத்தியசாலை, கொழும்பு), கிறகறி இமானுவேல் (U.K), வின்சன்ற்லூக்கஸ் (விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்), மறினற்யூலியற் (U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயக்குமார் ஹென்ஸ்மன் (கணக்காளர்), லில்லிபெனடிற்றா வனஜா (U.K), றோஸ்வத்சலா (ஆசிரியை, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), அன்ரன் (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

'திரேசா வாசா', பிரதானவீதி,
இளவாலை.
தொ.பே: 0778051724,
0213206122
(92091)
தகவல் :
சூ.வின்சன்ற் லூக்கஸ்
(உக்கு- மகன்).

### தாமோதரம்பிள்ளை முத்துவேல்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட தமோதரம்பிள்ளை முத்துவேல் 30.12.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் தங்கமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தங்கபூபதி மற்றும் சிறிபதி (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சுப்பையா, அருளம்பலம், தம்பிமுத்து, நாகமுத்து மற்றும் சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கீதாஞ்சலியின் அன்பு மாமனும் சாருபன், சாதூரியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான Vector வேலாயுதம், பொன்னம்மா மற்றும் செல்லம்மா, சேதுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உடுப்பிட்டி கரும்பவாலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சன்னதி வீதி,
உடுப்பிட்டி.
(92092)
தகவல்:
தங்கமுத்து (மனைவி).


## வீடு விற்பனைக்கு

உடுவில், டச்சு றோட், குழந்தை யேசு தேவாலயத்தின் அருகில் மூன்று பரப்புடன் பெரிய வீடு விற்பனைக்கு.

தொடர்பு
0771000409, 0714312070

## தேவை

காங்கேசன்துறை வீதி, கோண்டாவிலில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மல்ரிஸ்பொட் வியாபார நிலையத்திற்கு வேலைக்கு ஆள் தேவை :
பெண்பிள்ளைகள் விரும்பத்தக்கது
தொடர்பு : 021 5676450


## அறிவித்தல்

யாழ்ப்பாணம் - மாநகரசபை
ஆதனப்பெயர் மாற்றம்
இல. 11, அம்மன் வீதி, வட்டாரம் 15

எமது ஆதனவரிப் பதிவேட்டில் ஆதன இல.11, அம்மன் வீதி, வட்டார இல. 15 இல் வீ.சின்னையா என்னும் பெயரில் காணப்படும் ஆதனத்தை க. முருகவேள் பெண் நித்தியா என்பர் தமக்கு உரிமையானது எனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இந்த விண்ணப்பத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக (14) பதின்னான்கு நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து க. முருகவேள் பெண் நித்தியா என்பரின் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

மு.செ. சரவணபவ
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
(சி/563841)

## உடன்படிக்கை வழிபாடு

வடமராட்சி,ஜன.2

பருத்தித்துறை-கட்டைவேலி மெதடிஸ்த சேகரப் பிரிவிலுள்ள மெதடிஸ்த தேவாலயங்களில் நாளை ஞாயிற்றுக்கிழமை உடன்படிக்கை வழிபாடுகள் இடம் பெறும்.

அல்வாய், கற்கோவளம், இடைக்குறிச்சி தேவாலயங்களில் காலை 7 மணிக்கும் ப[illegible]த் துறை- கட்டை[illegible]லி, நெல்லியடி தேவாலயங்களில் காலை 8.30 மணிக்கும் அந்தந்த தேவா[illegible] மேற்கொள்ளப் படும்.

(04-236)


தென்மராட்சி மக்களுக்கு



2010 ஆம் ஆண்டில்



ஓர் புதிய உதயம்



நிகழும் மங்களகரமான ஆண்டில் இன்று (02.01.2010) சனிக்கிழமை காலை 9 மணியளவில் திறந்து வைக்கப்படுகின்றது.

## 'ராணி மல்ரி சென்ரர்'

- பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள்
- அன்பளிப்புப் பொருள்கள்
- அழகுசாதனப் பொருள்கள்
- இலத்திரனியல் பொருள்கள்

அனைத்தினையும் ஒரே கூரையின்கீழ் மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ளலாம். அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றேன்.

பருத்தித்துறை வீதி, கொடிகாமம்,
தொ.பே: 0213734617.
(90284)
உரிமையாளர்:
து.குலராஜசிங்கம் (குலம்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கை முஸ்லிம் மக்களிடம் ஒப்படைப்பதற்கு இரகசிய ஒப்பந்தம் செய்திருக்கிறாராம் பொன்சேகா

## காரைதீவில் ஜனாதிபதியின் இணைப்பாளர் பாரதி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 2



அம்பாறை மாவட்டத்தை உள்ளடக்கியதாக முழுக் கிழக்கு மாகாணத்தையும் முஸ்லிம்களிடம் ஒப்படைப்பாரென ஜெனரல் சரத் பொன்சேகா இரகசிய தேர்தல் ஒப்பந்தமொன்றை செய்திருக்கிறார். இது ஒட்டு மொத்த தமிழனத்தையும், தமிழினத்தின் இருப்பையும் கேள்விக்குறியாக்குகின்ற சதிவேலைக்கு ஒப்பானதாகும்.

-ஜனாதிபதியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கு. இனியபாரதி காரைதீவு பிரதேச சபையின் பொதுச்சந்தைத் திறப்பு விழா மற்றும் 5 ஆவது வித்ய சாகித்திய விழா ஆகியவற்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், சரத் பொன்சேகாவுக்கும் இடையிலான தேர்தல் அல்ல, மாறாக இத் தேர்தல் சரத் பொன்சேகாவுக்கும் தமிழர்களுக்குமிடையிலான தேர்தலாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி விழாக்கள் காரைதீவு புதிய பொதுச் சந்தையில் காரைதீவுப் பிரதேச சபை தவிசாளர் நடராசா ஜீவராசா தலைமையில் கோலாகலமாக நடைபெற்றன.

இனியபாரதி அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''தமிழினத்தைத் திட்டமிட்டுப் புறக்கணித்து, அழித்து அதில் வெற்றி கண்டதாக நினைக்கும் சரத் பொன்சேகாவுக்கு எந்தத் தமிழனும் வாக்களிக்க மாட்டான். தமிழினத்தை அழிக்கும் இரகசிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள சரத் பொன்சேகா அவரது வாழ்க்கைக் காலத்தில் மொத்த தமிழனத்தை அழிக்கும் வேலையில்தான் செயற்பட்டிருந்தார்.

அவருக்கு வாக்களிக்க தன்மானமுள்ள தமிழன் எவரும் முன்வரமாட்டான். தமிழர்கள் வாழ்வில் மறக்க முடியாத பேரிழப்புகளை இந்த யுத்தமும், இன வன்முறைகளும் ஏற்படுத்தியுள்ளன. இனியாவது நாம் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

இன்றைய அமைதியான, சுதந்திரமான சூழலில் இடம்பெற்று வருகின்ற அபிவிருத்திகள், முன்னெடுக்கப்பட வேண்டுமானால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான் ஜனாதிபதியாக வரவேண்டும்.

இலங்கையில் மூவின மக்களாய்ப் பிரித்து முஸ்லிம்களிடம் கிழக்கை ஒப்படைக்க இருக்கும் சரத்பொன் சேகாவினால் எவ்வாறு இன ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்? எனவே, தமிழில் பேசி பெரும்பான்மை, சிறுபான்மை என எந்தப் பிரிவுமில்லை, அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் எனக் கூறி பல அபிவிருத்தித் திட்டங்களை இன, மத, பிரதேச பேதம் பார்க்காமல் முன்னெடுத்து வரும் மஹிந்த ராஜபக்ஷவின் பக்கமே தமிழினம் அணிசேர வேண்டும்- என்றார். (சி)

# தமிழர், முஸ்லிம்களின் ஆதரவினால் தமது வெற்றி எப்போதோ உறுதியாகிவிட்டது என்கிறார் ஜெனரல்

கொழும்பு, ஜன. 2

சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் வாக்குகளை இப்போதே தாம் பெற்று வெற்றி பெற்றுவிட்டார் என்று ஜெனரல் சரத் பொன்சேகா கூறினார்.

தேர்தலில் 80 வீத வாக்குப் பதிவு இடம் பெற்றால் தமது வெற்றி உறுதியாவதோடு மஹிந்த ராஜபக்ஷ கட்டுப்பணத்தையும் இழப்பார் என்றும் அவர் கூறினார்.

தனது காரியாலயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவின் மாவட்ட அமைப்பாளர்களைச் சந்தித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:

40வருடங்களாக நான் இந்த நாட்டிற்காகச் சீருடை அணிந்து பணியாற்றினேன். அரசியலுக்கு வருவேன் என்று நான் ஒரு போதும் நினைத்ததில்லை. எனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றினேன். இந்நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தேன். அந்தச் சுதந்திரமும், சமாதானமும் நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் என்று நாம் எதிர்பார்த்தோம்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ அரசு அவரது குடும்ப ஆட்சியை ஸ்திரப்படுவதற் கும், நாட்டைச் சூறையாடுவதற்குமே நான் பெற்றுக்கொடுத்த சமாதானத்தையும், சுதந்திரத்தையும் பயன்படுத்துகிறது.

இந்த அழிவில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்காக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து என்னையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு எனக்கு அழைப்பு விடுத்தன. எனக்கிருந்த அத்தனை வசதிகளையும், சலுகைகளையும் தூக்கி வீசிவிட்டு இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்காக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

எனக்கு ஆதரவு வழங்குபவர்களை அரசு மிரட்டியும் கடத்தியும் வருகின்றது. ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் 10 பேரை கைதுசெய்ய அரசு திட்டமிட்டுள்ளதாக எனக்கு 'ஈ-மெயில்' செய்தி ஒன்று வந்துள்ளது.

எனக்கு ஆதரவாக வண. தம்பர அமில தேரர் ஒரு நாள் மேடை ஏறியமைக்காக



அவர் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அரசு அவரைக் கைது செய்துள்ளது.

நான் ஜனாதிபதிக்குச் சேறு பூசுகிறேன் என்று ஜனாதிபதி கூறுகின்றார்.

அரசின் ஊழல்மோசடி பற்றிப் பேசினால் அது சேறு பூசுதலாக அரசுக்குத் தெரிகின்றது.

தேர்தலில் 80வீத வாக்குப் பதிவு இடம்பெற்றால் மஹிந்த ராஜபக்ஷ கட்டுப்பணத்தை இழப்பார். எமது வெற்றி உறுதியாகும். சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம்கள் வாக்குகளால் நாம் எப்போதே வென்றுவிட்டோம் - என்றார். (அ)

# புலிகளின் தலைவரை கூட்டணியினர் பிழையாக வழி நடத்தினார்கள்

## பிள்ளையான் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஜன. 2



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனையும், தமிழ் மக்களையும் தவறாக வழி நடத்தி அழிவுப் பாதைக்குக் கூட்டிச் சென்றவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பினரே என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் களுவாஞ்சிக்குடிக்கான டிப்போ நிர்வாகக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

இந்த வைபவத்துக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிழக்கு மாகாண முகாமையாளர் ஏ.எம். நசீர் தலைமை வகித்தார்.

இந்தக் கட்டடத்தை போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

இவ்வைபவத்தில் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் அமீர் அலி, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், களுவாஞ்சிக்குடிப் பிரதேச சபை தவிசாளர் சிவகுணம், போரதீவுப் பிரதேசசபை தவிசாளர் ஸ்ரீதரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.எஸ். சுபைர் மற்றும் பி.பிரசாந்தன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இவ் வைபவத்தில் கலந்து கொண்டு-உரையாற்றிய போதே முதலமைச்சர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''தமிழ் மக்களின் அழிவுக்கெல்லாம் பிரதான காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஆகும்.

பிரபாகரன் விட்ட தவறுகளைச் சுட்டிக் காட்டாமல் அவரை தவறான பாதைக்கு இட்டுச் சென்றவர்களும் இந்தக் கூட்டமைப்பினரே ஆவர்.

தமிழர்கள் சுயமாகச் சிந்தித்து செயற்பட முடியாத அளவுக்கு பிரபாகரன் எடுத்த முடிவுகளுக்கு இவர்களே பிரதான காரணமாக உள்ளனர்.

தமிழ் மக்களின் நலன்களை எண்ணிப் பார்க்காதவர்களின் பின்னால் கிழக்கு மாகாண மக்கள் ஒரு போதும் நிற்கவே மாட்டார்கள்.'' (சி)

# சிங்கங்களை அனுப்ப முடியாவிட்டால் மாடுகளையாவது அனுப்புங்கள்

## பொன்சேகா தரப்புக்கு வீரவன்சவின் செய்தி

கொழும்பு, ஜன. 2

ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாசறையிலிருந்து சிங்கங்களை அனுப்பி வைக்க முடியாவிட்டால் குறைந்தபட்சம் ஒரு மாட்டையேனும் விவாதத்திற்காக அனுப்பிவைக்குமாறு ஜே.என்.பி கட்சியின் தலைவர் விமல் வீரவன்ஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

சிங்கங்கள் பன்றிகளுடன் விவாதம் நடத்தப்படமாட்டாதென சரத் பொன்சேகாவின் ஊடகப் பேச்சாளர் அனுரகுமார திஸாநாயக்க விடுத்த அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகனது ஆயுத நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடிகள் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் விவாதங்கள் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆயுத விவகாரம் தொடர்பில் விரிவான



விவாதமொன்று நடத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ள அதேவேளை ஜே.வி.பி உறுப்பினர்கள் எம்புல்தெனியப் பகுதியில் மாளிகைகள் அமைத்து வருகின்றமை குறித்தும் விவாதம் நடத்தப்பட வேண்டும் எனவும் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொள்ள உள்ள தாகவும் அதன் பின்னர் யானை, புலி மற் றும் நரிக் கூட்டணி என ஜெனரல் பொன் சேகாவின் கூட்டணியை அழைக்கமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான சர்வதேச சக்திகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்குமாறு வலியுறுத்தி வருகின்றன எனத் தெரிவித்துள்ள அவர்,

நாட்டின் இறைமை மற்றும் பௌதீக ஒருமைப்பாட்டுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடிய வகையிலான எந்தவொரு அதிகார பரவலாக்கலையும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மேற்கொள்ளாது.

ஈ.பி.டி.பி. கூடுதல் அதிகாரங்களை வழங்குமாறு கோரிய போதிலும் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என அவர் தெரிவித்துள்ளார். (சி)

# பொன்சேகாவின் ஆதரவாளர்கள் 28 பேரை கைதுசெய்ய முயற்சியா?

## இல்லை என்று அடியோடு மறுக்கிறது பொலிஸ்

கொழும்பு, ஜன.2

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவின் ஆதரவாளர்கள் 28 பேரைக் கைது செய்வதற்குத் திட்டமிட்டுள்ள அரசு இது குறித்த பட்டியலொன்றை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளது என வெளியாகும் தகவல்களை பொலிஸ் பேச்சாளர் மறுத்துள்ளார். எமக்கு இது குறித்து எதுவும் தெரியாது. எம்மிடம் இவ்வாறான பட்டியல் எதுவும் இல்லையென சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம். கருணாரட்ன தெரிவித்தார்.

இதேவேளை அடுத்த வாரங்களுக்குள் கைது செய்யப்பட வேண்டிய பொன்சேகா ஆதரவாளர்கள் 28 பேரின் பெயர் விவரங்களை பாதுகாப்புச் செயலர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார் என பொலிஸ் தலைமையக வட்டாரங்களை மேற்கோள்காட்டி லங்கா நியூஸ் வெப் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள குறிப்பிட்ட பட்டியலில் தேசப்பற்றுள்ள தேசிய மத்திய நிலையத்தின் தலைவர் தம்பர அமில தேரரின் பெயரும் உள்ளது எனக் குறிப்பிட்டு இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. மேலும் இவர்களை அவர்களது வீடுகளிலோ அல்லது அலுவலகங்களிலோ வைத்து கைது செய்ய வேண்டாமென பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார் என தெரிவித்துள்ள லங்கா நியூஸ் வெப், கைது செய்யப்பட வேண்டிய 28 பேரில் மூன்று பத்திரிகையாளர்களும் ஒரு இணையத்தள ஆசிரியரும் அடங்குகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளது. (சி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடுந்தீவு மக்களின் பிரச்சினைகள், தேவைகள் குறித்து கடற்படையினர் பொதுமக்களிக்கிடையிலான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

நெடுந்தீவு கடற்படை அதிகாரி லெப்.கொமாண்டர் ஜெயசிங்க, உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் (படங்கள்: லக்ஸ்மன்)

## நினைவழியா ஓராண்டில்.......

ஒளி தந்து 18 ★ 04 ★ 1985



வலி தந்து 02 ★ 01 ★ 2009

### செல்வி வல்லிபுரநாதன் பிறிந்தாஜினி

அன்பில் விளைந்த மலரே – எம்
நெஞ்சில் நிறைந்த நினைவே
கண்முன் விரியும் உருவே – உயர்
விண்ணில் உறையும் திருவே
நாளும் எங்கள் நெஞ்சுக்குள்
வாழும் பிறி(ரு)ந்தா வனமே
ஒளியைச் சிந்தும் உன்னெழிலைக்
காணாதிருண்டு வாடுகின்றோம்
விழியில் நீரைச் சுமந்தபடி – உன்
அழியா நினைவை மீட்டுகின்றோம்.

02.01.2009 இல் எமைத் துயரிலாழ்த்தி மறைந்த எங்கள் அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்தியுற இந்நாளில் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

22/1, பாரதி வீதி, கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(92087)

## பருத்தித்துறை –வவுனியா வரை நேரடியாக தனியார் சிற்றூர்திச் சேவைகள் ஆரம்பம்

வடமராட்சி, ஜன.2

பருத்தித்துறையிலிருந்து வவுனியாவுக்கு நேரடி மினிபஸ் சேவையை வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் ஆரம்பித்துள்ளது.

தினமும் அதிகாலை 4.45 மணி தொடக்கம், காலை 6 மணிக்கு இடையில் நான்கு மினிபஸ் வண்டிகள் நெல்லியடி, கொடிகாமம் ஊடாக வவுனியா நோக்கிப் புறப்பட்டு வருகின்றன. வவுனியா சென்றடையும் இந்த நான்கு மினிபஸ் வண்டிகளும் அன்றைய தினமே நண்பகலுக்குப்பின்னர் வவுனியாவிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம், நெல்லியடி ஊடாகப் பருத்தித்துறையை வந்தடைகின்றன.

வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து வவுனியா சென்று திரும்பும் பயணிகளின் வசதிகருதி பருத்தித்துறையில் உள்ள வடமராட்சி சிற்றூர்திச் சேவைச்சங்கத்திலும், நெல்லியடியில் உள்ள தனியார் வர்த்தக நிலையங்களிலும் ஆசனப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரத்திற்குள் பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்கு நேரடி பஸ் சேவையையும் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடமராட்சி சிற்றூர்திச் சேவைச்சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (04-236)

## தபால் பணியாளர்களுக்கு சைக்கிள் விநியோகம்

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தபால் விநியோகப் பணியாளர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

கடந்த வாரம் ஏ-9 வீதியூடாக இதற்கென 150 துவிச்சக்கர வண்டிகள் எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக 155 துவிச்சக்கர வண்டிகள் இந்த வாரத்தில் எடுத்துவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேற்படி வேலைத் திட்டத்தின் கீழ் வட மாகாணத்திற்கென 556 துவிச்சக்கரவண்டிகள் ஒதுக்கப்பட்டன.

இதில் யாழ்.மாவட்டத்திற்கென 305 துவிச்சக்கரவண்டிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக அந்த அதிகாரி மேலும் கூறினார். (04-224)

## புத்தாண்டு வழிபாடுகளில் பெருந்திரளில் பொதுமக்கள்

நேற்றையதினம் புது வருடப் பிறப்பை முன்னிட்டு பெருந்திரளான பொதுமக்கள் ஆலயங்களில் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

தேவாலயங்களில் நள்ளிரவு ஆராதனைகளிலும் இந்து ஆலயங்களிலும் விசேட பூசை வழிபாட்டிலும் பெருமளவில் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

நாட்டில் இயல்புநிலை தோன்றியுள்ள நிலையில் பிறமாவட்டங்களிலிருந்து வருகை தந்தோரும் இந்த வழிபாடுகளில் பங்குபற்றியிருந்தனர். (04)

## பிற்போடப்பட்டுள்ளது

பாடசாலையின் 2010 ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணைக் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் 11.01.2010 திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்பதை அறியத் தருகிறேன்.

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

(சி/563535)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி யோசப்பின் சூசன் சூசைப்பிள்ளை



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோசப்பின் சூசன் சூசைப்பிள்ளை நேற்று (01.01.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறகறி சூசைப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் P.W.D) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி லூக்காஸ்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கிறகறி தம்பதியரின் அன்பு மருமகளும், திருமதி Dr. பற்றிமா பிலோமினா (பொதுவைத்தியசாலை, கொழும்பு), கிறகறி இமானுவேல் (U.K), வின்சன்ற்லூக்கஸ் (விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்), மறினற்யூலியற் (U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயக்குமார் ஹென்ஸ்மன் (கணக்காளர்), லில்லிபெனடிற்றா வனஜா (U.K), றோஸ்வத்சலா (ஆசிரியை, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), அன்ரன் (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

'திரேசா வாசா', பிரதானவீதி,
இளவாலை.
தொ.பே: 0778051724,
0213206122

(92091)

தகவல் :
சூ.வின்சன்ற் லூக்கஸ்
(உக்கு- மகன்).

### தாமோதரம்பிள்ளை முத்துவேல்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட தமோதரம்பிள்ளை முத்துவேல் 30.12.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் தங்கமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தங்கபூபதி மற்றும் சிறிபதி (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சுப்பையா, அருளம்பலம், தம்பிமுத்து, நாகமுத்து மற்றும் சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கீதாஞ்சலியின் அன்பு மாமனும் சாருபன், சாதூரியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான Vector வேலாயுதம், பொன்னம்மா மற்றும் செல்லம்மா, சேதுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உடுப்பிட்டி கரும்பவாலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சன்னதி வீதி,
உடுப்பிட்டி.

(92092)

தகவல்:
தங்கமுத்து (மனைவி).

## வீடு விற்பனைக்கு

உடுவில், டச்சு றோட், குழந்தை யேசு தேவாலயத்தின் அருகில் மூன்று பரப்புடன் பெரிய வீடு விற்பனைக்கு.

தொடர்பு
0771000409, 0714312070

## தேவை

காங்கேசன்துறை வீதி, கோண்டாவிலில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மல்ரிஸ்பொட் வியாபார நிலையத்திற்கு வேலைக்கு ஆள் தேவை :
பெண்பிள்ளைகள் விரும்பத்தக்கது
தொடர்பு : 021 5676450

## அறிவித்தல்

*யாழ்ப்பாணம் - மாநகரசபை*
ஆதனப்பெயர் மாற்றம்
இல. 11, அம்மன் வீதி, வட்டாரம் 15

எமது ஆதனவரிப் பதிவேட்டில் ஆதன இல.11, அம்மன் வீதி, வட்டார இல. 15 இல் வீ.சின்னையா என்னும் பெயரில் காணப்படும் ஆதனத்தை க. முருகவேள் பெண் நித்தியா என்பர் தமக்கு உரிமையானது எனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இந்த விண்ணப்பத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக (14) பதின்னான்கு நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து க. முருகவேள் பெண் நித்தியா என்பரின் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

மு.செ. சரவணபவ
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/563841)

### உடன்படிக்கை வழிபாடு

வடமராட்சி,ஜன.2

பருத்தித்துறை-கட்டைவேலி மெதடிஸ்த சேகரப் பிரிவிலுள்ள மெதடிஸ்த தேவாலயங்களில் நாளை ஞாயிற்றுக்கிழமை உடன்படிக்கை வழிபாடுகள் இடம் பெறும்.

அல்வாய், கற்கோவளம், இடைக்குறிச்சி தேவாலயங்களில் காலை 7 மணிக்கும் பருத்தித்துறை- கட்டைவேலி, நெல்லியடி தேவாலயங்களில் காலை 8.30 மணிக்கும் அந்தந்த தேவாலயப் போதகர்களால் மேற்கொள்ளப்படும். (04-236)






தென்மராட்சி மக்களுக்கு
2010 ஆம் ஆண்டில்
ஓர் புதிய உதயம்

நிகழும் மங்களகரமான ஆண்டில் இன்று (02.01.2010) சனிக்கிழமை காலை 9 மணியளவில் திறந்து வைக்கப்படுகின்றது.

'ராணி மல்ரி சென்ரர்'

* பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள்
* அன்பளிப்புப் பொருள்கள்
* அழகுசாதனப் பொருள்கள்
* இலத்திரனியல் பொருள்கள்

அனைத்தினையும் ஒரே கூரையின்கீழ் மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ளலாம். அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றேன்.

பருத்தித்துறை வீதி, கொடிகாமம்,
தொ.பே: 0213734617.

(90284)

உரிமையாளர்:
து.குலராஜசிங்கம் (குலம்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். அரசுடன் பேச இம்ரான்கானின் உதவியை நாடியுள்ளனராம் தலிபான்கள்

லாகூர், ஜன. 02

பாகிஸ்தான் அரசுடன் பேச்சு நடத்த உதவுமாறு கோரி தன்னை தலிபான் தீவிரவாதிகள் அணுகியுள்ளனர் என முன்னாள் கிரிக்கெட் வீரரும், அரசியல்வாதியுமான இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

தலிபான் தரப்பிலிருந்து முக்கியஸ்தர்கள் என்னை அணுகியுள்ளனர். அரசுடன் பேச்சு நடத்த உதவுமாறு அவர்கள் கோரியுள்ளனர். ஒருவேளை இதற்கு அரசு ஒப்புக்கொள்ளுமானால், நான் மத்தியஸ்தராக மட்டுமே செயற்படுவேன். வேறு எந்தவகையான பாத்திரத்தையும் நான் விரும்பவில்லை'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''தலிபானில் எந்தப் பிரிவு என்னை அணுகியது என்பதை இப்போது நான் சொல்ல விரும்பவில்லை. அரசின் ஒப்புதல் கிட்டுமானால், இதர விவரங்கள் தாமாகவே வெளியாகிவிடும்'' என்றும் அவர் கூறியுள்ளார்.

இம்ரான்கான் நடத்திவரும் தெஹ்ரிக் இன்சாப் கட்சி, தலிபான்கள் மீதும் பிற தீவிரவாத அமைப்புகள் மீதும் பாகிஸ்தான் அரசு, இராணுவ ரீதியான நடவடிக்கை எடுத்து வருவதை ஆரம்பம் முதல் எதிர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இம்ரான்கான் இது குறித்து தொடர்ந்து குறிப்பிடுகையில், ''பாகிஸ்தான் அரசு உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி நாடு சந்தித்துவரும் பிரச்சினைகள் குறித்து ஆராயவேண்டும். முதலில் அரசு, ஸ்வாத்திலும் வசிரிஸ்தானிலும் இராணுவத் தாக்குதலை நடத்தியது. பின்னர் அனைத்துக் கட்சிகளின் ஆலோசனையைக் கேட்டது. இது தவறான போக்காகும். எனவே, இராணுவ நடவடிக்கையை அரசு கைவிட வேண்டும்'' என்றும் தெரிவித்துள்ளார்.

''தெற்கு வசிரிஸ்தானில் இராணுவத் தாக்குதலை அரசு நீடித்து வந்தால், அது பிரச்சினையை தீர்க்க உதவாது. நாட்டில் அமைதி நிலவ அனத்துக் கட்சியினருடனும், தலிபான்களுடனும் பேச்சு நடத்த அரசு முன்வரவேண்டும். ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபான்களுடன் பேச அமெரிக்க அரசு முன்வரும்போது பாகிஸ்தான் அரசு மட்டும் முரண்டு பிடிப்பது ஏன்?'' என்றும் இம்ரான்கான் கேள்வி எழுப்பியுள்ளார்.

இம்ரான்கானின் இந்த அறிவிப்பு குறித்து பாகிஸ்தான் அரசு கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. அதேசமயம், பாகிஸ்தான் மக்கள் கட்சியும் இதர பல ஊடகங்களும், இம்ரான்கானின் தலிபான் ஆதரவுப் போக்கைக் கடுமையாக விமர்சித்துள்ளன. இதேவேளை, இம்ரான்கானின் அறிவிப்பை வடமேற்கு ஸ்வாத் பள்ளத்தாக்கிலுள்ள தலிபான்கள் வரவேற்றுள்ளனர்.




## ஐந்து பேரைச் சுட்டுக் கொன்ற பின்லாந்து நபர் தற்கொலை

ஹெல்சிங், ஜன. 02

பின்லாந்தின் தலைநகரான ஹெல்சிங்கிக்கு வெளியே எஸ்போவில் 5 பேரைச் சுட்டுக்கொன்ற ஓர் ஆயுதபாணி தானும் தற்கொலை செய்துகொண்டார்.

ஓர் அங்காடியில் இவர் சரமாரியாகத் துப் பாக்கிப் பிரயோகம் செய்தபோது நான்கு பேர் கொல்லப்பட்டனர். அருகிலுள்ள ஒரு அடுக்குமாடிக் கட்டடத்தில் ஐந்தாவது சடலத்தை பொலிஸார் பின்னர் மீட்டனர். இது ஒரு பெண்ணின் சடலமாகும்.

அந்த அங்காடியில் வேலைபார்த்து வந்த அந்தப் பெண், அந்தத் துப்பாக்கிதாரியின் முன்னாள் தோழி என்று நம்பப்படுகிறது. அவர் தான் அந்தத் துப்பாக்கிதாரியின் முக்கிய இலக்கு என்றும் பொலிஸார் விவரித்துள்ளனர்.

ஆயுதபாணியின் சடலம் மற்றுமொரு அடுக்குமாடி கட்டடத்தில் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டது. ஏற்கனவே பல குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்ட அந் நபர் 43 வயதான இப்ராஹிம் சுக்பொலி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# தீவிரவாதிகளை ஒடுக்க பிரிட்டன் தவறிவிட்டது

## அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஜன. 02

தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் பிரிட்டன் தவறிவிட்டது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஐரோப்பாவிலுள்ள நாடுகளில் பிரிட்டனை அமெரிக்கா சிறந்த நேசநாடாகக் கருதுகிறது. அங்கு சமீபகாலமாக தீவிரவாதிகளின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இதுகுறித்து அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது. அத்துடன், அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் பிரிட்டன் தவறிவிட்டது என்றும் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கு சமீபத்தில் நடைபெற்ற விமான தகர்ப்பு முயற்சி சம்பவத்தை ஓய்வுபெற்ற அமெரிக்க உளவு அமைப்பின் தலைவர் சார்ள்ஸ் எலன் முக்கிய உதாரணமாக சுட்டிக் காட்டியுள்ளார். இச்செயலுக்கு காரணமான நைஜீரிய தீவிரவாதி ஒமர் பாரூக் அப்துல் முத்தலிப் பிரிட்டனில் தமது கல்லூரி படிப்பை முடித்துள்ளார். இது மிக முக்கியமான ஆதாரமாகக் கருதப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு காரணங்களுக்காகப் புலம் பெயர்ந்துவரும் இஸ்லாமியர்களை அரவணைப்பது முக்கியமானது. அதேநேரத்தில் அவர்களில் தீவிரவாத தலைமைக்கு மாற்றப்படுபவர்களைக் கண்டறிந்து ஆபத்துகள் ஏற்படாமல் தடுப்பதும் அவசியமாகும். தீவிரவாதிகளின் மூலம் பிரிட்டனுக்கு அதிக அளவிலான பிரச்சினைகள் உருவாகி வருகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மலேஷியாவில் தமிழரின் எண்ணிக்கை அடியோடு அற்றுவிடக்கூடிய அபாயம்

## இந்து சங்கத் தலைவர் கவலை

கோலாலம்பூர், ஜன. 02

மலேஷியாவில் வாழும் இந்திய வம்சாவளியினரின் (பெரும்பாலும் தமிழர்கள் தான்) எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. இந்நிலை நீடித்தால் எதிர்காலத்தில் மலேஷியாவில் தமிழர்களின் எண்ணிக்கை அடியோடு அற்றுவிடக் கூடும் என மலேஷிய இந்து சங்கத்துணைத் தலைவர் பாலதருமலிங்கம் கவலை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, தமிழ்நேசன் இதழுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், ''இப்போதெல்லாம் இந்தியர்கள் குறைந்த அளவிலான குழந்தைகளையே விரும்புகிறார்கள். அதிக குழந்தை பெற்றுக்கொள்வதை அவர்கள் விரும்புவதில்லை. ஒன்று அல்லது 2 குழந்தைகளுக்கு மேல் அவர்கள் விரும்புவதில்லை. இந்நிலை நீடித்தால் எதிர்காலத்தில் மலேஷியாவில் இந்திய வம்சாவளியினர் பூண்டோடு அழிந்து விடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடலாம்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

''மலேஷிய மக்கள் தொகையில் மூன்று முக்கிய இனப்பிரிவுகள்தான் மேலோங்கியுள்ளன. பெரும்பான்மைப் பிரிவாக மலாய் மக்கள் உள்ளனர். அடுத்த இடத்தில் சீனர்கள் (25 சதவீதம்) உள்ளனர். 3 ஆவது இடத்தில் வம்சாவளி இந்தியர்கள் உள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 8 சதவீதமாகும். இவர்களில் பெரும்பாலானோர் தமிழர்களே'' என்றும் அவர் தம் பேட்டியில் சுட்டிக்காட் டியுள்ளார்.

# 'ருவென்ரி-20' போட்டிகளால் கிரிக்கெட் அழிந்துவிடும்

## எச்சரிக்கிறார் பாகிஸ்தான் அணித் தலைவர்



சிட்னி, ஜன. 02

''ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் கிரிக்கெட்டை அழித்து விடும் நிலைமை உருவாகி வருகிறது'' என பாகிஸ்தான் அணியின் தலைவர் முஹமட் யூசுப் எச்சரித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வரும் பாகிஸ்தான் அணி நடந்து முடிந்த முதலாவது போட்டியில் தோல்வியடைந்தது.

இந்தத் தோல்வி குறித்துக் கூறும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''பாகிஸ்தான் அணியில், துடுப்பாட்டத்தில் தோல்வி என்பது இதற்கு முன்பும் நிகழ்ந்துள்ளது. இருப்பினும் இப்போதைய சரிவிற்கு 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டிகள்தான் காரணம். அதிரடியாக விளையாடிப் பழக்கப்பட்ட வீரர்கள் களத்தில் எப்படி நிலைத்துநின்று ஆடுவது என்பதை மறந்துவிட்டனர்.

''புதிதாக வரும் வீரர்களுக்கும் நிலையாக நின்று துடுப்பெடுத்தாடுவது எப்படி என்பது தெரியவில்லை.

''ருவென்ரி-20' கிரிக்கெட்டில் நிறையப் பணம் கிடைப்பதால் அந்த குறுகியநேர போட்டியில் விளையாடுவதற்குத்தான் வீரர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். பாகிஸ்தான் கிரிக்கெட்சபை 'ருவென்ரி-20' கிரிக்கெட்டை அதிகமாக ஊக்குவித்தால் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணியின் தரம் உண்மையிலேயே குறைந்து போய் விடும்.

''ஒரு நாள் போட்டிகளில் 50 ஓவர்கள் கூட முழுமையாக ஆடுவதற்குத் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். அபுதாபியில் நடந்த நியூஸிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் 50 ஓவர்களில் 212 ஓட்டங்களைக் கூட எடுக்க முடியாமல் போய்விட்டது. ஒவ்வொரு வீரர்களும் அதிரடியாக ஆடி ஆட்டமிழந்துவிடுகின்றனர்.

பாகிஸ்தானைப் பொறுத்தவரை 'ருவென்ரி-20' கிரிக்கெட்டில் ஆடுவது எளிது. ஏனெனில் அவர்களுக்கு அதிரடியாக எப்படி ஓட்டங்களைக் குவிக்க வேண்டும் என்பது தெரியும். ஆனால், எப்படித் தடுத்து - நின்று ஆடுவது என்பது தெரியவில்லை. எந்தப் பந்தை விரட்டியாட வேண்டும், எந்தப் பந்தை விட்டு விட வேண்டும் என்பதைக் கணித்து ஆடத் தெரியாத வரை, நீண்ட நாள்கள் ஆடக் கூடிய டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் நிலைத்து நிற்க முடியாது'' - என்றார்.






முன்னணி ரென்னிஸ் வீரர்களான, வாவ்றிங்கா, ரொபின் சோடர்லிங், ரோஜர் பெடரர், ரபேல் நடால், நிக்கோலி டேவ்டென்கோ மற்றும் டேவிட் பெரர் ஆகியோர் அபுதாபியில் நடைபெறவுள்ள 'கபிரலா' உலக ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரில் பங்கு பற்றுகின்றனர். நேற்றுமுன்தினம் அவர்கள் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது கொடுத்த போஸ்.

# கடந்த ஆண்டை மறக்கமுடியாது

''2009ஆம் ஆண்டு கிரிக்கெட் அரங்கில் என்னால் மறக்க முடியாத ஆண்டாக உள்ளது'' - என இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் கிரேகம் ஸ்வான் தெரிவித் துள்ளார்.

இங்கிலாந்து அணியின் ஷேன் வோன் என்று பலராலும் புகழப்படும் ஸ்வான் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த ஆண்டு நடந்த டெஸ்ட் போட்டிகளில் எனது செயற்பாடு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. எனது துல்லியமான பந்து வீச்சினால் இங்கிலாந்து அணியை வெற்றிக்கு அழைத்து சென்றமையானது உற்சாகமளிக்கிறது.

கடந்த ஆண்டு நடந்த ஆஷஸ் டெஸ்ட், தற்போது நடந்து வரும் தென்னா பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் என இரண்டு முக்கிய தொடர்களிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவது கூடுதல் நம்பிக்கையளிக்கிறது.

இதனால் கடந்த ஆண்டு என்னால் மறக்க முடியாத ஆண்டாக அமைந்தது. இனி வரும் நாள்களிலும் சிறப்பாகப் பந்துவீசி அணியின் வெற்றிக்காகப் பாடுபடுவேன்.

ஒரே ஆண்டில் 50 விக்கெற்றுகளுக்கு மேல் வீழ்த்தியதை என்னால் நம்பவே முடியவில்லை. முன்னாள் இங்கிலாந்து சுழல் ஜாம்பவான்களான ஜிம் லாகர், டெரிக் அன்டர்வூட் உள்ளிட்டோர் மூன்று மாத காலம் படகுப் பயணம் செய்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடியமையால், அவர்களால் ஒரே ஆண்டில் 50 [illegible] வில்லை என நினைக்கிறேன்'' - என்றார்.

# 2010 இந்திய அணிக்கு எப்படி?



புதுடில்லி, ஜன. 02

இந்தியக் கிரிக்கெட் வீரர்களுக்கு கடந்த ஆண்டு வெற்றிகரமானதாக அமைந்தது. இதேபோல இந்த ஆண்டும் வெற்றிகரமானதாகவே அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு டோனி தலைமையிலான இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் கலக்கியது. இதையடுத்து டெஸ்ட் தரவரிசையில் முதன் முறையாக முதலிடத்தைப் பெற்று அசத்தியது.

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரைக் கைப்பற்றி, கடந்த ஆண்டை வெற்றிகரமாக முடித்தது. இதற்கு சச்சின், டோனி, ஷேவாக் ஆகியோரது அபார ஆட்டமே முக்கிய காரணம். இவர்களது ஜாதகப்படி 2010ஆம் ஆண்டு எப்படி இருக்கும் என்று பிரபல ஜோதிடர்கள் கணித்துள்ளனர்.

அந்த விவரம் வருமாறு

சச்சின் - இவர் அதிக ஓட்டங்களைக் குவித்து, தொடர்ந்தும் ஜொலிப்பார். இவருக்கு உயரிய விருதுகள் கிடைக்கும். ஆனாலும் ஆண்டின் ஆரம்பத்தில் சில சோதனைகளைச் சந்திக்க நேரிடலாம். உடல் நலத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

டோனி - இவர் வெற்றித் தலைவராக அசத்துவார். இவரது துடுப்பாட்டம், அணியை இக்கட்டான தருணங்களிலிருந்து பல முறை மீட்கும். ஐ.சி.சி. ஒரு நாள் போட்டிகளுக்கான தரவரிசையில் (துடுப்பாட்டம்) முதலிடத்தில் நீடிப்பார். சில பிரச்சினைகளைச் சந்திக்கலாம். நிதி நிலைமை வளர்ச்சி அடையும்.

ஷேவாக் - ஆண்டின் ஆரம்பத்தில் சில சர்ச்சைகளில் சிக்கலாம். இவரது அதிரடி ஆட்டம் தொடரும். தனது துடுப்பாட்டத்தால் இந்திய அணிக்குத் தொடர்ந்து கைகொடுப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குநாடுகளில் நடத்தப்பட்டது போன்று தமிழகத்திலும் தமிழீழ வாக்கெடுப்பு நடத்தப்படும்

## வைகோ புத்தாண்டில் பேட்டி

சென்னை, ஜன. 02

நோர்வே, பிரான்ஸ் போன்ற நாடுகளில்.



தனி ஈழத்துக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் தனித் தமிழீழமே நிரந்தர தீர்வு என்று தமிழர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். அதுபோல தமிழகத்திலும் வாக்கெடுப்பு நடத்தப்படும். தமிழ் ஈழத்திற்கு ஆதரவாக தமிழக மக்கள் வாக்களிப்பார்கள்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இவ்வாறு கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று அளித்த பேட் டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

2010 புத்தாண்டு தமிழ் நாட்டில் சூழ்ந்துள்ள அவலங்களையும், நலிவுகளையும் போக்கும் ஆண்டாக அமைய வேண்டும். கடந்த ஆண்டு தமிழர்களுக்கு துயர் மிகுந்த ஆண்டாக அமைந்தது. இலங்கையில் மிகப் பெரிய இனப்படுகொலை நடத்தப்பட்டது.

மத்திய அரசு அதற்கு உறுதுணையாக இருந்தது. இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ் ஈழம் அமைவதுதான் நிரந்தரத் தீர்வாகும். இப்போது அந்தப் பிரச்சினையை திசை திருப்ப முள்வேலி முகாமில் வதைபடும் தமிழர்களை மீட்பது பற்றி பிரசாரம் செய்து வருகிறார்கள்.

உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டிற்கு அனைவரும் வர வேண்டும் என்று முதல்வர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஈழத்தமிழர் பிரச்சினையில் தமிழர்களுக்கு செய்த துரோகத்தை மூடிமறைப்பதற்காக முதல்வர் இவ்வாறு கூறியிருக்கிறார். இது உலகத் தமிழ் செம்மொழி மாநாடு அல்ல; இது முதல்வர் கருணாநிதி நடத்தும் மாநாடு. கட்சிகளை உடைப்பது போல உலகத் தமி ழர்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தி வருகிறார்.

தமிழகத்தின் ஜனநாயகத்திற்கு பேராபத்து ஏற்பட்டுள்ளது. ஊழல், பணநாயகம் என்ற தூக்குக் கயிறு மக்களை ஆட்டிப் படைக்கிறது.

பெண்ணாகரம் தொகுதியில் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தா.பாண்டியன் கேட்டுக் கொண்டிருக்கிறார். இந்தக் கருத்தில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. நாங்கள் அ.தி.மு.க. கூட்டணியில் இருக்கிறோம் அ.தி.மு.க. எடுக்கும் முடிவே எங்கள் முடிவாகும் - என் றார்.

## புத்தாண்டையொட்டி சபரிமலையில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு

சபரிமலை, ஜன. 2

2010 புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு சபரிமலை சன்னிதானத்திலும், பம்பையிலும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சபரிமலை சன்னிதானத்தில் கடந்த 26 ஆம் திகதி மண்டல பூஜை மிக விமரிசையாக நடந்து முடிந்தது. ஐயப்ப பக்தர்களின் பக்திப் பரவச தினமான மகரஜோதி பூஜைக்காக, சபரிமலையில் ஐயப்பசாமியின் திருநடை கடந்த புதன்கிழமை திறக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் முதல் நெய்ய பிஷேகமும் நடைபெற்று வருகிறது. புத்தாண்டு தரிசனத்திற்காக ஏராளமான பக்தர்கள் பம்பையிலும் சன்னிதானத்திலும் குவிந்துள்ளதால் மலையேறும் பக்தர்கள் பம்பையில் 3 மணி நேர காத்திருப்பிற்கு பின்னரே மலையேற அனுமதிக்கப்படுகிறார்கள்.

பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிவதால் சன்னிதானத்தில் பொலிஸ் சிறப்பு அதிகாரிகள் உட்பட 1415 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேபோல் பம்பையில் சிறப்பு அதிகாரி கெ.ஜே.ஜேம்ஸ் தலைமையில் 960 பொலிஸார் பாதுகாப்புப் பணிகளைச் செய்து வருகிறார்கள்.

# 2012 இல் விமானப்படையில் பிரமோஸ்

## விஞ்ஞானி சிவதாணுப்பிள்ளை பேட்டி

நாகர்கோவில், ஜன. 02

2012 ஆம் ஆண்டில் இந்திய விமானப் படையில் பிரமோஸ் ஏவுகணை சேர்க்கப் படும் - என்று விஞ்ஞானி சிவதாணுப் பிள்ளை தெரிவித்தார்.

இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கழக முதன்மை கட்டுப்பாட்டாளரும், அணு விஞ்ஞானியும், பிரமோஸ் ஏவுகணைத் தலைமைச் செயல் அதிகாரியுமான ஏ.சிவதாணுபிள்ளை நாகர்கோவிலில் நேற்று முன்தினம் பேட்டியளித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இந்தியா மற்றும் ரஷ்ய கூட்டு முயற்சியில் தயாரிக்கப்பட்ட பிரமோஸ் ஏவுகணை நமது இந்திய இராணுவத்தின் தரைப்படை மற்றும் கப்பல்படை ஆகிய இரண்டிலும் முக்கிய ஏவுகணையாக திகழ்கிறது. கப்பல் படையில் இந்த ஏவுகணை சிறந்த ஆயுதமாக இருக்கிறது. இந்த ஏவுகணையை விமானப்படையிலும் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய விமானப்படையில் உள்ள சுகோய் 34 போர் விமானம் பன்முக செயற்பாடு கொண்ட விமானமாகும். எவ்வளவு உயரத்திலும் பறக்கக்கூடிய விமானமாகும். எனவே இந்த விமானங்களில் ஏவுகணையை சேர்த்தால் எதிரி எந்த மூலையில் இருந்தாலும் அவர்களை தாக்கியழிக்க முடியும்.

எனவே இந்த விமானங்களில் பிரமோஸ் ஏவுகணையைப் பொருத்தி வரும் 2011 ஆம் ஆண்டு பரிசோதனை நடத்தப்பட இருக்கிறது. அதையடுத்து 2012 ஆம் ஆண்டில் விமானப்படையிலும் இந்த ஏவுகணை சேர்க்கப் படும்.

2008 ஆம் ஆண்டுவரை கப்பல் படைக்கென்றும், தரைப்படைக்கு என்றும் தனித் தனியாக பிரமோஸ் ஏவுகணைகள் தயார் செய்யப்பட்டன. 2009 ஆம் ஆண்டில் ஒரே ஏவுகணை கப்பல் படையிலும், தரைப் படையிலும் பயன்படும் வகையில் தயாரிக் கப்பட்டன. எத்தனை அடுக்குமாடிக் கட்டடங்கள் இருந்தாலும் குறிப்பிட்ட இலக்கை மட்டும் தாக்கும் வகையில் புதிய தொழில்நுட்ப முறையில், புதிய வடிவில் ஏவுகணையைத் தயாரித்து தரைப்படைக்கு வழங்கியுள்ளோம்.

2010 ஆம் ஆண்டில் சுகோய்-34 போர் விமானங்களில் பிரமோஸ் ஏவுகணையை சேர்ப்பதற்கான முக்கிய பணிகளை மேற்கொள்வது ஹைபர்சானிக் பிரமோஸ் - 2 ஏவுகணையைத் தயாரிப்பது போன்றவை எங்களது கோரிக்கையாகும். ஐதராபாத்தில் பிரமோஸ் ஏவுகணை தயாரிப்பதற்கான ஆராய்ச்சி மையம் உள்ளது - என்றார்.

## இந்தியச் செய்திகள்

# தமிழகத்துக்கு மீண்டும் ஈழ அகதிகள் வருகை



இராமேஸ்வரம், ஜன. 02

இலங்கை தலைமன்னாரிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 2 மணிக்கு படகில் புறப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த நடராஜா (வயது - 60), விஜிதா (வயது - 30) இவரது குழந்தைகள் உட்பட 5 அகதிகள் நேற்றுமுன்தினம் அரிச்சலமுனை கடற்கரையில் வந்திறங்கினர்.

அங்கிருந்து தனுஷ்கோடிப் பொலிஸ் நிலையம் வந்த அகதிகளை, பொலிஸார் விசாரணை செய்து மண்டபம் அகதிகள் முகாம் அனுப்பி வைத்தனர்.

அகதி விஜிதா கூறியவை வருமாறு -

கணவர் ராஜ்குமார். இரண்டு ஆண்டுக்கு முன் இங்கு வந்தவர் சிறையில் இருக்கிறார் எனத் தகவல் கிடைத்தது. இலங்கையில் சண்டை முடிந்த பின்னர் முகாமில் அடைக்கப்பட்ட எங்களை, இரண்டு மாதத்திற்கு பின் இராணுவம் விடுவித்து மன்னாருக்கு அனுப்பி வைத்தது. இரண்டு மாதம் மன்னாரில் குழந்தைகளுடன் இருந்தேன். இங்கு சிறையில் இருக்கும் கணவரைப் பார்க்க நேற்றுமுன்தினம் படகில் அகதியாக வந்தேன் - என்றார்.

தமிழக அகதிகள் முகாம்களில் இருக்கும் தமிழர்கள் இலங்கைக்குச் செல்வதற்கு விருப்பம் தெரிவித்து வரும் நிலையில், நீண்ட நாள்களுக்கு பின்னர் இராமேஸ்வரத்திற்கு அகதிகள் வந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

# மீன்பிடிக் கட்டுப்பாட்டுப் பிரேரணையை எதிர்த்து அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்!



சென்னை, ஜன. 02

மத்திய அரசு கொண்டுவரத் திட்டமிட்டுள்ள மீன்பிடிக் கட்டுப்பாட்டுப் பிரேரணையை எதிர்த்து அ.தி.மு.க. சார்பில் சென்னையில் வியாழக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கச்சதீவை மீட்பது உட்பட மீனவர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கோரி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான டி.ஜெயக்குமார் தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் அவர் பேசியவை வருமாறு -

தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழில் குறித்தும், அவர்களின் ஜீவாதார உரிமைகள் குறித்தும் உணராத நிலையில் வரைவுச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த வரைவுச் சட்டம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு, அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதம் நடைபெற்றபோது தமிழகத்தைச் சேர்ந்த தி.மு.க. காங்கிரஸ் மத்திய அமைச்சர்கள் அனைவரும் ஆதரவாக கையைத் தூக்கினர். யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

ஆனால், இப்போது வரைவுச் சட்டத்துக்கு நாங்களும் எதிர்ப்பும் தெரிவிக்கிறோம் என தி.மு.க. நாடகமாடுகிறது.

தமிழகத்தில் உள்ள 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள், மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியுள்ளனர். இவர்கள் முன்பு 200 கடல் மைல் (நாட்டிகல்) வரை சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டனர். ஆனால், வரைவுச் சட்டத்தின்படி, மீனவர்கள் யாரும் 12 கடல் மைல்களுக்கு மேல் சென்று மீன் பிடிக்க முடியாது. இந்த எல்லையைக் கடந்தால் ரூ. 9 லட்சம் அபராதமும், 3 ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்படும். மீனவர்கள் ரூ. 10 ஆயிரத்துக்கு மீன்பிடித்தால் ரூபா 25 ஆயிரம்வரை அபராதம் செலுத்த வேண்டும்.

எல்லையைக் கடந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் படகுகளில் சோதனை செய்ய முற்படும் கடலோரக் காவல் படையினர் உள்ளிட்டோரைத் தடுத்தால் ரூபா 10 லட்சம் அபராதமும், 10 ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப் படும் என்று வரைவுச் சட்டத்திலுள்ளது.

இந்திய மீன் வளத்தைச் சூறையாட ஐரோப்பிய நாடுகள் சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இதற்காகத்தான் நமது பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடி எல்லையை 12 கடல் மைல்களுக்குள் கட்டிப்போட முயற்சிக்கின்றனர். நமது மீனவர்களின் நலன்களைப் பற்றி அவர்களுக்கு சிறிதும் கவலை இல்லை. ஐரோப்பிய மீன்பிடிக் கப்பல்களை அனுமதிக்கும் வர்த்தக நோக்கில் தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வர முயற்சிக்கின்றனர்.

கடந்த 3 ஆண்டுகளில் இலங்கைப் படையினரின் தொடர் தாக்குதல்களால் இதுவரை தமிழக மீனவர்கள் 360 பேர் உயிரிழந்துள்ளனர். ஏராளமான மீனவர்களின் கதி என்ன என்றே தெரியவில்லை.

ஆண்டுக்கு ரூபா 8 ஆயிரம் கோடி அளவுக்கு அன்னியச் செலாவணி ஈட்டித் தரும் மீனவர்களுக்கு, மீனவர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள ரூபா 65 கோடி கடன் சுமையை அரசு தள்ளுபடி செய்ய வேண்டும். இதை வலியுறுத்தி அ.தி.மு.க. விரைவில் தீவிர போராட்டத்தில் ஈடுபடும் - என்றார்.

# பிரியங்காவுடன் காதல் மலர்ந்தது எப்படி? ரோபேர்ட் வதேராவின் மலரும் நினைவுகள்

மும்பை, ஜன. 02

பிரியங்காவுடன் காதல் மலர்ந்தது எப்படி என்பது குறித்த மலரும் நினைவுகளை கணவர் ரோபார்ட் வதேரா வெளியிட்டிருக்கிறார்.

ராஜீவ் காந்தி - சோனியா காந்தி தம்பதியரின் மகள் பிரியங்காவை காதலித்து கடந்த 1997 ஆம் ஆண்டு பெப்ரவரி 18ஆம் திகதி மணந்தவர் ரோபார்ட் வதேரா. இவர் ஓர் தொழில் அதிபர். இந்தத் தம்பதியருக்கு ரெய்ஹன், மிரயா என்று இரு குழந்தைகள்.

இந்த நிலையில் ரோபார்ட் வதேரா ஆங்கில இதழ் ஒன்றுக்கு சிறப்புப் பேட்டி அளித்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு -

டில்லியில் பிரிட்டிஷ் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தபோதுதான் பிரியங்காவை சந்தித்தேன். என்னை விட மூன்று வயது அவர் இளையவர். அவர் என்னை விரும்புகிறார் என்று எனக்குத் தோன்றியது.

எங்களுக்குள் நட்பு வளர்ந்தது. நிறைய விடயங்கள் பேசினோம். நெருக்கமானோம். இதனை மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பியதில்லை. திருமணம் செய்து கொள்ள முடிவு எடுத்தோம். இப்படித்தான் செய்துகொள்ள வேண்டும் என்று எந்தவொரு திட்டமும் இல்லை. சாதாரணமாகத்தான் அது பற்றி பேசினோம். எங்களது (இருதரப்பு) குடும்பத்தினர் சந்தித்தனர் - சம்மதித்தனர்.



பிரியங்காவிடம் எனக்குப் பிடித்தது அவருடைய எளிமைதான். சந்தித்த முதல் நாளிலேயே அவரில் நான் கொண்டுள்ள உரிமையை மற்றவர்கள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திவிட என்னை ஒரு கருவியாக உபயோகித்து விடக்கூடாது என்பதில் தெளிவாக இருந்தேன். எனக்கான எல்லையை புனிதத்துவமாக கருதி, அதைக்காப்பதில் கவனமாக இருந்தேன்.

முக்கியமான பேச்சுகளில் நான் பார்வையாளராகவே செல்கின்றேன் அவர்களின் விடயத்தில் தலையிடுவதில்லை. அதேபோன்று என் தொழிலில் அவர்களும் தலையிடமாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையாளர்களை கொலை செய்தோரை பதவிக்கு வந்ததும் சிறையில் தள்ளுவேன்

## 24 மணிநேரத்தில் இது நடக்கும் என்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஜன.2

பத்திரிகையாளர்களைக் கொலை செய்தவர்கள் யார்? அவர்களைக் கொலை செய்வதிலும் அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதிலும் பின்னால் இருந்து செயற்பட்டவர்கள் யார்?

" நான் பதவிக்கு வந்தால் 24 மணி நேரத்துக்குள் விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்டவர்களை உடனடியாகக் கைது செய்ய ஏற்பாடு செய்வேன்"

இவ்வாறு கூறியுள்ளார் எதிர்க்கட்சிகளின் சார்பில் பொதுவேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜெனரல் சரத் பொன்சேகா.

கொழும்பிலுள்ள தமது இல்லத்தில் அரச சார்பு ஊடகப் பணிப்பாளர்களை நேற்றுமுன்தினம் சந்தித்துப்பேசியபோது இந்தக் கருத்தை அவர் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களை நான்தான் கொலை செய்தேன் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் இந்தச் செயற்பாடுகளின் பின்னால் யார் இருந்துள்ளார்கள் என்பதை நான் காட்டித் தருவேன். பதவிக்கு வந்தவுடன் 24 மணி நேரத்துக்குள் அவர்களைச் சிறையில் அடைப்பேன்- என்று ஜெனரல் பொன்சேகா கூறினார்.

பதவிக்கு வந்தால் அரச ஊடகங்களை அரசியலில் இருந்து விடுவிப்பார் என்றும் அவர்களை சுதந்திரமாக இயங்க அனுமதிப்பார் என்றும் பொன்சேகா தெரிவித்திருக்கிறார்.

தாம் பதவிக்கு வந்தால் இராணுவ ஆட்சியைக் கொண்டு வருவார் என்று கூறப்படுவதை மறுத்த அவர், அப்படியான ஆட்சியை உருவாக்க அரசாங்கமே முயன்று வருகிறது என்றார். (ஒ-ப)

## விரிவுரையாளருக்கான நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.2

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் சமூகவியல் துறைக்கு ஒப்பந்த அடிப்படையில் விரிவுரையாளராகப் பணியாற்றுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொக்குவிலில் உள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் என்று இணைப்பாளர் அறிவித்துள்ளார். (07)

## இரு பாடசாலைகள் மீண்டும் பழைய இடங்களில் இயங்கும்

யாழ்ப்பாணம்,ஜன.02

அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருந்ததால் மூடப்பட்டு தனியார் கட்டடங்களில் இயங்கிய தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த இரு பாடசாலைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் பழைய இடங்களிலேயே மீளச் செயற்படவுள்ளன.

மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, கொடிகாமம் அ.த.க. பாடசாலை ஆகியவையே மீண்டும் பழைய இடங்களில் இயங்கவுள்ளன. (ஒ-207)

## முதலாம் தவணைக்காக பாடசாலைகள் திங்களன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன. 2

இந்த வருடத்திற்கான பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகள் நாளைமறு[illegible] திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. [illegible]ம் ஆண்டிற்கான முதலாம் தவ[illegible] அனைத்துப் பாடசாலைகளும் [illegible]டவுள்ளன.

[illegible]லாம் தவணைக்காக ஜனவரி [illegible]4ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் [illegible] திகதி வரையும் நடைபெறுவுள்[illegible]. ஏப்ரல் 9 ஆம் திகதி முதலாம் தவணைக்கான விடுமுறை விடப்பட்டு, இரண்டாம் தவணைக்கான கற்றல் செயற்பாடுகள் ஏப்ரல் 22 ஆம் திகதி ஆரம்பமாகி ஓகஸ்ட் 6 ஆம் திகதி வரையும் நடைபெற்று, ஓகஸ்ட் 6 ஆம் திகதி இரண்டாம் தவணைக்கான விடுமுறைக்காக மூடப்பட்டு மீண்டும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி மூன்றாம் தவணைக்காக பாடசாலை ஆரம்பமாகி டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை மூன்றாம் தவணைக்கான கற்றல் செயற்பாடுகள் நடைபெறவுள்ளன. (01-16)

# அமைச்சர் சந்திரசேகரன் நேற்று மாரடைப்பால் மரணமானார்

## திங்களன்று தலவாக்கலையில் இறுதிக்கிரியை

கொழும்பு, ஜன. 2



மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், சமுதாய அபிவிருத்தி மற்றும் சமூக அநீதி ஒழிப்பு அமைச்சருமான பெரியசாமி சந்திரசேகரன் (வயது - 53) நேற்று விடிகாலை மரணமானார்.

மாரடைப்பால் பாதிக்கப்பட்ட நிலையில் நேற்றுக்காலை கொழும்பு தனியார் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர், வழியில் மரணமானார்.

1957 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி தலவாக்கலையில் பிறந்த சந்திரசேகரன், ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியில் தமது கல்வியைப் பெற்றுக்கொண்டார்.

1977ஆம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் அரசியலில் நுழைந்த அவர், 1985 ஆம் ஆண்டு இ.தொ.காவிலிருந்து விலகி மலையக மக்கள் முன்னணியை உருவாக்கினார்.

1994ஆம் ஆண்டு ம.ம.மு. சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார்.

ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பின்னர் காலப்போக்கில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் அவர் ஆதரவு வழங்கினார்.

1993ஆம் ஆண்டு காவல்துறையினரினால் கைதுசெய்யப்பட்ட அவருக்கு அச்சம்பவமே அதிக வாக்கைப் பெற உறுதுணையாகவிருந்தது.

1994 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவான சந்திரசேகரன் தொடர்ந்து பல அமைச்சுப் பதவிகளை வகித்துவந்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குகிறார் என ஹற்றனில் இடம் பெற்ற கூட்டத்தில் அறிவித்திருந்த அவர், மலையக மக்கள் சார்பில் பிரதான கோரிக்கைகளையும் ஜனாதிபதியிடம் முன்வைத்திருந்தார்.

அவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனர்.

மறைந்த அமைச்சரின் உடல் இன்று நாடாளுமன்றக் கட்டடத்தில் காலை 10.30 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பின்னர் ஹேமச்சந்திர மாவத்தை, தலவாக்கலையில் உள்ள அவரது இல்லத்திற்கு அது எடுத்துச் செல்லப் படும்.

ஞாயிற்றுக்கிழமை முழுவதும் அமைச்சரின் உடல் மக்கள் அஞ்சலிக்காக அங்கு வைக்கப்படும். (அ-சி)

# வெவ்வேறு இடங்களில் இருந்து நால்வரது சடலங்கள் மீட்பு!

## கிணற்றில் தவறி வீழ்ந்ததாகத் தகவல்

யாழ்ப்பாணம், ஜன.2

வெவ்வேறு இடங்களில் கிணற்றுக்குள் தவறி விழுந்து மரணமானதாகக் கூறப்படும் 4 சடலங்கள் மீட்கப்பட்டன.

நேற்றையதினம் அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நற்குணன் அம்பிகா (வயது 23) கிணற்றில் தண்ணீர் அள்ளியவேளை தவறிவிழுந்து மரணமானார் எனக் கூறப்பட்டது.

இவரது சடலம் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

கோப்பாயில் நடந்த சம்பவத்தில் கோப்பாய் மத்தி, மாரியம்மன் வீதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஜேசுராசா (வயது58) என்பவரது சடலம் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டு, கோப்பாய் பொலிஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் குடத்தனை மாளிகைத்திடல் முகாம் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் அதே இடத்தைச்சேர்ந்த தி.விஜயேந்திரன் (வயது22) கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டு பருத்தித்துறைப் பொலிஸாரால் மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கரணவாய், மண்டான் பகுதியிலும் முருகேசு செல்வராசா (வயது 45) என்பவரின் சடலம் கிணற்றில் இருந்து மீட்கப் பட்டுள்ளது. அவரது சடலம் நெல்லியடிப் பொலிஸாரால் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு, விசாரணையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஒ-7-16-78)

## மஹாஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் மஹாஜன சம்பத 2194 ஆம் இலக்கச் சீட்டிழுப்பின் அதிர்ஷ்ட எண்கள் U755204 எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் இடமிருந்து வலமாக சுப்பர் பரிசான ஒரு கோடி ரூபாய் வெல்லப்படவில்லை.

7 5 5 2 0 4 என்ற இலக்க வரிசைக்கான முதலாவது பரிசாக இருபது லட்சம் ரூபா இருவருக்கு கிடைத்துள்ளது.

5 5 2 0 4 என்ற இலக்க வரிசைக்கான இரண்டாவது பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா 13 பேருக்கு கிடைத்துள்ளது.

5 2 0 4 என்ற இலக்க வரிசைக்கான மூன் றாவது பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா 131 பேரால் வெல்லப்பட்டுள்ளது.

2 0 4 என்ற இலக்க வரிசைக்கான நாலாவது பரிசாகத் தலா ஆயிரம் ரூபா 1,3[illegible] பேருக்கு கிடைத்துள்ளது.

0 4 என்ற இலக்க வரிசைக்குரிய ஐந்தாவது பரிசாகத் தலா நூறு ரூபா 13,562 பேரால் வெல்லப்பட்டுள்ளது.

4 என்ற இலக்க வரிசைக்குரிய ஆறாவது பரிசாகத் தலா இருபது ரூபா 1,33,795 பேருக்கு கிடைத்துள்ளது.

வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாக வரிசைப்படுத்தப்பட்ட 7 5 5 2 0 இலக்கத்துக்கு ஏழாவது பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா 17 பேருக்குக் கிடைத்துள்ளது.

7 5 5 2 என்ற இலக்கத்துக்கு எட்டாவது பரிசாகத் தலா ஆயிரம் ரூபா 135 பேருக்கு கிடைத்துள்ளது.

7 5 5 இலக்கத்திற்கு ஒன்பதாவது பரிசாகத் தலா நூறு ரூபா 1,347 பேருக்குக் கிடைத்துள்ளது. 7 5 என்ற வடிமைப்பிற்கு பத்தாவது பரிசாகத் தலா ஐம்பது ரூபா 13,397 பேருக்குக் கிடைத்துள்ளது.

U என்ற இலக்கத்திற்கு பதினோராவது பரிசாகத் தலா இருபது ரூபா 53,621 பேருக்கு கிடைத்துள்ளது.

## சந்திரசேகரனின் மனைவி ம.ம.முவின் புதிய தலைவர்

கொழும்பு, ஜன.2

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் காலமானதை அடுத்து அந்தக் கட்சியின் தலைவராக சந்திரசேகரனின் மனைவி சாந்தினி தேவி சந்திரசேகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் தீர்மானங்கள் யாவும், மத்திய குழுவால் அங்கீகரிக்கப்பட்டு எடுக்கப்படும் என்ற முடிவும் நேற்றுக் கூடிய கட்சியின் செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் உயர் மட்ட அரசியல் குழு நேற்று கொழும்பில் கூடி ஏகமனதாக இந்தத்தீர்மானத்தை எடுத்துள்ளது என மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

## தமிழ் இளைஞன் மரணத்தில் சந்தேக நபரான பொலிஸ் சிறைச்சாலையில் மரணம்

கொழும்பு, ஜன. 2

பம்பலப்பிட்டிக் கடற்பகுதியில் மனநலம் குன்றிய தமிழ் இளைஞன் ஒருவன் பொலிஸாரின் தாக்குதலினால் கடலுக்குள் இருந்து மீளமுடியாமல் நீரில் மூழ்கி இறந்தமை தொடர்பான, பிரதான சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் விளக்கமறியலில் இருந்தபோது சிறைச்சாலையில் காலமானார்.

மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த திமுது சொலமன்ஸ் என்ற இக்கான்ஸ்டபிள் நெஞ்சுவலி காரணமாக சிறைச்சாலை மருத்துவப் பிரிவில் சேர்க்கப்பட்டவேளை அங்கு உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## அதிபர்கள் நாளை அமைச்சருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜன.2

கடமை நிறைவேற்றும் அதிபர்கள் நாளை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திக்கவுள்ளனர்.

எனவே கடமை நிறைவேற்றும் அதிபர்கள் அனைவரையும் நாளை காலை 8மணிக்கு ஆரியகுளம் சந்திக்கருகிலுள்ள புதிய உயர் கல்லூரியில் ஒன்று கூடுமாறு யாழ். மாவட்டக் கடமை நிறைவேற்றும் அதிபர் சங்கத் தலைவர் நா. கண்ணதாசன் கேட்டுள்ளார்.

சம்பந்தப்பட்டவர்களின் சுயவிவரங்கள் அடங்கிய இறுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அமைச்சரிடம் வழங்கப்படவுள்ளது. கடந்த 28 ஆம் திகதி யாழ்.மாவட்ட கடமை நிறைவேற்றும் அதிபர் சங்கம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ-07)

# தமிழர் பிரச்சினைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைப் பேணிப் பாதுகாத்து, வளர்ச்சியடையச் செய்து, தம் தனித்துவத்தை மேம்படுத்துதல் மற்றும் வெளிப்படுத்துவதற்கும் அவர்களுக்கு வாய்ப்பளித்தல்.

இ) சகல பிரஜைகளும் எதுவித பேதமுமின்றி, சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் நியதி பேணப்பட்டு முழுமையாக மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளை அனுபவிக்கும் சுதந்திரம்.

ஈ) தமது விருப்பத்தின் பிரகாரம் தான் விரும்பிய அரச கரும மொழியில் கரும மாற்றுவதற்கான உரிமை.

உ)சகலரும் சமமாக மதிக்கப்படுவதை ஊக்குவித்தல்.

✱ பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கும் அதேவேளை, சகல பிரஜைகளுக்கும் தத்தமது மதங்களை சுதந்திரமாகவும், தடையின்றியும் பின்பற்றும் உரிமையை ஊக்குவித்தல்.

✱ ஓர் இனத்தை அல்லது மதத்தைவிடவும் கூடுதலான சலுகையை மற்றொரு மதத்திற்கோ அல்லது சமூகத்திற்கோ காட்டாதிருத்தல்.

✱ ஓர் இனத்தை அல்லது மதத்தை விடவும் கூடுதலான பொறுப்புகளை மற்றுமொரு இனத்திற்கோ அல்லது மதத்திற்கோ வழங்காதிருத்தல்.

ஊ) புதிய நாடாளுமன்றத்தின் மூலம் இலங்கை வாழ் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய அரசியல் யாப்புச் சட்டம் ஒன்றை சட்டமாக்கும் வரை நடைமுறையிலுள்ள அரசியல் யாப்புச் சட்டத்தை அமுல்படுத்தல்.

எ) மாகாண மற்றும் அங்கு வாழும் இனங்களை நிலையான பன்முக ஜனநாயகத்தின் சரத்திற்குப் பங்காளிகளாக்குவதனை ஊக்குவிப்பதனூடாக சகல பிரஜைகளுக்கும் மத்திய,மாகாணசபை மற்றும் உள்ளூராட்சிமன்ற மட்டத்தில் தேசத்திற்கு உயிரூட்டும் செயற்பாட்டால் முழுமையாக இணைந்து செயற்படுவதனை உறுதிப்படுத்தல்.

ஏ) பிரிக்கப்படாத இலங்கைக்குள் சிங்கள,தமிழ்,முஸ்லிம், பறங்கியர்கள் ஆகிய சகல இனத்தவர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் முறை ஒன்றை ஏற்படுத்தல். போதியளவு நிதி மற்றும் நீதி அதிகாரம் உட்பட மாகாணத்தில் சுபீட்சம் மற்றும் நல்லாட்சிகளைக் கொண்டுநடத்துவதற்கும் சமூகப் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தேவையான பரவலான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குதல்.

- என்று கூறப்பட்டுள்ளது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளம், வவுனியா பகுதிகளில் வாக்களிக்க இடம்பெயர்ந்த 54 ஆயிரம் பேர் விண்ணப்பம்

கொழும்பு, ஜன. 02

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக வவுனியா, புத்தளம் பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்த மக்களில் 54 ஆயிரம் பேரே விண்ணப்பித்துள்ளனர் என உதவித் தேர்தல் ஆணையாளர் டபிள்யு. டபிள்யு. எம்.தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக வடக்கின் பல பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்ட பின்னர் கொழும்பு திரும்பியுள்ள அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள மக்களில் வாக்களிப்பதற்கு தகுதிபெற்றவர்கள் 2 லட்சத்து 75 ஆயிரம் பேர் உள்ள போதிலும் வவுனியாவிலிருந்து 23 ஆயிரம் விண்ணப்பங்களும் புத்தளத்திலிருந்து 31 ஆயிரம் விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்தப் பகுதிகளில் இல்லாதபோதிலும் வாக்களிப்பதற்காக கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும். முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்காக வவுனியாவில் கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இதுவரை 151 தேர்தல் வன்முறைகள் பதிவு

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக இதுவரை 151 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் 18 வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

சில அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் மேற்கொண்டு வரும் பிரசார நடவடிக்கைகளின்போதே இவ்வாறான வன்முறைகள் இடம்பெறுகின்றன எனத் தெரிவித்த அவர் - இந்த ஆதரவாளர்கள் பெரும்பாலும் மது அருந்திவிட்டு தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதே வன்முறைகளுக்கு பிரதான காரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

(அ-சி)


NEW SCIENCE CENTRE
வெலிங்டன் சந்தி, யாழ்நகர்
PHYSICAL
Sat., Sun. - 12.45 - 2 p.m.
IN ORGANIC
Sat., Sun. - 2 - 3 p.m.
ORGANIC
Sat., Sun. - 4.30 - 5.30 p.m.
BY: அன்பு

கலைப் பிரிவு | A/L 2012
யாழ்.நகரில் நட்சத்திர ஆசிரியர் குழாம்.....
பொருளியல்: திரு.N.Bகஜீதரன்
தமிழ்: திரு.சத்தியவேந்தன்
புவியியல்: திரு.ஜெயகணேஷ்
கிறிஸ்தவம்: திரு.வசந்தன்
அரசியல்: திரு.திருச்செந்தூரன்
அளவையியல்: திரு.சிவா
நாடகமும் அரங்கியலும்: திரு.மயூரன்
ஆரம்பம் 04.01.2010 திங்கள் பி.ப. 4 மணி
BRAIN POWER INSTITUTE
(சின்னக்கடை சந்தை அருகில்)


# புதுவருடக் கொண்டாட்டங்களின் போது பெரும் எண்ணிக்கையினர் விபத்துக்குள்ளாகினர்

புதுவருடக் கொண்டாட்ட சாகஸங்களில் சிக்கி நூற்றுக்கணக்கானோர் விபத்துக்கு உள்ளாகியுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் மட்டும் விபத்துக்குள்ளான 203 பேர் தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டனர்.

மேலும் 61 பேர் வாகன விபத்துக்குள்ளானவர்கள் எனவும் கடந்த வருட ஆரம்பத்தைவிட இவ்வருட ஆரம்பத்தில் அதிகளவான வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இக்காலப்பகுதியில் 143 பேருக்கு களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் அணில் ஜயசிங்க தெரிவித்தார்.

குருநாகல் முத்தெடுகல ரயில் பாதைக்கு அருகில் ஏற்பட்ட வாகன விபத்தில் காயமடைந்த பலர் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். லொறி - பஸ் மோதியே இந்த விபத்து நேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## தமிழ்க்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் எம்.பிக்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோரைச் சந்தித்துப் பேசியபோதே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் இருவரும், நாம் பட்டம் பதவிகளுக்காக அரசியலில் ஈடுபடவில்லை.

தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே நாம் செயற்படுகின்றோம் - என்று கூறியுள்ளனர்.

## காணாமற்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டரங்கில் முற்பகல் 10 மணிக்கும் -

அதேதினம் வவுனியா நகரசபை மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கும் - காணாமற் போனோரின் உறவினர்களை மனோகணேசன் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயவிருக்கிறார்.

சம்பந்தப்பட்டவர்களைக் குறிப்பிட்ட இடங்களுக்கு வந்து தமது பிரச்சினைகளைத் தெரிவிக்குமாறு ஜனநாயக மக்கள் முன்னணி கோரியுள்ளது. (ஒ-01)


கடந்த ஆண்டு எம்மிடம் கற்ற மூன்று மாணவர்கள் 3A!
12 மாணவர்கள் பல்கலை செல்கின்றனர்!!
நீங்களும் எம்முடன் இணைந்து உயர்வடையுங்கள்
A/L 2010 ஆரம்பம் 04.01.2010 திங்கள் பிற்பகல் 3.30 மணி
A/L DAY CLASS நடைபெற்று வருகிறது.
மதுரம் இன்ஸ்ரியூட்,
உயர்கல்விப் பிரிவு, கட்டப்பிராய்.

நியூ கேம்பிரிச் (அளவெட்டி)
புதிய நிர்வாகம் | புதிய ஆண்டு | புதிய உதயம்
* தரம் 1- O/L புதிய ஆசிரியர் குழாமின் ஒன்றிணைந்த சேவை.
* நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு அனுமதி முற்றிலும் இலவசம்
* சிறப்பு வகுப்பு தரம் 5 "ஆசிரியர் அன்பழகனின் வழிகாட்டலில் பரீட்சை"


## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு தியாகராசா
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், துறைமுக அதிகாரசபை)



எழுவைதீவைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு தியாகராசா அவர்கள் 29.12.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - பொன்னம்மா தம்பதியினரின் புத்திரனும், திலகவதியின் பாசமிகு கணவரும், நித்தியகல்யாணி (கனடா), மைதிலி (பிரான்ஸ்), இந்துமதி (பிரான்ஸ்), கமலவேணி (ஆசிரியை, ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபநேசன் (கனடா), சிவகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயதேவி பாலன் மற்றும் முரளிமோகன் (அதிபர், உடுவில் அ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தரங்கிதா, மிதுஜனா, கீர்த்தனா, மாதுர்யா, மிருணாளன், மாதுளா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம், பரஞ்சோதி தம்பையா, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வேதநாயகி, ஞானாம்பிகை (கனடா), சகுந்தலாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2010) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
(92098) தொ.பே.021 321 6618


தொழிற்பயிற்சிகள்
* Mobile Phone Repairing.
* ஏயர் கொண்டிசனிங்.
* எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங்
* றேடியோ, ரெலிவிசன், வீடியோ செற் றிப்பியறிங்.
* Motor bycycle Repairing.
சகல பயிற்சிகளும் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
பயிற்சிகள் ஆரம்பம்: 06/01/10 (கிழமை நாள்கள்)
03/01/10 (சனி, ஞாயிறு)
விவரங்களிற்கு,
JAFFNA TECHNICAL INSTITUTE
இல.46, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0718561654, 0779254078.
(தி/563806)

NEW SCIENCE CENTRE
Clock Tower road, Jaffna (வெலிங்டன் சந்தி)
A/L 2012 | Tamil medium
Chemistry - G.Beno Rajothayan B.Sc.
G.B.Rajothayan
* ஆரம்பம்: இன்று 4-5 p.m
Physics - N.Edison B.Sc.
* ஆரம்பம்: இன்று 3-4 p.m

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=
(தி/563536)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
34 ஆவது வருட சேவை
A/L DAY CLASS
கலை வகுப்புகள்
Tamil திரு. குழந்தை
Eco. திரு. B. கஜீதரன்
Log. திரு. R.S. சந்திரன்
H.C திரு. N.T. தரன்
Geo. திரு. சுரேன்
Hist. திரு. தாஸ்
Hin. திரு. N.T. தரன்
Pl. sc. திரு. ஸ்ரீரங்கநாத்
Chi. திரு. யூட்
Dram. திரு. மயூரன்
ஆரம்பம் 04.01.2010.
வர்த்தக வகுப்புகள்
Eco. திரு. B. கஜீதரன்
Acc. திரு. P. பகீரதன்
B.st. திரு. யசோ.

SM CONSULTANT SERVICE
UK STUDENT VISA
யாழ் மாணவர்களுக்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் மக்களின் நன் மதிப்பைப் பெற்ற முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்.
பெப்ரவரி, ஏப்ரல் மாதங்களுக்கான பிரவேசத்துக்குரிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களை சமர்ப்பித்து தற்போது அமுலில் உள்ள இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களை பெற்றுக்கொள்ளுங்கள்.
சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக்கொள்ளுங்கள்!!!
STUDY IN MALASIYA
குறைந்த கட்டணத்தில் மலேசியர்வில் பட்டப்படிப்பு (3 வருடங்கள்).
விரும்பின் 3ம் வருடம் லண்டனில் பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்யும் வாய்ப்பு.
மலேசியாவில் கல்வி கற்கையில் பகுதி நேர வேலைவாய்ப்பு.
மலேசியாவில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்தால் மத்திய கிழக்கு நாடுகளில் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் வேலை பெறும் வாய்ப்பு.
STUDY IN EAST EUROPE-UKRAINE-MBBS/MD
Lugansk State Medical University(Ukraine) இல் இணைந்து சிறிலங்கா Medical Concil லினால் அங்கிகரிக்கப்பட்ட டாக்டராக நீங்களும் வர விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
G.C.E. O/L தகமையுடன் 7 வருடங்கள் கற்கைநெறி.
G.C.E. A/L தகமையுடன் 6 வருடங்கள் கற்கைநெறி.
உணவு, விடுதி வசதி அனைத்தும் உட்பட......
அனைத்து விபரங்கட்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணிமுதல் மாலை 7.00 மணி வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துச் கொள்ளலாம்.
அனைத்து சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.
தொடர்புகளுக்கு:
0312223818, 0315673818, 0774528818
e.mail: mg1404_2009@yahoo.com
இல:148,கோவில் வீதி (புனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.

DMI JAFFNA
A/L 2012
ஜனவரி - 09 காலை 9.00 மணி
கலை, வர்த்தக பிரிவுகள்

சனச அபிவிருத்தி வங்கியின் அழைப்பு
சனச அபிவிருத்தி வங்கி யாழ்.நகரில் உதயமாவதை முன்னிட்டு நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் விஷேடபூஜை சனச இயக்கத் தலைவர் கலாநிதி P.A.கிரிவந்தெனிய அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.
காலம்: 04.01.2010 (திங்கட்கிழமை)
நேரம்: காலை 7.30 மணி
சகல கூட்டுறவாளர்கள், சனச சிக்கன கடன் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், பொதுமக்கள், அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
இல.212 ஸ்ரான்லி றோட். யாழ்ப்பாணம். (92064)
மேலதிக தொடர்புகளுக்கு: 0772092164, 0776149878.
முகாமையாளர், ஊழியர்கள், சனச அபிவிருத்தி வங்கி.
(92064)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org